விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை (25.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 311

அபாய கட்டத்தில் வடக்கு

## வல்வை, சாவகச்சேரி, கிளிநொச்சியைச் சேர்ந்த 3 பேருக்கு கொரோனா

**(யாழ்ப்பாணம்)**

**வடமராட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொறியியலாளர், சாவகச்சேரியைச் சேர்ந்த பொறியியலாளர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவருடன் சேர்த்து மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் வவுனியா நெடுங்கேணி வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டவர்களாவர்.**

வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் அறிவுறுத்தலில் கடந்த 21ஆம் திகதி வவுனியா - நெடுங்கேணி வீதிச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் சிலரது மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது மூன்று பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. பதுளையைச் சேர்ந்த ஒருவர் உட்பட தென்னிலங்கையைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

அதனால் மூவருடன் வவுனியா - நெடுங்கேணி வீதிச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்ட அனைவரும் ➤15

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி நாளை வெளியாகும்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் நாளை திங்கட்கிழமை வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ➤15

## முல்லை தனிமைப்படுத்தலில் 59 பேருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின புதுக்குடியிருப்பு 68ஆவது படைப பிரிவினுடைய திம்பிலி பகுதியில் ➤15

## கொரோனாவினால் 15 ஆவது நபரும் நேற்று உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் 15ஆவது கொரோனா தொற்று நோயாளியின் மர ➤15

## ஒரே குடும்பத்தில் 5 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

ஹொரண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர்கொரோனா ➤15

### கொரோனா அறிகுறி தென்பட்ட பின்

## பணியாளரை பணியில் ஈடுபட அழுத்தம் கொடுக்க முடியாது

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கான குணங்குறிகள் தென்பட்ட பின்னர் பணியாளர் ஒருவரை பணிகளில் ஈடுபடுமாறு அழுத்தம் கொடுக்க முடியாது என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுற்றாடல் நிபுணரும் சமூக வைத்திய ஆலோசகருமான வைத்திய கலாநிதி இனோகா சுரவீர இந்த வலியுறுத்தலை தொழில் ➤15

## பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்து மாணவன் சடலமாக மீட்பு

### கிளிநொச்சி தருமபுரத்தில் சம்பவம்

(தருமபுரம)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணறு ஒன்றில் இருந்து மாணவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த மோகநாதன் தர்சன் (வயது-18) என்ற தருமபுரம் மத்திய கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவனே உயிரிழுந்தவராவார். ➤15

## 5 மாவட்டங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் முழு நாட்டுக்குமே அபாயம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் வேகமாக பரவும் கொரோனா வைரஸ் பரவலைக் குறைப்பதற்காக 5 மாவட்டங்கள் தொடர்பாக உடனடியாக முடிவெடுக்குமாறு அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் கொரோனா கணிசமாக பரவி வருவதாக வைத்தியர் ஹரித அலுத்ஜே சுட்டிக் காட்டினார். ➤15

## யாழ்.போதனாவின் மருத்துவக் கிளினிக் புதிய இடத்துக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பெரும் மருத்துவக் கிளினிக் அனைத்தும் நாளை திங்கட்கிழமை முதல் விக்டோரியா. வீதியில் அமைக்கப் ➤15

### தொற்றுக்குள்ளான சாவகச்சேரி யுவதி சென்றதால்

## கிளிநொச்சி மலையாளபுரத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லமும் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, நெடுங்கேணி வீதி அபிவிருத்தி தனியார் ஒப்பந்த நிறுவனத்தில் பணியாற்றிய யாழ்ப்பாணம், கிளிநொச்சியை சேர்நத மூவர் நேற்று கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பொறியியலாளர்களும் உள்ளடங்குவர். அவர்களும் நெடுங்கேணி மாகா நிறுவனத்தில் பணியாற்றியவர்கள்.

சாவகச்சேரி பகு ➤15

## கிழக்கில் 27 பேருக்கு கொரோனா

### பலர் தலைமறைவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஒரே நாளில் 27 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ➤15

## யாழ்.தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பியவர் ஊர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

### பிடித்துக் கொடுத்த நபர்களை தனிமைப்படுத்திய சுகாதாரத் துறையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் நேற்று மாலை தப்பியோடிய நிலையில் அப்பகுதியை சேர்ந்த மக்களினால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார்.

இதனால் தப்பியோடிய நபரை பிடித்த அனைவரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கையை சுகாதார துறையினரும் பொலிஸாரும் முன்னெடுத்துள்ளனர்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் தனி ➤15

## நேற்றும் நாட்டில் 368 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 368 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த தகவலை இராணுவத் தளபதி வெளியிட்டுள்ளார்.

இதன்மூலம் மினுவாங்கொட கொரோனா வைரஸ் பரவல் கொத்தணியை அடுத்து 4 ஆயிரத்து 050 ➤15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

Computer, Computer Table, Chairs (**DAMRO**) and Ceiling Fitting.

(4129)

**தொடர்பு : 077 108 3483**

## வேலை வாய்ப்பு

NGC நிறுவனத்துக்கு ஆர்வமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு

(C-580)

**077 922 7102, 021 790 4574**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(4464)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

TERMITE.COM

Got pests? Get active

**நாட்டினதும் நாட்டு மக்களுக்குமான மகத்தான செயற்பாடு.**



**கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து நமது நாட்டைப் பாதுகாப்போம்!**

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நமது நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் நோக்கத்தில் நமது நிறுவனமானது..
**வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள், ஹோட்டல்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடுகின்ற பொது இடங்கள் ( ஆலயம், நூலகம், பொதுச்சந்தை )**
ஆகியவற்றுக்கான தொற்று நீக்கும் செயற்பாட்டினை துரித கதியில் குறைந்த செலவில் செய்து வருவதனால் நீங்கள் உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

(4462)

**Termite.com (pvt)Ltd.**

No. 06, Railway Lane, Chundikkuli, Jaffna.

T.P : 021 492 7626, 021 493 0011
Mobile : 076 315 6802, 077 758 3483


# சேவை நலன் பாராட்டு

Congrats!

## செல்வி தாமு சற்குணநாயகி



சேவைக்காலம்
01.09.1992
-
25.10.2020

25.10.2020 அன்று ஓய்வு பெறும் எமது பாடசாலை ஆசிரியரான செல்வி தாமு சற்குணநாயகி அவர்களது ஓய்வுக் காலத்தில் தன் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடன் சந்தோசமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ அளவெட்டி தெற்கு R.C.T.M.S

(4457)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இணை அதிபர்

## திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன் ( SLEAS )

அவர்களின்

# 60 ஆவது அகவை தின நல்வாழ்த்துகள்



Best Wishes

**வாழ்த்துப் பா**

கலாசாலை விருட்சமாய் நிழல்தந்த சக்தி
நிலாப்போல முகங்கொண்ட நினதன்பு மற்றும்
துலாக்கோலாய் நீதி கொள்கின்ற நெஞ்சம்
தலா நினைவில் கொள்வோம் தாயேநீ வாழ்க

தளராத நெஞ்சம் தகைசான்ற அறிவும்
மலராக மற்றவரை மதிக்கின்ற பண்பும்
உளமார உடற்கல்வி ஊட்டிடும் தொண்டும்
வளமாக உந்தன் வரமாகக் கண்டோம்

இலங்கை வேந்தனின் இணையாக வாழ்க
நலங்கள் ஓங்கவே நற்தொண்டு தொடர்க
இலங்கு தமிழினியின் இசைகள் பலகண்டு
நிலங்கொள் பயனாக நின்சேவை தருக

(C-577)


**25.10.2020**

வாழ்த்துவோர் :
**விரிவுரைத் தோழமைகள்,**
பலாலி ஆசிரிய கலாசாலை.

# மரண அறிவித்தல்

## முத்துச்சாமி சண்முகதாசன்

(ராசன்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராசன் என அன்பாக அழைக்கப்படும் சண்முகதாசன் அகால மரணமாகி விட்டார்.

அன்னார் முத்துச்சாமி - தவமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் இந்திரகுமாரி (பிரான்ஸ்), இதயகுமாரி, வசந்தகுமாரி, நாகேஸ்வரி, புனிதவதி (பிரான்ஸ்), இராசகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகதாசன் (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், தனபாலசிங்கம், வசந்தகுமார், பாலகுமார் (பிரான்ஸ்), விஜயசங்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நல்லையா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் பிரசாந்தி, றதீஷ்குமார், காலஞ்சென்ற பவித்திரா மற்றும் பகீரதன், கௌதமன், சிந்துஜா, டினோஜா, டினோஜன், சுவேதா, பர்மினி, மேகலா, நிஷாந்தினி, மேகவதனி, பிரசாந், பிரதாப், மிதுர்லா, அபிஷா, நிவேதா, பிரணவன், வித்தியா, அர்ச்சனா, லக்ஷயன், கிஷான் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(C-578)

இல. 45/2, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

தகவல்:-
குடும்பத்தினர்

# விஜேதாச ராஜபக்ஷ போன்றோரின் வார்த்தைகளை நம்ப முடியாது

## முருத்தெட்டுவே ஆனந்ததேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் நாராஹென்பிட்டி அபயராம விகாரைக்கு வந்து, தன்னை சந்தித்து, இந்தத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதாக கூறிய விஜேதாச ராஜபக்ஷ, அதற்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கடும் அதிருப்தியில் உள்ளார்.

தனது நிலைப்பாட்டை மாற்றிய விஜேதாச ராஜபக்ஷ போன்றவர்களின் வார்த்தைகள் மீது எவ்விதத்திலும் நம்பிக்கை வைக்க முடியாது என ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவது ஜனாதிபதி தனது கைகளாலேயே தனது கழுத்தை அறுத்துக்கொள்வதற்கு ஈடானது என விஜேதாச ராஜபக்ஷ கூறியிருந்ததுடன் அந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராக ஜனாதிபதிக்கு நீண்ட கடிதம் ஒன்றையும் அனுப்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில்சேவைகளில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன்களை மேம்படுத்துவதற்காகவும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, அரச நிறுவனங்களில் கலாசார விடயங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடரினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போட்டிகள் அனைத்தும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடத்தப்படவுள்ளன.

இதன்படி, சிறுகதை, சிறுவராக்கம், பாடலாக்கம், கவிதையாக்கம், சித்திரம் மற்றும் குறுநாடகம் போன்ற பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

குறித்த போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் அனைவரும் போட்டிகளுக்கான நிபந்தனைகளை பின்பற்றி, உருவாக்கப்பட்ட ஆக்கம் மற்றும் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி, நிறுவனத் தலைவரின் விதப்புரையுடன், "அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் - 2020" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பப் படிவத்தைச் செயலாளர், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 8 ஆம் மாடி, செத்சிறிபாய முதலாம் கட்டடம், பத்தரமுல்லை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலதிக தகவல்களைப் பெற 011 286 1325 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அழைப்பை ஏற்படுத்தி மேம்பாட்டுப் பிரிவிற்கு தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும், www.cultural.gov.lk என்ற இணையத்தள முகவரி ஊடாகவும் தகவலைப் பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# சைபர் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு பெற்றோர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இணையத் தளத்தை பாவித்து சிறிய பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க அனுமதிப்பதன் மூலம் அவர்களை இலக்கு வைத்து சைபர் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக இலங்கை தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் ரஜிவ் யசிறு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்வி நடவடிக்கைகள் யாவும் மறுபடியும் Zoom, WhatsApp, Microsoft Teams ஆகிய இணைய வழி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றன.

இப்படி சிறு பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க அனுமதிப்பதன் மூலம் அவர்களை இலக்கு வைத்து சைபர் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடிய அபாயம் உள்ளதாக இலங்கை தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப சங்கம் அடையாளம் கண்டுள்ளது.

பெற்றோர்கள் சிறு பிள்ளைகளை இவ்வாறு இணையத்தின் மூலம் கல்விக் கற்க அனுமதிப்பதன் ஊடாக அவர்கள் தேவையற்ற இணைய பக்கங்களுக்குள் நுழையும் நிலைமை உள்ளது.

பெற்றோருக்கு இணையம் சம்பந்தமான அறிவு குறைவாக உள்ளதாலும் பிள்ளைகளை இணையவழி கற்றலுக்கு அதிகமாக ஈடுபடுத்துவதன் ஊடாகவும் சைபர் குற்றங்களில் ஈடுபட சிறுவர்கள் அதிகமாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ஆகவே பிள்ளைகள் இணைய வழிக் கற்றலில் ஈடுபடும் போது பெற்றோர்கள் கூடிய அவதானத்துடன் செயற்பட வேண்டும் என இலங்கை தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (நி-7)

# புதிய அரசியலமைப்புச் சட்டம் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும்

## தேரர் தெரிவிப்பு

(கண்டி)

துரிதமாக புதிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என சியாம் நிகாய பௌத்த பீடத்தின் அஸ்கிரி தரப்பு ஆவண அதிகாரி மெதகம தம்மானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மகா சங்க சபையினர், பொதுமக்கள் எதிர்பார்த்த விசேட விடயங்கள் இந்த திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

பிரதமர் நியமித்த குழுவின் பரிந்துரைகளிலும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட திருத்தங்களில் இது தொடர்பாக கூறப்பட்டிருந்தது.

துரிதமாக புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

நாட்டின் பௌத்த சங்க சபையினர் குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வர அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்.

பௌத்த பிக்குகளில் இந்த அர்ப்பணிப்பு தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி மிக விரைவில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்திடம் கோருகிறோம்.

பௌத்த பிக்குமார் வழிநடத்திய அரசாங்கம் எதிர்பார்த்தபடி செயற்படவில்லை என்றால், எதிர்காலத்தில் பிக்குமார் மீது குற்றம் சுமத்தப்படலாம். ஏதோ ஒரு பாதிப்பான நிலைமை காணப்படுகிறது.

இதனால், அரசாங்கம் விசேட கவனத்தை செலுத்தி புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் எனவும் மெதகம தம்மானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் பிளவடையாது-நஸீர் திட்டவட்டம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் எவ்விதமான பிரிவுகளோ பிளவுகளோ ஏற்படப் போவதில்லை. கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமின் கீழ் ஒன்றுபட்ட பயணம் தொடரும் என்று அக்கட்சியின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அதேநேரம், எதிர்வரும் காலத்தில் மு.கா. நடுவுநிலையான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பிலான கலந்துரையாடல்கள் கட்சியின் உயர்மட்டத்தில் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றிருந்தது.

இந்தக் கூட்டம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்றக் குழுவானது தலைவர் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நாம் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தோம். குறிப்பாக எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடுநிலையுடன் தொடர்ந்தும் செயற்படுவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சமூகம் சார்ந்து கட்சியின் தலைமையின் கீழ் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவடையும் என்றவாறான கருத்துக்கள் முழுவதும் உண்மைக்குப் புறம்பானவை. நாம் அனைவரும் ஒன்றிணைந்து தொடர்ச்சியாக செயற்படவுள்ளோம் என்றார். (நி-7)



# கிழக்கில் தனிமைப்படுத்தலுக்காக 12 இடங்கள் அடையாளம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ்தொற்று சந்தேகநபர்களை தனிமைப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் 12 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்தினைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும், கொரோனாத் தொற்று அதிகரிக்கும்போது அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேசிய கொரோனா செயலணியுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் குறித்த ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இதனிடையே, கொரோனா தொற்று பாதிப்புள்ள பகுதிகளில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கும் தீர்மானத்தினை தேசிய கொரோனா செயலணியே மேற்கொள்ளும் எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இந்தியாவை புரட்டிப்போடும் கொரோனா ஒரேநாளில் 650 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் புதிதாக 53 ஆயிரத்து 370 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்தியாவின் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிப்புக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 78 இலட்சத்து 14 ஆயிரத்து 682 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 70 இலட்சத்து 16 ஆயிரத்து 46 ஆக உள்ளது. குணமடைந்தோர் விகிதம் 89.78 வீதமாக உள்ளது என மத்திய சுகாதார



அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 650 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 956 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் மகாராஷ்டிராவில் 184 பேர், மேற்கு வங்கத்தில் 60 பேர், சத்தீஸ்கரில் 58 பேர், கர்நாடகாவில் 51 பேர், உ.பி.யில் 40 பேர், தமிழகத்தில் 33 பேர், டில்லி மற்றும் கேரளாவில் தலா 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது 6 இலட்சத்து 80 ஆயிரத்து 680 பேர் கொரோனா சிகிச்சையில் இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# பரீட்சையில் ஆள்மாறாட்டம் பல்கலை.மாணவன் கைது

(கொழும்பு)

ஆள்மாறாட்டம் செய்த க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஒருவரை கற்பிட்டிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள சிங்கள பாடசாலையில் வெளிவாரியாக பரீட்சைக்கு தோற்ற வந்த மாணவர் ஒருவரை பரீட்சை கண்காணிப்பு குழுவினருக்கு ஏற்பட்ட சந்தேகத்தால், அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் ஆள்மாறாட்டம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த மாணவன் கற்பிட்டி பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மாணவன் களனி பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று வருவதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் உயர்தரப் பரீட்சை ஆரம்பித்த நாள் முதல் தனது சக நண்பனுக்காக பரீட்சை எழுதிவந்துள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். (ஜ-4)



# பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

மாத்தறை மாவட்ட உதவி செயலாளர் நதீ ஜயவிக்ரம நேற்று வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கர்ப்பிணியான அவர் இரத்த பரிசோதனை மேற்கொள்வதற்காக மாத்தறை வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார். (ஜ-4)

# மக்களின் செலவைக் குறைக்க பசில் ராஜபக்ஷ ஆலோசனை

(கொழும்பு)

குடும்பங்களுக்கான பொருளாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் குறித்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களது உதவியுடன் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இது தொடர்பாக நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் வறுமையை ஒழிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி பணிக்குழுவின் செயலாளர் பஷில் ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வீட்டுப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவற்றினூடாக உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அரச அலுவலகங்களுடன் இணைந்து நாட்டிலுள்ள 25 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்தத் தேசிய வேலைத் திட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 29 பேர் நாடு திரும்பினர்




(கொழும்பு)

நிலவும் கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 29 பேர் நாடு திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கட்டார் மற்றும் டோஹாவில் இருந்து 29 பேர் நேற்றுச் சனிக்கிழமை **QR 668** விமானத்தில் நாடு திரும்பியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு விமான நிலைய வளாகத்திற்குள் பி.சி.ஆர்.சோதனை நடத்தப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் கொரோனா நிலைமை காரணமாக இலங்கையர்களை திருப்பி அனுப்புவதை தற்காலிகமாக தாமதப்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் நிலைமை மோசமடையும்-எச்சரிக்கிறார் ஹேரத்

(கொழும்பு)

பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்காது போனால் நிலைமை மோசமடையும் என்று சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் மோசமடைந்துள்ளது. இருப்பினும் இன்னும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அறிவித்துள்ளது.

நாட்டில் முதல் தடவையாக நேற்று முன்தினம் அதிகளவில் ஒரே நாளில் தொற்றாளிகளாக 865 பேர் கண்டறியப்பட்டனர். இந்நிலையில் இது நடப்பு நாட்களில் அதிக கொரோனாத் தொற்றாளிகளின் எண்ணிக்கையாகும். எனினும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை உணரவேண்டும்.

இதன்போது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்காது போனால் நிலைமை மோசமடையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். அத்துடன் கோரிக்கை விடுக்கப்படுமாக இருந்தால், பொது மக்கள் தமது நடமாட்டங்களை குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் உதவி பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் கோரியுள்ளார். (நி-7)

# போம்பியோ விஜயத்தின் முன்னேற்பாடுகளுக்கு அமெரிக்க சிறப்புப் பாதுகாப்புப்படை

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க செயலர் மைக்கல் ஆர்.போம்பியோ மற்றும் அந்நாட்டு பாதுகாப்பு செயலர் மார்க் டி.எஸ்பர் ஆகியோரின் இலங்கைக்கான விஜயம் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள அமெரிக்க பாதுகாப்பு பிரிவினர் கொழும்பை வந்தடைந்துள்ளனர்.

கட்டார் விமான நிலையத்தில் அமெரிக்க புலனாய்வாளர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் நேற்று நாட்டை வந்தடைந்ததாக விமான நிலைய கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

பிரத்தியேக வாகனங்களும் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

தெற்காசியாவிற்கான விஜயத்தை அமெரிக்க இராஜாங்க செயலர் மைக்கல் ஆர்.போம்பியோ முன்னெடுத்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை 25 ஆம் திகதி ஆரம்பிக்கும் இந்த விஜயம் 30 ஆம் திகதி வரை தொடர்வதுடன், இந்தியா, இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கானது என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

முல்லேரியா மற்றும் கொத்தட்டுவ பகுதிகளுக்கு தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு 7 மணிமுதல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கம்பஹா, குளியாப்பிட்டி, கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 49 பொலிஸ் பிரிவுகளில் ஏற்கனவே தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது.



மேலதிக அறிவிப்பு வரும் வரை கொழும்பில் உள்ள மருதானை மற்றும் தெமட்டகொட பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது. (ஜ-4)

## 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு.சின்னத்தம்பி
கந்தையா
(பொலிஸ் சார்ஜண்ட்)

திதி:-விஜயதசமி

மலர்வு:- 26.06.1940
உதிர்வு:- 26.10.1982

ஆண்டுகள் பல
உருண்டோடினாலும்
ஆறவில்லை எம்துயரம்
என்றும் ஈரவிழிகளுடன்
உங்களின் நினைவுகளுடன்

உசன்,
மிருசுவில்.

(4452)

குடும்பத்தினர்.

# பால் புரைக்கேறி சிசு மரணம்

(வாழைச்சேனை)

தாய்ப்பால் புரைக்கேறியதில் பிறந்து 4 நாட்களேயான ஆண் சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், வாழைச்சேனை கிரான்- சின்னவேம்பு கிராமத்தைச் சேர்ந்த கனகரெட்ணம் செல்வராணி தம்பதியரின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

வழமைபோன்று குறித்த தாய், குழந்தைக்கு தாய்ப்பால் அருந்தச் செய்த வேளையில் பால் புரைக்கேறி குழந்தை மரணித்துள்ளது. (ஜ-4)

# 70 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 70 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,714 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 7153 பேரில் 3421 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு 426 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பிலுள்ள நிலையில் 15 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நவராத்திரி விழாவும் ஏடு தொடக்கலும்

இந்து சமயத்திலே விழாக்கள், விரதங்கள் என்பன மக்களின் வாழ்வியலை மேன்மைப்படுத்தும் முகமாக பகுத்தறிவுச் சித்தாந்தத்தின் அடிப்படையில் இறையியலை தன் வாழ்வியலுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

அந்தவகையில் நவராத்திரி விழாவானது அம்பிகை அரக்கனை அழித்து நல்லருள் புரிந்ததை நினைவுகூரும் முகமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

நவராத்திரி பொதுவாக வருடத்தில் நான்கு முறை வருகிறது. அதில் புரட்டாதி மாதத்து அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் நவமியீறாக ஒன்பது நாள் முத்தேவியருக்கு வழிபட்டு பத்தாம் நாள் அம்பிகை மகா சூரவர்த்தினியாக மகிடாசூரனை வதம் செய்கிறாள்.

இம் முறை நவராத்திரி விழா ஐப்பசி மாதம் வருவது குறிப்பிடத்தக்கது.

விரதங்கள் மாதம், நாள், திதி, நட்சத்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

அதில் நவராத்திரி மாதத்தையும் திதியையும் அடிப்படையாகக் கொண்ட விரதமாகும்.

எனவே மகா நவராத்திரி விரதமானது புரட்டாதி மாதத்து அமாவாசையை அடுத்து வரும் பிரதமையில் அமைய வேண்டும் என்பதே விரதவிழா நிர்ணயம்.

எனவே இந்த வருடம் 2020 இல் புரட்டாதி மாதம் மாதப்பிறப்பு (1) திகதி அமாவாசையாகவும் புரட்டாதி மாத இறுதி நாள் (31) திகதி அமாவாசையாகவும் வருவதனால் ஒரு மாதத்தில் இரு திதிகள் வந்தமையால் பின்வரும் திதியான புரட்டாதி (31) திகதி ஆங்கிலத்துக்கு (17.10.2020) இல் இம் முறை ஐப்பசியில் நவராத்திரி விழா ஆரம்பமானது.



நவராத்திரியின் இறுதி நாளான ஆயுத பூசை பற்றிய பல வரலாற்று இதிகாச, புராணக் கதைகள் உண்டு.

இறுதிநாளான விஜயதசமி நவராத்திரி விரத விழாவின் இறுதி நாளாகும். அன்று புதிதாக தொடங்கும் காரியம் வெற்றியை தரும் என்ற நம்பிக்கை நம்மிடத்தே உள்ளது.

இதில் மகாபாரதத்தில் வரும் கதை ஒன்று பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் தமது நாடு நகரை இழந்து வனவாசம் சென்ற போது தங்கள் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் மறைத்து வைத்தனர். பதின்னான்கு (14) வருட வனவாசத்துக்கு பின் நாடு திரும்பிய அவர்கள் தங்கள் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் வைத்து பூசை செய்து வழிபட்டனர் என்று கதையுண்டு. இதைத் தொடர்ந்து விஜயதசமி ஆயுத பூசை ஆரம்பமானது.

மேலும் இம்முறை நவராத்திரி விழா பத்து தினங்கள் இன்றி ஒன்பது நாளிலே நிறைவடைகின்றது. இதற்கு திதிதான் காரணம். ஏனெனில் 25.10.2020 ஞாயிற்றுக்கிழமை தமிழுக்கு ஐப்பசி மாதம் 9 ஆம் திகதி 12-16 வரை நவமித்திதியும் பின் 12 - 17 இருந்து தசமி திதியும் வருகின்றது.

அடுத்த நாள் 26-10.2020 மாலை தசமி திதி இருக்காது. இதனால் மகிடாசுரவதம் விழா நடத்த முடியாது என்ற காரணத்தால் இம்முறை ஒன்பது நாள்களில் நவராத்திரி விழா நடைபெறுகிறது.

### கும்பம் கலைத்தலும் ஏடு தொடக்குதலும்

செய்யும் காரியம் சிறப்புறும் நவராத்திரி என்பதனால் கல்வி, செல்வம், வீரம் என்ற முத்தேவியாரும் ஒருங்கே சேர்ந்த அம்பிகை தோற்றம் பெறும் விஜயதசமி நாள். சிறார்களுக்கு ஏடு தொடக்கி அன்று இறை சக்தியை கும்பத்திலிருந்து பெறுவர்.

ஏடு தொடக்கும் விஜயதசமி சுபநேரம் சார்வாரி வருடம்·ஐப்பி 9 ஆம் நாள்
(25.10.2020 ஞாயிற்றுக்கிழமை)
மதியம் 12 -16 - 1-56 வரை

சோதிடர்
திருச்செல்வம் நவரத்தினம்



நாட்டில் கொரோனா தொற்று நோய் அகன்று போக நேற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூஜை ஆராதனைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மரியன்னை தேவாலய சிற்றாலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப் பிரகாசத்தின் பங்குபற்றுதலோடு இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# பூட்டப்பட்ட கடைகள் தீபாவளிக்கு முன் ஒப்படைப்பு சபையில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் 11 கடைகள் சீல் வைக்கப்பட்டு பூட்டப்பட்ட நிலையில் இருந்து வந்தது. இதனால் கடை உரிமையாளர்கள் மிகவும் பாதிப்படைந்தனர்.

கடைகள் உப வாடகைக்கு கொடுத்ததன் நிமித்தம் சட்ட திட்டங்களுக்கு அமையவே கடைகள் பூட்டப்பட்டது.

தீபாவளிக்கு முன்பு கடைகளை உரிமையாளர்களிடம் ஒப்படைப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (நி-4-60)

# வெள்ள நீரை வெளியேற்ற பிரதேசசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநலத் திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கைதடி வடக்கு வீதியில் மாரி காலத்தில் தேங்கும் நீரினை வாய்க்கால் வெட்டி அகற்ற சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே பிரதேச சபைத் தவிசாளரால் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடமே குறித்த வீதியில் வாய்க்கால் வெட்டி வெள்ள நீரை அப்புறப்படுத்த பிரதேசசபை முயற்சித்த போதிலும் அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் எதிர்ப்பால் வாய்க்கால் வெட்டுவது தடைப்பட்டிருந்தது. இருப்பினும் தொடர்ந்தும் வீதியில் நீர் தேங்குவதனை அனுமதிக்க முடியாத காரணத்தால் மாரி காலத்திற்கு முன்னர் வெள்ளவாய்க் கால் வெட்டுவதற்கு சபை முடிவெடுத்துள்ளது என சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

(நி-4-30)




# கேதாரகௌரி விரத பூஜை

(குப்பிழான்)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் கேதாரகௌரி விரத பூஜை இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தொடர்ந்து 21 தினங்கள் இடம்பெறும்.

தினமும் காலை 8 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகும்.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் முகக் கவசம் அணிந்து வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கேதாரகௌரி விரத காப்பினைப் பெற விரும்பும் அடியவர்கள் பரிபாலன சபைக் காரியாலயத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (நி-4-18)

# தாயின் வீட்டில் திருடிய மகன் கைது

(கரணவாய்)

முடக்காட்டு புதுத் தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அண்மையில் பட்டப்பகல் வேளை வீடு உடைக்கப்பட்டு 7 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் அவ் வீட்டின் பெண் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

நகைகளை அடைவுவைப்தற்காக கொண்டு செல்லப்பட்ட சமயம் அவருடைய மகனை பொலிஸார் கைது செய்தனர். (நி-4-60)

# கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலைக்கான பொறுப்பை பிராண்டிக்ஸ் பொறுப்பேற்க வேண்டும்

(கொழும்பு)

**கொரோனா தொற்றின் இரண்டாவது அலைக்கான பொறுப்பை பிராண்டிக்ஸ் அப்பரல் லிமிடெட் ஏற்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**



கொரோனா தொடர்பான ஒத்தி வைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்று முன்தினம் பாராளு மன்றில் கருத்துத் தெரிவித்த அவர், குறித்த நிறுவனம் மீது முழுமையான விசாரணை நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

குறித்த தொழிற்சாலை சுகாதார நடவடிக்கைகளைப் புறக்கணித்து அவர் களின் உடல் நிலையை பொருட்படுத்தா மல் வேலை செய்ய கட்டாயப்படுத்தியது என்றும் கூறினார்.

தொழிலாளர்கள் காய்ச்சல் மற்றும் வாந்தியெடுத்த போதும் அவர்களுக்கு வலி நிவாரணி மருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டு வேலை செய்ய வேண்டி கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு தொழிற்சாலை அவர்க ளின் உற்பத்தி இலக்குகளை அடைவ தில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தது என்றும் குற்றஞ்சாட்டினார்.

மேலும் இரண்டு நாட்களுக்குள் 1,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளமை தொழிற்சாலையின் அலட் சியம் மிகவும் தெளிவாக காட்டுவதா கவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை முறையான தனிமைப் படுத்தப்பட்ட செயல்முறைக்கு உட்படுத் தாமல் சிலர் இந்தியாவில் இருந்து வந்து பிராண்டிக்ஸ் தொழிற்சாலைக்குள் சென்றனர் என வெளியாகிய குற்றச் சாட்டுகள் தொடர்பாக அரசாங்கம் விசா ரிக்க வேண்டும் என கேட்டுக் கொண் டார்.

அத்தோடு கொரோனாத் தொற்று கட்டுப் பாட்டில் உள்ளதா? அல்லது இப்போது சமூ கத்தில் பரவுகிறதா? என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அரசா ங்கம் அதை உண்மைகள் மற்றும் புள்ளி விபரங்களுடன் விளக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஜ-4)

# இராணுவ அதிகாரிக்கு கொரோனா

## சவேந்திர சில்வா தகவல்

(கொழும்பு)

மேல் மாகாணம் பேலிய கொட சபு கஸ்கந்த - படலந்த இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் கொரோனாத் தொற் றுக்கு உள்ளாகியுள்ளமை உறு திப்படுத் தப்பட்டுள்ளது.

குறித்த இராணுவ அதிகாரி பேலிய கொட மீன் சந்தையில் கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொட ர்பு கொண்டிருந்தார் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

இணைக்கப்பட்ட பிரிவின் மற்ற அதிகாரிகளைத் தனிமைப்படுத்துமாறு அவர் உத் தரவிட்டுள்ளார்.



குறித்த இராணுவ முகாமையில் பணிபுரியும் ஏனையவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தள பதி சவேந்திர சில்வா மேலும் தெரி வித்துள்ளார். (நி-7)


## விற்பனைக்குண்டு

சாந்திகம் நிறுவனத்தினால் பாவிக்கப் பட்ட மரத்தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரை கள், இரும்பு மேசைகள், அலுமாரிகள், தீராந்திகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் கள், போட்டோ கொப்பி இயந்திரம், மின் உப கரணங்கள் (தொலைக்காட்சிப் பெட்டி, மின் விசிறி) போன்றன விற்பனைக்குண்டு. 26-29 ஒக்டோபர் திங்கள் - வியாழன் காலை 8-5 மணிவரை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

சாந்திகம், 8,8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0212223338
(C-568)

## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத் தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை **AAA Gold Center**.

0765684346 (C-1074)

# N.K.Sales & Service Centre

சகல விதமான தையல் இயந்திரங்கள் உத்தரவாதத் துடன் திருத்திக் கொடுக்கப்படும் மற்றும் அனைத்து உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். புதிய 3 நூல் Over Lock மிசின், தையல் இயந்திர மேசைகள் மற்றும் பாவித்த நல்ல நிலையில் உள்ள தையல் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.



35/2A, பிள்ளையார் கோவில் வீதி
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி பிள்ளையார் கோவில் பின் வீதி)
0779671932
(6287)

## மணமகள் தேவை

யாழ்.றோ.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த (சூரி.செவ்.கி.பா 2 1/2) மணமகனுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(சூ.செவ்.பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் 074006512) (4486)

## பெயர் மாற்றம்

ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வசிப் பிடமாகக் கொண்ட குணம் சஜிந்தினி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் குணம் சுஜிந்தினி என பதியப்பட்டுள்ளது.

எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் குணம் சஜிந்தினி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத் தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(4445) உண்மையுள்ள - குணம் சஜிந்தினி

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 17 ½ செவ் 2 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: B.Sc Software Engineer & Mobile software Hardware Technician. Mobile shop & Online software Development
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11302

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண் மணமகன் விவாகரத்தானவர் பிள்ளை களற்ற விவாகரத்து அல்லது கண வனை இழந்த பெண் ஏற்கப்படும்
தொ.இ: B/11303

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா: 33 ¾ செவ் 5 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில் CIMA, கணக்காளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11304

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. வியாபாரம், கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11306

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்; மருத்துவபீட இறுதியாண்டு மாணவி
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலா ளர். லண்டன் நாட்டு மணமகன் மட்டும்
தொ.இ: G/11301

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 32 செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி. பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி. வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/11305

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 15 ¼ சூரி,செவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/11311

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: 27 ½ செவ் 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர் மணமகள் விவாகரத்துப் பெற்றவர்
தொ.இ: G/11312

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஐ.நாவின் ஆதரவு தொடரும்

## பிரதமர் நம்பிக்கை



(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்று நம்பிக்கை உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் தனது செய்தியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

தேவைப்படும் போது அமைதி காக்கும் படைகளை அனுப்பி பங்களிப்பு செய்தமை மூலம் இலங்கைக்கு எப்போதும் ஐக்கிய நாடுகள் சபையே ஆதரவினை வழங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையின் சுகாதாரம், பொருளாதாரம் போன்ற வற்றிற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சுனாமி மற்றும் போருக்குப் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும் ஐ.நா. உதவியது என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனா தொற்று, ஐ.நா போன்ற ஒரு அமைப்பின் முக்கியத்துவத்தை நமக்கு நினைவூட்டுகிறது என சுட்டிக்காட்டிய பிரதமர், இந்த அமைப்பு இன்றி உலகம் செல்ல சரியான திசை இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

தூய்மையான நீர் மற்றும் சுகாதார வசதிகள், பொருளாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் குறித்த நடவடிக்கை, கடல் வளங்கள் மற்றும் கடல் வாழ்க்கை, பல்லுயிர் மற்றும் சுற்றுச் சூழல் அமைப்புகள், அமைதி, நீதி மற்றும் நியாயத்திற்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல், வறுமையை ஒழித்தல், தரமான கல்வி, பாலின சமத்துவம் மற்றும் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பினையும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மட்டக்களப்பில் 11 பேருக்கு தொற்று

(கொழும்பு)

பேலியகொட மீன்சந்தைக்கு வியாபாரத்துக்குச் சென்ற மட்டக்களப்பு கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 11 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் எ.லதாகரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பேலியகொட மீன் சந்தைக்கு சென்றவர்கள் மூலம் திருகோணமலை, பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பில் தற்போது 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே பொதுமக்கள் தேவையில்லாமல் வீதிகளில் செல்வதை தவிர்ப்பதுடன் இவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் இருப்பின் பொதுமக்கள், பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவித்து இந்தத் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ-4)

# மதுஷின் பணம் வேறு ஒருவரின் கணக்கில்

(கொழும்பு)

போதைப்பொருள் உலகின் மாகந்துரே மதுஷ் டுபாயில் இருந்த போது பல்வேறு முறையில் சம்பாதித்த 100 கோடி ரூபாய் பணம் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

மதுஷிற்குச் சொந்தமான கோடிக்கணக்கான பணம் 7 பேரின் வங்கிக் கணக்கில் உள்ளதாக பாதுகாப்பு பிரிவிற்கு தகவல் கிடைத்துள்ளது.

அந்தப் பணம் பெற்றுக் கொண்ட மற்றும் பெற்றுக் கொள்ளும் நபர்கள் தொடர்பில் தற்போது தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய மேலும் சிலரை கைது செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போதைப் பொருள் ஊடாக சம்பாதித்த பணத்தில் அவர் கொள்வனவு செய்த பல வாகனங்கள் இலங்கையில் 9 பேரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பிலும் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் சிறையில் இருந்த மாகந்துரே மதுஷை பொலிஸார் அழைத்து சென்ற வேளையில் ஏற்பட்ட மோதல் காரணமாக மதுஷ் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஊரடங்கை மீறிய 71 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 71 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த காலப் பகுதியில் 17 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 759 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனை கூறியுள்ளார். (ஜ-4)

# சேவைகள் மட்டுப்படுத்தல்

(கொழும்பு)

தொழில் திணைக்களத்தின் சேவைகளை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 26 ஆம் திகதி முதல், ஊழியர் சேம இலாப நிதியத்தைப் பெறும் பயனாளர்களின் விண்ணப்பங்கள், அருகிலுள்ள தொழில் திணைக்களத்தின் அலுவலகங்கள் ஊடாக மாத்திரமே பெற்றுக்கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பயனாளர்கள், முன்கூட்டியே தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 011236 8904 அல்லது 011 236 8911 என்ற இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு, தமக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாராளுமன்றில் மீண்டும் வாக்கெடுப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று மீண்டும் வாக்கெடுப்பொன்று இடம்பெற்றது.

அரச கணக்குகள் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்க வேண்டும் என ஏற்பட்ட விவாதத்தின் பின்னரே வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

நிலையியல் கட்டளையின் படி அந்தப் பதவி எதிர்க்கட்சிக்கு கிடைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியது.

எனினும், குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின் பிரகாரம் தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என ஆளுங்கட்சி தெரிவித்தது.

அதன்படி, நிலையியல் கட்டளையில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரச கணக்குகள் குழுவின் தலைவர், அதன் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற யோசனையை ஆளுங்கட்சி முன் வைத்தது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 170 | 240 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 150 | 150 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 150 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 170 | 180 |
| பூசணி | 60 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 80 |
| சின்னவெங்காயம் | 200 | 220 | 200-260 | 240 |
| பெரியவெங்காயம் | 180 | 130 | 120-140 | 140 |
| பாகற்காய் | 180 | 260 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 180 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 250 | 240 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 180 | 160 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 20 | 50 | 40 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | -- | -- |

## இராசிபலன்

25.10.2020
ஐப்பசி 09, ஞாயிற்றுக்கிழமை,
நவமி பிற்பகல் 12.16 மணிவரை
திருவோணம் முற்பகல் 7.35 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சந்திராஷ்டமம் புனர்பூசம்
கேதார கௌரிவிரதாரம்பம்
விஜயதசமி

வளவன்

**மேஷம்** – தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**ரிஷபம்** – எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மிதுனம்** – குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, எடுத்த காரியங்களில் சிறு தடை தடங்கல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** – எண்ணியது நிறைவேறும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள் போசன நன்மையுண்டு.

**சிம்மம்** – நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி** – தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பிறர் உதவியுண்டு, எதிர்பார்த்த தன வருவாய்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** – அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** – இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை ஏற்படலாம், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** – மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், தேவையற்ற கவலைகளை தவிர்ப்பது நல்லது. சயன சுகக் குறைவான நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மீனம்** – பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**இதுவரை முழு நிம்மதியோடு வாழ்ந்தவர்கள் யாருமிலர்**

# இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம்

## கொரியர்களுக்கு கொரியத் தூதுவர் அழைப்பு

**(கொழும்பு)**

**இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்றும் இலங்கையில் உள்ள வாய்ப்புகளை ஆராய, கொரிய முதலீட்டாளர்களை தான் தொடர்ந்தும் ஊக்குவித்து வருவதாகவும் இலங்கைக்கான கொரியத் தூதுவர் வூன்ஜின் ஜியோங் தெரிவித்துள்ளார்.**



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர், இலங்கையில் பாரிய முதலீட்டாளர்களில் ஒருவராக கொரியாவும் காணப்பட்டதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் தற்போது 115 இற்கும் மேற்பட்ட கொரிய நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான மொத்த வர்த்தகம் கடந்த ஆண்டு 327 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றுநோயைக் கையாண்ட விதம் குறித்து அரசாங்கத்தை பாராட்டிய கொரியத் தூதுவர், கொரோனா நெருக்கடியை முகாமைத்துவம் செய்வதில் கொரிய அரசு, இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மற்றும் கொரிய நாடுகளுக்கு இடையிலான அந்நிய நேரடி முதலீடு, ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் விடயம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# பொருளாதாரம் தொடர்பில் மத்திய வங்கியின் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கி தற்போதுள்ள அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையைத் தொடர்ந்து பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இது குறித்து மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நாணயச்சபைக் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போதுள்ள அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையான ஆண்டு காலப் பகுதியில் மத்திய வங்கியினால் முன்னொரு பொழுதுமில்லாத வகையில் எடுக்கப்பட்ட நாணய தளர்த்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த சந்தை கடன் வழங்கல் வீதங்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், சந்தை கடன் வழங்கல் வீதங்களில் பரந்தளவிலான கீழ் நோக்கிய திருத்தத்தின் தொடர்ச்சியும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனூடாக தற்போது காணப்படுகின்ற தாழ்ந்தளவிலான பணவீக்க சூழலில் பொருளாதாரத்தில் திறன்மிக்க துறைகளுக்கு வசதியான கொடுகடன் பாய்ச்சல்கள் உறுதி செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-7)

# பணத்திற்கு அடிபணிபவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டாம்

(கொழும்பு)


பணத்திற்கு அடிபணியும் அரசியல்வாதிகளை அடுத்த தேர்தலிலாவது பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டாம் என வாக்காளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் வைத்து நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஹர்சன ராஜகருண உரையாற்றுவதற்கு முன்னர், 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே உரையாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மூடப்பட்டது திருமலை மீன்சந்தை



(திருமலை)

திருகோணமலையில்கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் 6 இற்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை பொதுச் சந்தை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் மூடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 59 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த நபர்கள் பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை வெளியாகிய முடிவுகளின் அடிப்படையில் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த மூவர் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த ஒருவர், உப்புவெளி மற்றும் புல்மோட்டை பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் ஆகியோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் திருகோணமலை மீன் சந்தை மூடப்பட்டுள்ள அதேவேளை தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ-4)

## மீன்பிடித்துறைமுகங்களுக்கான சுகாதார வழிமுறைகள் வெளியீடு

(கொழும்பு)

மீன்பிடித் துறைமுகங்களுக்கான சுகாதார வழிமுறைகளை உடனடியாக வெளியிடுமாறு அமைச்சின் செயலாளருக்கு சுகாதார அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பேலியகொட மீன் சந்தையில் கொரோனாத் தொற்று பரவியதைத் தொடர்ந்து மீன் பிடித் துறைமுகங்களிலும் வைரஸ் பரவியுள்ள நிலையில் இவ்வாறு சுகாதார வழிமுறைகள் வெளியிடப்படவுள்ளன.

இதேவேளை, பேலியகொட மீன் விற்பனை நிலையத்தில் கடந்த நான்கு நாட்களில் 471 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் அங்கு வைரஸ் இலகுவில் பரவுவதற்குப் பிரதான காரணம் அங்குள்ள குளிரூட்டும்செயற்பாடுகளே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரவலை அடுத்து, காலி மற்றும் பேருவளை மீன்பிடித் துறைமுகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் அங்கு தொற்றுக் கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சூழலில், நாடு முழுவதும் கொரோனாத் தடுப்புக்கான சுகாதார வழிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது மீன்பிடித் துறைமுகங்களுக்கு வழிகாட்டல் அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. (ஐ-4)

## ஜனாதிபதியின் கொள்கைத்திட்டங்களை ஏற்பவர்களே அரசுடன் இணைய முடியும்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை ஏற்றுக்கொள்பவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படமுடியும் என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது அமைச்சரவையில் இன,மத பேதங்கள் இல்லை. பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாகவே செயற்படுகின்றோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை ஏற்றுக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

இந்நிலையில் எமது கொள்கைத் திட்டங்களை ஏற்றுக் கொள்பவர்கள் யார் வேண்டுமானாலும் எம்முடன் இணைந்து செயற்படுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம். (ஐ-4)

## மர்மமான முறையில் அழிக்கப்பட்ட நிலங்கள்

(கொழும்பு)

ஒரு காலத்தில் இயற்கை வளங்களுக்கு இருந்த மதிப்பும் பாதுகாப்பும் இன்று இல்லாமல் போயிருப்பது இந்த மனித சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் சாபக்கேடு என்று சொன்னால் மிகையாகாது.

அனர்த்தங்கள் எங்கெல்லாம் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் இயற்கை வளங்கள் துவம்சம்செய்யப்பட்டதன்விளைவேயன்றி வேறில்லை.

இயற்கை அனர்த்தங்களினால் அழிக்கப்பட்ட இயற்கை வளங்களின் மிச்ச மீதியை இன்று இன வன்முறை, நாகரிக வளர்ச்சி, வர்த்தக நடவடிக்கை போன்ற பல காரணிகளைக் கொண்டு அளவற்ற ரீதியில் மனித மிருகங்கள் துவம்சம் செய்து வருகின்றனர்.

அந்தவகையிலே இயற்கை வளமிக்க, எழில் சூழ்ந்த மாவட்டமான திருகோணமலை பகுதியில் சதுப்பு நிலப்பகுதி ஒன்று கொடிய விசமிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அழிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை-மூதூர் பகுதியில் உள்ள சதுப்பு நிலப்பகுதியே இவ்வாறு அடையாளம் தெரியாத சிலரால் அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதுடன், இயற்கை வளங்கள் படிப்படியாக அழிந்து வருதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு மர்மமான முறையில் இந்த நிலங்கள் அழிக்கப்பட்டு வருவதால் நாட்டின் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ-4)

## பி.சி.ஆர்.சோதனையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை வேண்டும்-ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனையின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, கம்பஹா மாவட்டத்தில் அண்மையில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றின் தீவிரத்தை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனாத் தொற்றின் தற்போதைய அலை 13 மாவட்டங்களுக்கு பரவக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே இந்தத் தொற்றின் தீவிரத் தன்மையினை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அதன்படி, நாள் ஒன்றுக்கு செய்யும் பி.சி.ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கையினை 5000 வரை அதிகரிக்க வேண்டும் என்றும் வைத்தியசாலைகளில் கிடைக்கும் வென்டிலேட்டர்கள் மற்றும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே தமது கட்சி மற்றும் மருத்துவ நிபுணர்கள் விடுத்த ஆலோசனையை அரசாங்கம் புறக்கணித்திருப்பதாக சுட்டிக்காட்டிய ஐ.தே.க., கொரோனாத் தொற்றின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் 2000 இற்கும் குறைவான பி.சி.ஆர். பரிசோதனைகளே மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கு முந்தைய மாதங்களில் பி.சி.ஆர்.சோதனைகளை அரசாங்கம் 5,000 ஆக உயர்த்தியிருந்தால், கொரோனா வைரஸ் பரவுவதை சுகாதார அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடிந்திருக்கும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

## ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தாலேயே இராணுவத்தளபதிக்கு அமெரிக்கா தடை விதித்தது

### அரசாங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30 கீழ் ஒரு தீர்மானத்தாலேயே இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிற்கு அமெரிக்கா தடை விதித்தது என பாராளுமன்றில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நாட்டின் இராணுவத்தினரை சர்வதேசத்திற்கு காட்டிக் கொடுத்ததன் விளைவே இந்தப் பொருளாதாரத் தடை எனச் சுட்டிக்காட்டினார்.

அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோவிடம் இராணுவத்தளபதி மீதான அமெரிக்காவின் தடையை நீக்க அரசாங்கம் கோரிக்கை விடுக்குமா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, தடை விதிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்தக் கோரிக்கையை விடுத்ததாக தெரிவித்தார்.

அத்துடன் இந்த நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிகடந்த அரசாங்கம் செய்த பெரும் துரோகத்திற்கு நன்றி என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை இணை அனுசரணையை மீளப் பெறுவதற்கும் கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை சரிசெய்வதற்கும் சர்வதேச அரசாங்கங்களில் இலங்கை இராணுவத்தின் நலன்களைக் காத்துக் கொள்வதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார். (ஐ-4)

## துப்பாக்கியுடன் ஐவர் கைது

(அம்பாறை)

அம்பாறை- திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோத உள்ளூர் துப்பாக்கிகளுடன் 5 பேர், நேற்று சனிக்கிழமை அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 5 உள்ளூர் துப்பாக்கிகளை இதன்போது பொலிஸார் மீட்டுள்ளனர்.

திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய, திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயவீர தலைமையிலான பொலிஸார், சம்பவ தினமான நேற்று அதிகாலை விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில் காஞ்சிரம்குடா பிரதேசத்தில் உள்ள வீடுகளை சுற்றிவளைத்து சோதனையிட்டனர். (ஐ-4)

# அரசைத் தோற்கடிப்பதே சிலரின் பிரதான இலக்கு- நிவாட் கப்ரால்

(கொழும்பு)

போரின்போது அதில் ராஜபக்ஷ அரசு தோற்க வேண்டும் என்று விரும்பியவர்கள் தற்போது கொரோனாவிடமும் ராஜபக்ஷ அரசு தோற்க வேண்டும் என்று விரும்புகின்றனர் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"நாடு கொரோனா அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ள நிலையிலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி அபிவிருத்தியில் நாட்டைக் கட்டியெழுப்ப அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் எமது நாட்டில் 2019 ஆம் ஆண்டுக்கு முன் இருந்தது போல் ரூபாவின் பெறுமதியைக் கொண்டுவர முடியும்.

அமெரிக்கன் டொலரோடு ஒப்பிடுகையில் இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் நாணயப் பெறுமதி வீழ்ச்சி கண்டு வரும் நிலையில் இலங்கையில் அதன் வீழ்ச்சி 1.5 வீதம் என்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

அரசு நாட்டின் பொருளாதாரத்தை சமநிலையில் பேணும் வகையில் சில பொருட்களுக்கான இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளதுடன் கொரோனா வைரஸ் சூழ்நிலையிலும் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சி அடையாமல் பாதுகாத்து வருகின்றது.

சிலர் அரசுக்கு நன்மை செய்வதாகக் கூறிக்கொண்டு உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு உதட்டால் வேறு எதையோ பேசுகின்றனர்.

அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று நோய் தொடர்பில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பிலும் கருத்துக்களை வெளியிட்டாலும் அரசு அதில் தோற்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே உள்ளனர். நாட்டில் போர் நடைபெற்ற காலத்திலும் அரசு தோற்க



வேண்டுமென்ற மனநிலையிலேயே அவர்கள் செயற்பட்டனர்.

எவரும் கூறுவது போல நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடையவில்லை. அதைச் சமநிலையில் பேணுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம்" என தெரிவித்தார். (ஜ-4)

## குடும்பஸ்தர் பலி

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவு பாலையடித்தோணா புகையிரதப் பாதையில் குடும்பஸ்தரான ஆணொருவர் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.50 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சந்திவெளி வைத்தியசாலை வீதி கடற்கரை பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய எஸ். தங்கவேல் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலில் மோதுண்டு இவர் உயிரிழந்துள்ளார்.

சடலத்தை ஏறாவூர் புகையிரத நிலையத்தில் ஒப்படைத்த புகையிரத அதிகாரிகள் இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)


## மதூஷின் மரணம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த சமரசிங்க ஆராச்சிகே மதூஷ் லக்சித எனும் மாகந்துர மதூஷின் மரணம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினால் குறித்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையையும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக குறித்த குழுவின் செயலாளர் சுதேஷ் நந்திமால் தெரிவித்துள்



ளார்.

எதிர்காலத்தில் இந்தச்சம்பவம் தொடர்பில் சர்வதேச குழுவிற்கு அறிவிக்கவும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## தமிழ் மொழிக்காக குரல்கொடுத்த ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான அறிவிப்புகளும் விழிப்புணர்வுகளும் பெரும்பாலும் சிங்களம் அல்லது ஆங்கில மொழிகளில் மாத்திரமே உள்ளன. தமிழ்மொழி ரீதியான அறிவிப்புகள் மிகவும் குறைவாக உள்ளன.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றும் போதே இதனை வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

"கொரோனாவுடனேயே நாம் அனைவரும் வாழவேண்டிய சூழல் உள்ளது. இது எமது நாட்டில் மாத்திரம் ஏற்பட்டுள்ள தொற்று நோய் அல்ல. பூகோள ரீதியான தொற்றுநோயாகும்.

சரியான தகவல்கள் இந்த வைரஸ் தொடர்பில் வைத்திய நிபுணர்களிடமும் இல்லை. வரலாற்றில் எந்தவொரு சுகாதார அமைச்சருக்கும் இல்லாத சவால் தற்போதைய சுகாதார அமைச்சருக்கு ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குரல்களுக்கும் செவி கொடுக்க வேண்டும். தனிமைப்படுத்தல் நிலையங்கள் காணப்படும் மோசமான நிலைமை காரணமாக அங்கு செல்ல மக்கள் அஞ்சுகின்றனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் இரண்டாம் நபர்கள் தொடர்பில் சமூகத்தில் பீதியொன்று ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இவர்களை குற்றவாளிகள் போன்று பார்க்கின்றனர். சுகாதார அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும் வழங்கப்பட வேண்டும்.

கொரோனா தொற்று தொடர்பில் வெளியிடப்படும் அறிவிப்புகள் மற்றும் விழிப்புணர்வுகள் பெரும்பாலும் சிங்கள, ஆங்கில மொழிகளில் மாத்திரமே வெளியிடப்படுகின்றன.

தமிழ்மொழிரீதியான அறிவிப்புகள்மிகவும்குறைவாகவே உள்ளன. அதன் காரணமாக தமிழ் மொழி ரீதியான அறிவிப்புகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்" - என கோரிக்கை விடுத்தார். (ஜ-4)

## ஆணைக்குழுவிற்கு சென்ற செய்தியாளர்களுக்கு இடையூறு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நடவடிக்கைகளை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. ஆணைக்குழுவின் இரகசிய சாட்சிப் பதிவுகளின் போது, சாட்சி விசாரணை அறையிலிருந்து ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்படும் நிலையில், ஆணைக்குழுவுக்கு வெளியே இரகசிய சாட்சிப் பதிவுகள் முடிவுறும் வரை காத்திருக்கும் போது இந்த இடையூறுகளை ஊடகவியலாளர்கள் சந்தித்து வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக்காரணம்காட்டி, ஆணைக்குழுவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஆணைக்குழுவை அண்மித்த பகுதிகளில் போடப்பட்டிருந்த இருக்கைகள் அனைத்தையும் அதிகாரிகள் அகற்றியுள்ளனர். இந்நிலையில் நாளாந்தம் ஊடகவியலாளர்கள் பல மணி நேரம் வெளியே ஆங்காங்கே நின்றவாறு, தமது அறிக்கையிடல் தயார்படுத்தல்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம், அவ்வாறு ஆணைக்குழுவை அண்மித்த பகுதியில் இருந்தவாறு ஊடகவியலாளர்கள் தமது அறிக்கையிடலை தயார் செய்துகொண்டிருந்த போது, அங்கு வந்த பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப பிரதான நிறைவேற்று அதிகாரி சுனில் திஸாநாயக்க தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவரைத் திட்டியுள்ளார். அத்துடன் அவ்வளாகத்துக்கு வெளியே செல்லுமாறும் அவர் கடும் தொனியில் பணித்துள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்த சுமார் 15 ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் அம் மண்டபத்தின் நிறைவேற்று அதிகாரியைச் சந்தித்து விளக்கம் கோரினர்.

இதுவரை ஆணைக்குழு நடவடிக்கைகளை அறிக்கையிட்ட ஊடகவியலாளர்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்தித்த வண்ணம் ஆணைக்குழு நடவடிக்கைகளை அறிக்கையிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஜ-4)

## தலதாமாளிகைக்கு செல்லத்தடை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில் இருந்து பயணிகள் கண்டியிலுள்ள ஸ்ரீ தலதா மாளிகைக்கு வருகை தருவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளாகத்திற்கு வருகை தரும் பார்வையாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஸ்ரீ தலதாமாளிகையில் மத வழிபாட்டு அனுஷ்டானங்கள் வழமை போல் நடைபெறுவதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வவுனியாவில் 112 பேர் தெரிவு

(குருமன்காடு)

ஒரு இலட்சம் தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் 112 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கி கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப சமூகத்தில் மிகவும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கான பயிலுநர் நியமனக் கடிதங்கள் பெறுவதற்கு முதல்கட்டமாக 34 ஆயிரத்து 818 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் பயிலுநர் நியமனக் கடிதங்களை முதல் கட்டத்தில் பெறுவதற்கு வவுனியா மாவட்டத்தில் 112 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி-4-250)



கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ள தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் பாதுகாப்பு அங்கிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. (படம்:தேவானந்தன்)

# சட்டவிரோத மரக்கடத்தல்கள் முறியடிப்பு

## சாரதி கைது; வாகனத்துடன் மரக்குற்றிகள் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகள் கடத்தி செல்ல முற்பட்ட டிப்பர் வாகனமும் அதன் சாரதியும் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் பெருமளவான மரங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பாலைப்பாணி பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்டவிரோதமான முறையில் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 29 முதிரை மரக்குற்றிகள் டிப்பர் வாகனத்தில் ஏற்றிச்செல்ல முற்பட்ட வேளை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முதிரை மரக்கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட யாழ்பாணம் சாவகச்சேரியினை சேர்ந்த சந்தேக நபரினை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த 17 ஆம் திகதி இரணைமடு குளக் கரையை அண்மித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் காட்டு மரம் அறுக்கப்படுவதாக மாங்குளம் பொலிஸ் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை தொடர்ந்து குறித்த பகுதியில் சென்றபோது காட்டிற்குள் அறுத்து வீழ்த்தி ஏற்றுவதற்கு தயாரான நிலையில் உள்ள 31 பாலை மரக் குற்றிகளையும் பொலிஸார் மீட்டுள்ளார்கள். குறித்த பகுதியில் பொலிஸார் சென்றவேளை சட்டவிரோத மரக்கடத்தல்காரர்கள் தப்பிச்சென்றுள்ளார்கள்.

இதன்போது நான்கு இலட்சம் பெறுமதியான பாலை மரக் குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டு மாங்குளம் பொலிஸ் நிலையம் கொண்டுவரப்பட்டுள்ளது. (நி-4)



# ஹன்டர் - மோட்டார் சைக்கிள் விபத்து படுகாயமடைந்த சாரதி வைத்தியசாலையில்



(குருமன்காடு)

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் ஹன்டர் ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வைரவர் கோவில் வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த ஹன்டர் ரக வாகனம் வைரவர் கோவில் வீதி, முதலாம் ஒழுங்கைக்கு திரும்ப முற்பட்ட சமயத்தில் அப்பாதையூடாக வந்த மோட்டார் சைக்கிள் வாகனத்துடன் மோதுண்டு, வேகக்கட்டுப்பாட்டையிழந்து அருகேயிருந்த மின்கம்பத்திலும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியான 22 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4-250)




# பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 56 பேருக்கு பரிசோதனை

(மன்னார்)

பேலியகொட மீன் சந்தை தொகுதியில் கடந்த 21 ஆம் திகதி கொரோனா தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில்,மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 56 பேருக்கு கடந்த வியாழக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பேலியகொட மீன் சந்தை தொகுதியில் கொரோனாத் தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 56 பேருக்கு கடந்த வியாழக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பி.சி.ஆர். பரிசோதனையின் மாதிரிகள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனை அறிக்கையை எதிர் பார்த்துள்ளோம்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் வீதித்திருத்த பணிகளில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்ற முடிவுகளை தொடர்ந்து மன்னார் மாவட்டத்திலும் வீதித்திருத்த பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு குறிப்பாக வவுனியா- மன்னார். எள்ளை பகுதியான கல்மடு பகுதியில் வீதித்திருத்த பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 54 நபர்களுக்கு குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களது மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என வைத்தியர் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் கடந்த 7 ஆம் திகதி முதலாவது கொரோனா நோயாளர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட 1 ஆம் 2 ஆம் நிலை தொடர்புடையவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனைகள் அனைத்தும் "கொரோனா தொற்று இல்லை" என்ற முடிவை தந்தமையினால் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் அவரோடு தங்கி இருந்து வேலை செய்தவர்களை தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-285)

# குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை இரத்த வங்கிகளில் குருதித் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் அவசரமாக குருதியினை வழங்குமாறு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சில குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன்படி O,A,B போன்ற எதிர் மறை இரத்த வகைகளுக்கு கூடுதல் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அதனை நிவர்த்தி செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்.

எனினும் மக்களிடையே இரத்ததானம் பற்றிய சரியான விழிப்புணர்வு இல்லாமையே இதற்குக் காரணம் என இரத்த வங்கியினர் தெரிவித்தனர். (நி-4-250)

நாம் வாழ்வதற்கு நன்றாக இருக்க வேண்டியவை மூன்று. அவை: நம் உள்ளம், உடம்பு, சுற்றுப்புறம்.
- டாக்டர் மு.வரதராசனார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா விடயத்தில் மிக அவதானமாக இருப்போம்

பொதுத் தேர்தல் முடிந்த பிற்பாடு கொரோனா விடயத்தில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அரசாங்கத்தின் முழுக் கவனமும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதாக இருந்ததேயன்றி, கொரோனா விடயத்தில் அல்ல என்பது தெரிந்தாயிற்று.

இலங்கையில் கொரோனா அலை மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் விடுத்த எச்சரிக்கைகள் அனைத்தும் உதாசீனம் செய்யப்பட்டு கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டன.

இதன் விளைவாக இப்போது இலங்கையில் கொரோனா உருத்திரதாண்டவம் ஆடத் தலைப்பட்டுள்ளது.

இனி கொரோனாவைக் கட்டுப்படுத்துவது கடினம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும் சமூகத்தொற்று இல்லை என்று நாக் கூசாமல் சுகாதார அமைச்சர் கூறுகின்ற அளவிலேயே எங்கள் நாட்டு நிலைமை உள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் இலங்கைக்கு இருந்த மரியாதையைத் தக்க வைப்பதற்காக கொரோனா தொற்று இல்லை என்று கூறப்படுவதாக இருந்தால், கொரோனா ஆபத்து இனியும் வெளிவரப் போவதில்லை என்று கூறுவதில் தவறில்லை.

உண்மையில் உலக நாடுகள் தத்தம் நாட்டின் கொரோனா நிலைமையை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளன.

அதிலும் இத்தாலி நாட்டில் கொரோனா ஏற்படுத்திய மரணம் கண்டு அந்த நாட்டின் ஜனாதிபதி கண்ணீர் விட்டு அழுதார்.

இஃது அவர்களின் மனிதநேயத்தை - வெளிப்படைத்தன்மையை - கழிவிரக்கத்தை வெளிக்காட்டுவதாகும்.

ஆனால் இலங்கை ஏலவே யுத்த கால இழப்புக்களை மறைப்புச் செய்த பழக்க தோசம் போல இப்போது கொரோனா விடயத்திலும் மறைப்புச் செய்ய முற்படுகிறது.

இஃது மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை மட்டும் கூறிக்கொள்வதுடன் அந்த விடயத்தை அப்படியே விட்டுவிடலாம்.

இப்போது நாம் பேசவும் சிந்திக்கவும் வேண்டிய விடயம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பது எங்ஙனம் என்பது பற்றியது தான்.

இதுவிடயத்தில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அதிலும் குறிப்பாக எங்கள் வடபுலத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்குச் செல்கின்றவர்கள் இந்திய மீனவர்களைச் சந்திப்பதையோ அல்லது அவர்களை அண்மித்துச் செல்வதையோ முற்றுமுழுதாகத் தவிர்க்க வேண்டும்.

தவிர, இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் போதைவஸ்துக் கடத்துகின்றவர்கள் விடயத்திலும் நாம் அனைவரும் விழிப்பாக இருப்பது அவசியம்.

இவையாவற்றுக்கும் மேலாக தென்பகுதியில் இருந்து வடக்குக்கு வருகின்ற படைத் தரப்பினர், வாகன சாரதிகள், வர்த்தக முகவர்கள், தெருவோர வியாபாரிகள் என்போர் தொடர்பிலும் எங்கள் அவதானம் கடுமையாக இருப்பது அவசியம்.

இல்லையேல் எங்கள் வடபுலம் கொரோனாவுக்கு ஈடுகொடுக்க முடியாத பெருந் துயரை அனுபவிக்க வேண்டியதாக இருக்கும்.

### வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரிப்பு

# வர்த்தக நிலையங்களை பூட்டுமாறு சுகாதாரத் துறையினர் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கில் வீதி திருத்த பணியில் ஈடுபட்டவர்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ள நிலையில் வர்த்தக நிலையங்களை பூட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரத் துறையினர் கேட்டுள்ளனர்.

வவுனியா வடக்கில் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்ட தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ஊழியர்களில் மூவருக்கு கடந்த புதன்கிழமை கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ச்சியான பிசிஆர் பரிசோதனைகளில் இதுவரை 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புடைய நூற்றுக்கணக்கானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த கொரோனா தொற்றை சமூக பரவலாக பரவவிடாது தடுக்கும் பொருட்டு சுகாதார துறையினர் பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதடிப்படையில் வவுனியா வடக்கின் நயினாமடு, ஒலுமடு, நெடுங்கேணி சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களைப் பூட்டி பிசிஆர் பரிசோதனைக்கு ஒத்துழைத்து சமூக பரவலை தடுக்க உதவுமாறு வவுனியா வடக்கு சுகாதார துறையினர் வர்த்தகர்களிடம் கோரியுள்ளனர். (ம-3.250)

## ஆணைக்குழுவில் ஆறாவது நாளாகவும் சாட்சியம் வழங்கிய மைத்திரி

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாட்சியம் நேற்று வழங்கியிருந்தார்.

ஆறாவது நாளாகவும் சாட்சியமளிப்பதற்காக நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆணைக்குழுவில் முன்னிலையான அவர், பிற்பகல் 1.15 அளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், எதிர்வரும் 29 ஆம் திகதி ஆணைக்குழுவில் மீள முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பாராளுமன்றத்தில் பணியாற்றிய பொலிஸ் உத்தியோகத்தருக்கு

### கொரோனாத் தொற்று உறுதி

(கொழும்பு)

பாராளுமன்ற பொலிஸ் புலனாய்வுபிரிவை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பேலியகொட மீன்சந்தைக்கு சென்றவர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவருடன் தொடர்பிலிருந்த 7 பேரை சுயதனிமைப்படுத்தலிற்கு உட்படுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தின் பிரதான கட்டடத்தில் பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பணிபுரியவில்லை என் தகவல்கள் வெளியாகியுள்ளன.(ம-3)

### கொரோனாத் தொற்றுக் காரணமாக

## பிரதான ரயில் சேவைகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தம்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக பிரதான ரயில் சேவைகள் சிலவற்றை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு கோட்டை மற்றும் மருதானை புகையிரத நிலையங்களில் இருந்து பயணிக்கும் சிலாபம், பொல்காவெல, ரம்புக்கன, அலுத்கம, அவிசாவெல மற்றும் கொஸ்கம ஆகிய பகுதிகளுக்கான ரயில் சேவைகள் மறு அறிவிப்பு வரும் வரை இயக்கப்படமாட்டாது என இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

அடக்கம் ஒரு அணிகலன் மட்டுமல்ல. அது ஒழுக்கத்தின் பாதுகாப்பும் நல்வாழ்வின் கவசமும் ஆகும். -அடிசன்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உன்னை நீயே அறிவாய்



இரும்பு ஒரு கரண்டியாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் அது ஒரு பொருளையே குறிக்கும். அதுபோல் தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது. நீயுமாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே. இந்தக் கருத்தில் மனத்தைப் பதித்துக் கொண்டு உண்மையை உணர்ந்து கொள். நீயென்றாலும் தெய்வமென்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. அவ்விரும்புக்கு கரண்டி என்று கொடுத்த பெயர் மறைந்து விடுகிறது. என்ன மிச்சம்? இரும்பு தான். இரும்பைப் பல வடிவங்களாக்கி, பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும் பெயரையும் கழித்துவிட்டால் மிஞ்சுவது இரும்புதானே!

அதேபோன்று, நீ உன்னையறிந்து கொள்ள முயற்சி செய்! மனிதனென்ற வடிவத்தையும், உன் செயல் பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பார்! உன்னில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

# சென்னைக்கு பதிலடி கொடுத்தது மும்பை

ஐ.பி.எல்.தொடரின் 41 ஆவது லீக் ஆட்டம் ஷார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின. டொஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் பட்டிங் செய்தது. ருத்துராஜ் கெய்க்வாட் (0), டு பிளிஸ்சிஸ் (1), அம்பதி ராயுடு (2), ஜெகதீசன் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 3 ரன்கள் எடுப்பதற்குள் நான்கு விக்கெட்டுகளை இழந்திருந்தது.

அதன்பின் விக்கெட் மளமளவென சரிந்தது. ஜடேஜா 7 ரன்னிலும், டோனி 16 ரன்னிலும் ஆட்டமிழக்க சென்னை 6.4 ஓவரில் 30 ரன்கள் எடுப்பதற்குள் 6 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

சாம் கர்ரன் தனிநபராக போராடி 47 பந்தில் 4 பவுண்டரி, 2 சிக்சருடன் அரைச்சதம் அடிக்க சி.எஸ்.கே.20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 114 ரன்கள் எடுத்தது. மும்பை அணி சார்பில் போல்ட் 4 ஓவரில் 18 ரன்கள் விட்டுக்கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தினார். பும்ரா 2 விக்கெட்டும், ராகுல் சாஹர் 2 விக்கெட்டும் வீழ்த் தினர்.




பின்னர் 115 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணியின் குயின்டான் டி காக், இஷான் கிஷன் ஆகியோர் களம் இறங்கினர். இஷான் கிஷன் அதிரடி காட்ட, டி காக் நிதானமாக விளையாடினார்.

இஷான் கிஷன் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடிக்க, மும்பை இந்தியன்ஸ் 12.2 ஓவரிலேயே 116 ரன்கள் அடித்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இஷான் கிஷன் 37 பந்தில் 6 பவுண்டரி, 5 சிக்சருடன் 68 ரன்களுடனும், குயின்டான் டி காக் 37 பந்தில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் 46 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். (4)

# சத்தமில்லாமல் நடைபெறும் பேச்சுவார்த்தை

## டோனி, யுவி, ரெய்னாவை எடுக்க துடிக்கும் அணிகள்








அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக்பாஷ் தொடரில் டோனி, ரெய்னா மற்றும் யுவராஜ்சிங் ஆகியோரை விளையாட வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல்.தொடர் போன்றே அவுஸ்திரேலியாவில் பிக்பாஷ் லீக் தொடர் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது.

அதன்படி இந்த ஆண்டு நடைபெறவுள்ள பிக்பாஷ் லீக் தொடர் கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

போட்டியை சுவாரஷ்யப்படுத்துவதற்காக, இந்த முறை பிக்பாஷ் லீக் தொடரில் வெளிநாட்டு வீரர்கள் விளையாட அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்காக ஒவ்வொரு அணியிலும் விளையாடும் 11 பேரில் 3 வெளிநாட்டு வீரர்கள் விளையாட அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதனால், இந்தியாவின் நட்சத்திர வீரர்கள் டோனி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங் ஆகியோரை பிக்பாஷ் லீக்கில் விளையாட வைக்க பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

டோனி, ரெய்னா இருவரும் சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும், ஐ.பி.எல்.தொடரில் சென்னை அணிக்காக விளையாடி வருகின்றனர். இந்த முறை ரெய்னா விளையாடாவிட்டாலும், அடுத்த முறை நிச்சயம் ரெய் னாவை ஐ.பி.எல்லில் ஏதாவது ஒரு அணியில் காணலாம் என்பதால், இவர்களுக்கு பி.சி.சி.ஐ. அனுமதி கொடுக்குமா? என்பது கேள்விக்குறி. அதே சமயம் யுவராஜிற்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. இதனால் அவர் நிச்சயம் விளையாடுவார் என்று கூறப்படுகிறது. டோனி, ரெய்னாவை பிக்பாஷ் லீக் தொடரில் கொண்டுவர முயற்சி நடப்பதாக செய்தி வெளியானதால், இப்போது பிக்பாஷ் லீக் தொடரில் விளையாடும் அணியினர் தங்கள் பக்கம் எடுக்க போட்டி போட்டுக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (4)

# இந்தியா-அவுஸ்திரேலியா கிரிக்கெட் அட்டவணை வெளியீடு




இந்தியா மற்றும் அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்கான, உத்தேச போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், மூன்று இருபது-20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் முடிந்ததும் அவுஸ்திரேலியாவுக்கு புறப்படும் இந்திய வீரர்கள் கொரோனா தடுப்பு நடைமுறையாக சிட்னியில் தனிமைப்படுத்தப்படுவார்கள். அவுஸ்திரேலிய வீரர்களும் அங்கு தனிமைப்படுத்தப்படுவார்கள்.

அச்சமயம் அருகில் உள்ள பயிற்சி மையங்களில் பயிற்சியில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்கள். இந்த முடிவுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சம்மதம் தெரிவித்ததும் அதிகாரபூர்வ போட்டி அட்டவணை வெளியாகும்.

உத்தேச பட்டியலின்படி இந்திய அணி நவம்பர் 27, 29ஆம் திகதிகளில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளை சிட்னியிலும், டிசெம்பர் 1ஆம் திகதி மூன்றாவது போட்டியில் கான்பெராவிலும் விளையாடவுள்ளது.

இவ்விரு நகரங்களிலேயே டிசெம்பர் 4,6 மற்றும் 8 ஆம் திகதிகளில் இருபது-20 போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

இதைத்தொடர்ந்து இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் பகலிரவு டெஸ்ட் போட்டியாக டிசெம்பர் 17 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மெல்பேர்னில் டிசெம்பர் 26 ஆம் திகதியும், ஜனவரி 7ஆம் திகதி சிட்னியிலும், பிரிஸ்பேனில் ஜனவரி 15 ஆம் திகதியும் டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன. (4)

## பல்கலைக்கழக...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளது.

கொரோனா நிலைமை மற்றும் வெட்டுப்புள்ளி வெளியீடு தொடர்பான வழக்கு ஆகியவற்றின் காரணமாக வெட்டுப்புள்ளி வெளியீடு தாமதமடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2019ஆம் வருட பெறுபேறுகள் கடந்த டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 15ஆவது நபரும்...

ணம் நேற்றுக் காலை பதிவாகியுள்ளது.

இவர் 56 வயதான ஆண் நோயாளி ஆவதுடன் குளியாப்பிட்டி, உனலீய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இருதய நோயாளர் என தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## 59 பேருக்கு...

அமைந்திருக்கின்ற இராணுவ பயிற்சி முகாமில் பேலியகொடை பகுதியிலிருந்து 146 பேர் கொண்டு வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் இவர்களில் 20 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு இருந்தது.

இதன் அடிப்படையில் நேற்றைய தினம் பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலும் 39 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இவர்களை கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,281)

## 5 பேருக்கு...

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தலகல மேற்கு பகுதியில் இந்த குடும்பம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுகாதார ஊழியரின் குடும்பமே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டது.

பெண் சுகாதார ஊழியர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து, குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட 70 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனையில் குடும்ப உறுப்பினர்கள் 5 பேர் பாதிக்கப்பட்டது தெரிய வந்தது.

அவரது 12,15 வயதான மகன்களும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களின் 30 முதலாம் நிலை தொடர்பாளர்கள் பிசிஆர் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## பாதுகாப்பற்ற...

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தருமபுரம் கிழக்கு பதினோராம் யுனிட் பகுதியில் நேற்று முன்தினம் திருமண விழாவிற்கு வருகை தந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தருமபுரம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தருமபுரம் கிழக்குப் பகுதியிலே நேற்று முன்தினம் திருமண நிகழ்வு ஒன்றிற்காக தருமபுரம் கட்டகாடு பகுதியில் இருந்து திருமண நிகழ்வுக்கு வருகை தந்த இளைஞன் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் குறித்த இளைஞனை தேடியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த இளைஞன் நேற்றைய தினம் திருமண நிகழ்வு நடந்த வீட்டு வளவில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,316)

## 5 மாவட்டங்களை...

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து கொரோனா வைரஸ் மற்ற மாவட்டங்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது என்பதால், பாதிக்கப்பட்ட 5 மாவட்டங்கள் குறித்து அரசு உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்றார்.

அரசாங்கம் விரைவில் ஒரு முடிவை எடுக்கத் தவறினால், சமீபத்தில் கண்டறியப்பட்ட பேலியகொட கொத்தணி போன்று நாடு முழுவதும் அதிகமான கொரோனா கொத்தணிகள் உருவாகும் என்று சுட்டிக்காட்டினார். (ம-3)

## கிளிநொச்சி...

தியைச் சேர்ந்த யுவதியான பொறியியலாளர் ஒருவரும், வல்வெட்டித்துறையை சேர்ந்த ஆண் பொறியியலாளர் ஒருவருமே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

சாவகச்சேரி யுவதி, கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள விசேட தேவையுடைய சிறுவர் இல்லத்திற்கு சென்று வந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுவர் இல்லம் மற்றும் அங்கு பணியாற்றுகின்றவர்கள் அவர்களின் குடும்பங்கள் ஆகியோர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யுவதியின் தாயார் கடந்த 19ஆம் திகதி யுவதியை சென்று பார்வையிட்டதால், தாயாரும் தாயாருடன் தொடர்பிலிருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வல்வெட்டித்துறை பொறியியலாளர் அண்மையில் சொந்த இடத்திற்கு வந்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே தற்போது கொரோனா தொற்று பரவல் நிலைமையினை கருத்தில் எடுத்து பொதுமக்கள் வெளியில் நடமாடுவதனை முடிந்தளவு தவிர்க்குமாறும், கண்டிப்பாக முகக்கவசம் அணிவதோடு, சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றுமாறும் சுகாதார துறையினர் கோரி வருகின்றனர். (ம-3)

## பணியாளரை...

வழங்குநர்களுக்கு விடுத்துள்ளார்.

பணியாளர் ஒருவருக்கு இருமல், தடிமன் உட்பட்ட குணங்குறிகள் இருக்குமாயின் அவர் ஒரு வாரத்துக்கு வீட்டில் தங்கியிருந்து மருத்துவம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

இந்தநிலையில் அவர் பணியாற்றும் நிறுவனமும் அவரை கண்காணித்து பொது மருத்துவ அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

இதற்கான நிறுவனங்கள் யாவும் தமது நிறுவத்தின் கொரோனா மையம் ஒன்றை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளதாக சுற்றாடல் நிபுணரும் மற்றும் சமூக வைத்திய ஆலோசகருமான வைத்திய கலாநிதி இனோகா சுரவீர கேட்டுள்ளார். (ம-3)

## யாழ். தனி...

மைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒருவர் நேற்று மாலை அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அவர் மது அருந்தும் நோக்கில் தப்பி சென்றதாகவும் அப்பகுதி மக்களினால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தப்பி ஓடிய நபரை மடக்கி பிடித்த ஊர் மக்களையும் அவர்களுடன் தொடர்பினை பேணியவர்களையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார துறையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

## யாழ்...

பட்டிருக்கும் புதிய கட்டடத் தொகுதியில் இயங்கும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஏனைய கிளினிக்குகள் அனைத்தும் பழைய இடங்களிலேயே இயங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவக் கிளினிக்குக்கு வரும் பொதுமக்கள் நேரடியாக விக்டோரியா வீதியினூடாக வைத்தியசாலைக்கு எதிர்ப்புறமாகவுள்ள கட்டடத் தொகுதிக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்ள வருமாறு அவர் தெரிவித்துள்ளார். (ம-3,18)

## நேற்றும் நாட்டில்...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 7 ஆயிரத்து 521 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## 3 பேருக்கு...

அங்கேயே தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட அனைவரிடமும் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இரண்டு பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கடந்த வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் மேலும் 7 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் வல்வெட்டித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த மூவர் அடங்குகின்றனர். ஏனைய நால்வரில் இருவர் மாத்தளையையும் ஒருவர் அம்பாந்தோட்டையையும் மற்றையவர் பலாங்கொடையையும் சேர்ந்தவர்கள் என சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ள னர். (ம-3)

## 27 பேருக்கு...

மற்றும் பேலியகொட மீன் சந்தை யுடன் தொடர்புடைய மேலும் பல தொற்றாளர்கள் தலைமறைவாகியுள்ளதாக சுகா தாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-3)


மெகா பவர்
திகதி 24/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0652
U 2 9 21 49 64

சுபிரி வாசனா
24/10/2020 1546
7 3 32 53 60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24-10-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1066
வெற்றி இலக்கங்கள்
N 0 4 9 1 7 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2580
H 02 28 44 46

மஹஜன சம்பத
திகதி 2020/10/24
சீட்டிழுப்பு இலக்கம் 4285
W 9 7 2 7 6 3

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 378 திகதி 24.10.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 12 51 52 விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,237,904
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை சீட்டிழுப்பு இல: 1081 வர்ணம் : மஞ்சள் சீட்டிழுப்பு திகதி 2020.10.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 80,734,840/-
வெற்றி இலக்கங்கள் 15 37 44 49 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சனிக்கிழமை சீட்டிழுப்பு திகதி : 2020.10.24 சீட்டிழுப்பு இல. : 3411 வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,000,000/-
ரூ. 31,306,250.10
வெற்றி இலக்கங்கள் 14 36 42 70 W
(7836)
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1255 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 24.10.2020 தினம் சனிக்கிழமை
B 02 29 62 72
51,324,181.20
SUPER 500 5 3 6 1

சீட்டிழுப்பு வாரம் 20 சீட்டிழுப்பு திகதி 24/10/2020 செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 25 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 20,061,520

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான், குட்டியபுரம் அபிராமி அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய். (300,000.00).
தரகர் தேவையில்லை.

தொடர்பு குரு : (4453)

**077 998 6806**
**074 075 4204**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், ராச வீதியில் மெயின் றோட்டுடன் 6 பரப்பு ( சீர் செய்யப்பட்ட ) காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.

தொடர்பு குரு : (4453)

**077 468 3354**
**076 640 0974**

## தேவை

தனியார் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் சாரதி ஆண்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஆண்கள் மட்டும் தேவை.
நேர்முகத் தேர்வு 26.10.2020 நாளை 12.00 p.m நடைபெறும். (C-579)

தொடர்புகளுக்கு
சன்றைஸ் மெடிக் கிளினிக்
388, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல. : 021 222 6069

## CHEMISTRY ZOOM CLASS

JAFFNA.

# க. சிவத்திரன்

B.Sc (Hons)

2021 A/L மீள் பரீட்சார்த்திகளுக்கும்
2021 A/L முதல் பரீட்சார்த்திகளுக்கும்
அலகுரீதியான கடந்தகால வினாவிடை

M.C.Q 1979 - 2020
Part II 2011 - 2020

**Daily 5.30 a.m - 7.00 a.m**

ஆரம்பம் : 01.11.2020 - 5.30 a.m

&

**Physical Theory**

Sun, Tue, Fri 7.30 p.m - 9.00 p.m
Wed 6.00 p.m - 7.30 p.m

ஆரம்பம் : 03.11.2020 - 7.30 p.m

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் யாரும் பங்குபற்றலாம்.
இறுதிப் பரீட்சை வரை Zoom இல் தொடரும்.
( 2022 A/L நடைபெறுகின்றது. )

(4460)

NORMAL CALL :- 077 008 6416

## மருந்தாளர் (Pharmacist) தேவை

· யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு உடனடியாக பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் (Pharmacist) தேவை. (4460)

**070 185 6968**

## கணினி திருத்தம்

கணினி, லப்டொப் சிறந்த முறையில் திருத்தித் தரப்படும். சிசிரிவி கமரா பொருத்துதல் சேவையும் பெற்றுக் கொள்ளலாம். (4463)

076 827 5129, 021 222 8797

**PC Garage**
255B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /= Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள் (C-555)

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் (ஆண்கள்) தேவை.

சம்பளம் - 20,000/- தொடக்கம் 35,000/- வரை

தொடர்பு (4296)

**077 375 3503**

## ஜி.எச். ஏ. டி சில்வா அன் கோ

வவுனியா

ஏல விற்பனை

ஜி.எச்.ஏ.டி சில்வா அன் கோ, 64, பசார் வீதி, வவுனியா நிறுவனத்தில் 01.01.2018 முதல் 31.03.2018 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 19.12.2020 இற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாது விட்டால் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 20.12.2020ஆம் திகதி ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களிற்கு அறியத் தருகின்றோம். (4458)

**தொ. இல : 075 046 0460**

## புதிய கல்வியாண்டு 2021இல் ஆரம்பம்




(C-576) Tel : 021 224 1930

சிறுவர்களுக்கான மகிழ்ச்சிகரமான சூழலில் நவீன கற்பித்தல் வசதிகள்

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/= (C-548)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துணுக்காய் மன்னார்/வவுனியா |

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன (C-555)

2022ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**V2 Travels** www.facebook.com/v2tandt

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

Viber 076 636 3378


நாதம் 281

வள்ளுவர் ஆண்டு 2051 25.10.2020 தொலைபேசி : 021 222 3378



# விஸ்வரூபம் எடுக்கும் கொரோனா





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## தென்பகுதி கொரோனா வடக்கிற்கும் வரும்-கவனம்!

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கத்தோடு அமர்ந்தவர்கள் அமைதியாகினர்.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: நாடு பேராபத்தைச் சந்தித்திருக்குது. கொரோனாத் தொற்றுக் கட்டுக்கடங்காமல் பரவத் தொடங்கிற்று. இனி என்ன செய்யப் போறமோ தெரியல்ல.

மூப்பர்: என்ன செய்யிறது. ஒரு புறத்தில கொரோனா; தான்தான் உலகத்தை ஆட்டிப் படைக்கிறன் எண்டு சொல்லுது. மறுபுறத்தில 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தினூடாக ஜனாதிபதி, தானே சர்வவல்லமை பொருந்தியவர் என்பதை நிரூபித்து நிற்கிறார்.

கங்காணி: சர்வவல்லமை எண்ட விடயம் இருக்கட்டும். இப்ப கொரோனாத் தொற்றுப் பேரலையாக விஸ்வரூபமெடுத்து ஆடுது.

பண்டிதர்: மாவட்ட ரீதியிலான போக்குவரத்துக்களை வரையறை செய்திருக்கலாம். அதுதான் இல்லை எண்டால் மாகாண ரீதியிலாவது போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தியிருக்க வேணும். இதைச் செய்யாததால எங்களுக்குத் தான் பேராபத்து வரப்போகுது.

சாத்திரியார்: பண்டிதர் ஐயா என்ன சொல்லுறியள்.

பண்டிதர்: இப்ப கொரோனாத் தொற்று தென் பகுதியில் தாண்டவம் ஆடுது. ஆடைத் தொழிற்சாலை, மீன் சந்தை இப்படியாக தென்பகுதி முழுவதும் கொரோனாத் தாண்டவம் நடக்குது.

இந்த நிலையில தென் பகுதியைச் சேர்ந்த சாரதிகள் வடக்கிற்கு சர்வ சாதாரணமாக வந்து போகினம். இதில ஆருக்குக் கொரோனா இருக்குதெண்டு ஆர் அறிவினம்.

சிறாப்பர்: பண்டிதர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது.

பேலியகொட மீன் சந்தையில கொரோனாத் தொற்றுப் பரவியிருக்குது. இதில அதிர்ச்சித் தகவல் என்னெண்டால், எங்கட யாழ்ப்பாணத்து மீன் வியாபாரிகளும் கூலர் கொண்டு பேலியகொடவுக்குப் போய் வந்ததாகத் தகவல்.

சாத்திரியார்: என்ர பரம சிவம்! அப்ப இங்கயும் கொரோனா பரவப் போகுதோ!

சிறாப்பர்: சாத்திரியார், கொரோனாவைக் கண்டு பயப்பிடுகிறதை விட்டிட்டு முதலில கொரோனா விழிப்புணர்வை எங்கட மக்களிட்ட ஏற்படுத்த வேணும்.

இது விடயத்தில எங்கட மருத்துவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் என அனைவரும் கூட்டாக இணைந்து எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை எங்கட மக்களுக்குத் தெளிவுபடுத்த வேணும்.

வாத்தியார்: உண்மைதான். ஏதோ எங்களுக்குக் கொரோனாத் தொற்று வராது என்பது போல நாங்கள் நடந்து கொள்கிறம். ஆனால் தென்பகுதியில விஸ்வரூபமெடுத்துள்ள கொரோனா கிழக்கிலும் ஆரம்பித்து விட்டிட்டு. இனி வடக்கை நோக்கித்தான் கொரோனா வரும்.

ஆகையால நாங்கள் எல்லாரும் மிகக் கவனமாக இருக்க வேணும்.

விதானையார்: கொரோனாக் கட்டுப்பாட்டை அரசாங்கம் கைவிட்ட மாதிரித்தான் தெரியுது.

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில அரசாங்கம் காட்டிய கவனத்தை கொரோனா விடயத்தில காட்டல எண்டு தான் சொல்ல வேணும்.

பண்டிதர்: சிங்கள டாக்குத்தர் ஒருவர் சொல்லியிருக்கிறார். இலங்கையில பரவியுள்ள கொரோனா வால யுத்தத்தில இறந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகளவானவர்கள் இறக்க நேரிடும் எண்டு.

விதானையார்: கொரோனா எண்ட கொடிய நோய் உலகத்தின்ர ஒழுங்கு நிலையிலேயே பெரும் மாற்றத்தை ஏற்படுத்திப் போட்டுது. உறவுகளிட்ட போக முடியாது, கொரோனா வந்தவர்களைப் பார்க்க முடியாது, இறந்தாலும் இறுதிச் சடங்கையும் செய்ய முடியாது எண்டால் உலக ஒழுங்கு நிலையில மாற்றம் தானே.

மூப்பர்: ஏதோ இறைவன் விட்ட வழி. தர்மம் இழந்து அதர்மம் மேலோங்கினால் கடவுள்தான் என்ன செய்ய முடியும்.

கங்காணி: இந்தாப் பாருங்க. விஜயதசமி இன்று 25 ஆம் திகதியோ அல்லது நாளை 26 ஆம் திகதியோ எண்டு தெரியாமல் சனம் அந்தரிக்குது.

பண்டிதர்: இப்படியான கணிப்புகள் தொடர்பில சிவாச்சாரியப் பெருமக்கள் முன்கூட்டியே கூடி, ஆராய்ந்து ஒரே முடிவை எடுத்து அறிவிக்க வேணும். இதை விட்டிட்டு விஜயதசமி இன்றோ நாளையோ எண்டு வாதம் செய்தால் சனம் என்ன செய்யிறது.

சிறாப்பர்: சாத்திரியார் நீங்கள் என்ன சொல்லுறியள்.

சாத்திரியார்: இந்தியக் கலண்டர்களின்படி நாளை 26 ஆம் திகதி விஜயதசமியும் ஆயுதபூசையும் எண்டு இருக்குது.

ஆனால் எங்கட வாக்கிய பஞ்சாங்கம் இன்று 25 ஆம் திகதி விஜயதசமி, ஆயுத பூசை எண்டு சொல்லுது.

பண்டிதர்: அப்ப சாத்திரியார் இன்று விஜயதசமி எண்டால் நவமியிலேயோ ஏடு தொடக்குகிறது.

சாத்திரியார்: பண்டிதர் ஐயா வேதவிற்பன்னர்களும் வேதசாஸ்திரிகளும் தான் இதுவிடயத்தில முடிவு செய்ய வேணும்.

இப்ப பாருங்க வடபகுதியில கட்டப்பட்ட பெரும்பாலான வீடுகள் வாஸ்து சாஸ்திரத்திற்கு முரணாகக் கட்டப்பட்டிருக்குதாம்.

விதானையார்: இதென்ன இடி விழுந்த கதையாகயிருக்குது.

சாத்திரியார்: ஈசான மூலை உயர்ந்திருக்கக் கூடாது எண்டு வாஸ்து சொல்லுது. ஆனால் நாங்கள் தண்ணீர்த் தாங்கியை ஈசான மூலையிலதானே கட்டியிருக்கிறம்.

வாத்தியார்: எனக்குத் தெரிந்தமட்டில இந்தியாவில அக்கினி மூலையில தன் சமையலறை அமைக்கினம். ஆனால் நாங்கள் ஈசானத்தில சமையலறை கட்டியிருக்கிறம். இது வாஸ்துவுக்குப் பிழையாம்.

மூப்பர்: அதுதான் நானும் பார்க்கிறன். இப்ப கட்டிற புது வீடுகளில குசினி அக்கினி மூலையிலும் தண்ணீர்த் தாங்கி நிருதி மூலையிலும் அமைக்கப்படுகுது.

சாத்திரியார்: இதுதான் பிரச்சினை. எங்களிட்ட சாஸ்திரங்களைக் கற்றறிந்தவர்கள் வலு குறைவு.

வாத்தியார்: அப்ப ஆலடியில நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

கங்காணி: என்ன தீர்மானம் வாத்தியார்.

வாத்தியார்: நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு, கௌரிகாப்பு இப்படியான விரதங்களை சரியாக நிர்ணயம் செய்யிறது தொடர்பில எங்கட சிவாச்சாரிய வேத விற்பன்னர்கள் ஒன்று கூடி ஒரு நிறுத்திட்டமான முடிவை எடுத்து அதை மக்களுக்கு அறிவிக்க வேணும் என்ற தீர்மானத்தை எடுப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் அந்த தீர்மானம் ஆலடியில் ஏக மனதாக நிறைவேற, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஜனாதிபதிக்கான மிகுநிலை அதிகாரம் இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்தும்









இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு என் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை என்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவர் அந்த நாட்டின் சமகாலத்து ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்ட விடயம் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இருந்தும் அந்தவிடயம் ஊடகங்களில்கூட முக்கியத்துவம் பெற முடியாமல் போயிற்று என்பதை நினைக்கும் போது தான் நம்நாட்டு மக்கள் பொருளாதாரத்தில் மட்டுமன்றி, நியாயத்தை நிலை நாட்டுவதிலும் பின்னிற்கின்றனர் என்பது தெரியவருகிறது.

உண்மையில் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில், என் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை எனக் குறிப்பிட்ட விடயம் இலங்கை தவிர்ந்த வேறு எந்த நாட்டில் நடந்திருந்தாலும் அது உலக அரங்கில் மிகப் பெரும் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

ஆனால் அஃது நடந்தது இலங்கையில். இங்கு பௌத்த பிக்குகளிடம் கூட தர்மமும் மனச்சாட்சியும் இல்லை என்றபோது, அந்த விடயம் நம் நாட்டில் முக்கியத்துவம் பெறுவதற்கான வாய்ப்பில்லை என்றே கூறவேண்டும்.

எதுவாயினும் என்றோ ஒரு காலத்தில் மைத்திரிபால சிறி சேன எழுதிய கடிதம் இந்த நாட்டு மக்களால் கவனிக் கப்படுவதாக இருக்கும் என்பது மட்டும் உண்மை.

இவை ஒருபுறமிருக்க, 19 ஆவது திருத்தச் சட்டமூல்த்தின் விதப்புரைகளை மறுத்துரைக்கின்ற இருபதாவது திருத்தச் சட்டமூலம் தனிமனிதருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை வழங்கியுள்ளது.

இந்த நாட்டின் ஜனநாயகத்திற்குத் துரோகம் இழைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1978 இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த ஆட்சிமுறைக்கு ஆதரவு கொடுத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பது ஞாபகப்படுத்தற்குரியது.

அதிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆதரவு வழங்கியதில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என்பது பதிவிற்குரியது.

இதில் வேடிக்கை என்னவெனில், ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியில்; பிரதமர் பியோன் என்று கூறிய ஆர்.பிறேமதாஸ, தான் ஜனாதிபதியாக வந்தபோது, நிறைவேற்று அதிகாரத்தை வலுக் குறைக்கவோ பிரதமரின் பதவிக்கு உயர்வைக் கொடுக்கவோ நினைக்கவில்லை. இவை கடந்தகால நிலைமை.

இந்த நிலைமைகளை சீர்தூக்கி ஆராய்கின்ற போதுதான் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் நரித்தந்திரத்திற்கு முதலில் பலிக்கடாவானது ஐக்கிய தேசியக் கட்சி என்ற உண்மை தெரியவரும்.

ஆம், கடந்த பொதுத்தேர்தலில் ஒரு நியமன ஆசனத்தைத் தவிர, ஐக்கிய தேசியக் கட்சியால் எந்த இடத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது அந்தக் கட்சியின் ஊழ்வினைப் பயன் என்று கூறுவதைவிட வேறு எதுவுமில்லை.

எதுவாயினும் ஜே.ஆரின் சிந்தனை இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு ஏற்படவே செய்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்குறித்த விடயத்தில் வித்தியாசமாகச் செயற்பட்டார். எனது அதிகாரத்தைக் குறைப்புச் செய்வதற்காக உங்களின் ஆதரவைக் கேட்கிறேன் என 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டு வந்தபோது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார்.அவரின் ஜனநாயகப் பற்று 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை வெற்றியடையச் செய்தது.

என்னசெய்வது, ரணில் விக்கிரமசிங்கவின் கபடத்தனமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வஞ்சகத்தனமும் சேர்ந்து மைத்திரியை வஞ்சிக்க அவர் தன்னிலை மீறவேண்டியவராக மாறினார். அதன் விளைவுதான் இருபதாவது திருத்தச்சட்ட மூலம்.

இனி நிலைமை வேறுவிதமாகவே இருக்கும். அதாவது ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆரம்பித்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியுடன் முடிவுக்கு வந்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் அது மீண்டும் வக்கிரம் பெறுகிறது.

பொதுவில் கிரகங்கள் வக்கி ரமடைவது உக்கிரமான செயலை ஏற்படுத்தும் என்பது ஜோதிடக் கணிப்பு.

இங்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குக் கிடைத்துள்ள மிகு நிலை அதிகாரம் இராணுவக் கட்டமைப்பை பலப்படுத்துவதாகவும் எங்கும் எதிலும் இராணுவ வகிபங்கு என்பதை நிலை நிறுத்துவதாகவும் அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் நிறைவேற்று அதிகாரத்தில் ஒருவர் இரண்டு தடவைகளே ஜனாதிபதியாக இருக்கலாம் என வரையறுக்கப்பட்டிருந் தது.

ஆனால் எதிர்வரும் காலத்தில் தேர்தல்கள் நடந்தால் நல்லது என்ற நிலைமை ஏற்பட்டாலும் அது குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆக, அரங்கேறியுள்ள இருபதாவது திருத்தச் சட்ட மூலம் இலங்கையில் இராணுவ ஆதிக்கத்தை வலுவடையச் செய்யும் என கணிப்பிடுவதில் நியாயமுண்டு.

**விதுரன்**



# சிறுவர் அரங்கம்



## காக்கா கதை

முன் ஓர் ஊரில் ஒரு பாட்டி ஒரு மரத்தடியில் வடை சுட்டு விற்றுக் கொண்டிருந்தார். ஒருநாள், ஒரு காக்கா அந்த மரத்தில் வந்து அமர்ந்தது.

வடையின் மணம் காக்காவின் மூக்கைத் துளைத்தது. எல்லோரும்வடையை வாங்கித் தின்றார்கள். காக்காவிற்கு வடை சாப்பிட மிகவும் ஆசை.

பாட்டியிடம் காக்கா உனக்கு உதவியாக வேலை செய்கிறேன். ஒரு வடை தருவாயா? என்று கேட்டது. பாட்டி உன்னால் எனக்கு என்ன வேலை செய்ய முடியும் என்று கேட்டார்.

அடுப்பு எரிக்கக் காய்ந்த சுள்ளி விறகு கொண்டு வந்து கொடுக்கிறேன்என்றது காக்கா. பாட்டி சரி என்றார்.

காக்கா பறந்து சென்று காட்டில் கிடந்த விறகுக் குச்சிகளை வாயில் கவ்வி எடுத்து வந்தது. இதுபோல பல முறை சென்று விறகுக் குச்சிகளைக் குவித்தது. பாட்டி மகிழ்ந்து போனார்.

இந்தா என்று ஒரு வடையை நீட்டினார் பாட்டி. காக்கா வடையை வாயில் கவ்விக் கொண்டு அதன் கூட்டிற்கு சென்றது.


அந்தப் பக்கமாய் ஒரு நரி வந்தது. காக்கா வாயில் இருக்கும் வடையை நரி பார்த்து அந்த வடையைப் பறித்துக்கொள்ள நினைத்தது. உடனே அது காக்காவைப் புகழத் தொடங்கியது.

காக்கா, ஆகா, எத்தனை அழகு நீ! உன் ஒருச்சாய்ந்த கண்ணும், கருகரு மேனியும்... அடடா, அழகே அழகு. உன் குரலும் இனிமையாகத்தான் இருக்கும். எங்கே, உன் இனிமையான குரலில் ஒரு பாட்டுப் பாடேன் என்று இதமாய்க் கேட்டது. புகழ்ச்சிக்கு மயங்கிய காக்காவும், வாயில் இருந்த வடையை மறந்து, கா, கா... எனப் பாடியதும் வடை கீழே விழுந்தது. நரியும் வடையைக் கவ்விக்கொண்டு ஓடியே சென்றுவிட்டது. காக்கா ஏமாந்துவிட்டது.

**நீதி : ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றிக் கொண்டுதான் இருப்பார்கள்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஜூலை-26




பொழுது விடிவதற்கு இன்னும் அரை மணியோ அல்லது ஒரு மணியோ இருந்தது. மாசிடோனிய மன்னர் பிலிப் பூஜையறையில் மௌனமாகப் பிரார்த்தனை நடத்திக் கொண்டிருந்தார்.

சூரியன் சோம்பல் முறிப்பதற்கு முன்னர் பூஜை செய்துவிட வேண்டும் என்பது மாசிடோனியர்களின் உதிரத்தோடு கலந்துவிட்ட விடயம். இதில் மக்கள், மன்னர் என்று எந்தப் பாகுபாடும் இல்லை.

அறைக்கு வெளியே பயபக்தியோடு மூத்த படைத்தளபதி பார்மீனியோ மற்றும் அமைச்சர்கள், இளைய தளபதிகள், சேனாதிபதிகள்.

பூஜை மன்னர் தினமும் செய்வதுதான். ஆனால் அன்று மட்டும் கொஞ்சம் கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டிருந்தார்.

அதற்குக் காரணமும் இருந்தது. இல்லீரியா நகரின் மேல் படையெடுக்க மாசிடோனியப் படைகள் தயாராக இருந்தன.

ஆகவேதான் இறைவனிடம் சிறப்புப் பிரார்த்தனை, கூடுதல் கோரிக்கைகள். மக்கள் மன்னனிடம் கோரிக்கை வைப்பார்கள்.

மன்னர் இறைவனைத் தவிர வேறு யாரிடம் கோரிக்கை வைப்பார்? வேண்டுதல் தன்னுடைய வெற்றிக்காக. தன்னுடைய வீரர்களின் வெற்றிக்காக. மாசிடோனியாவின் வெற்றிக்காக.

பூஜை முடிந்து மன்னர் பிலிப் வெளியே வந்தார். அமைச்சரும் பிரதானிகளும் எழுப்பிய வாழ்த்துக் கோஷங்கள் அவரது செவிகளில் நிறைந்தன. அரண்மனை வாசலை அடைந்தார். அவருடைய குதிரை தயாராக நின்று கொண்டிருந்தது. தாவி ஏறினார்.


அவருக்குள்ளிருந்த வேகம், குதிரையின் பாய்ச்சலில் பிரதிபலித்தது. சில நிமிடங்களில் போர்க்களம் அவரது இருவிழிகளில் நிறைந்திருந்தது.

மாசிடோனியப் படைகள் காத்திருந்தன மன்னருடைய உதட்டசைவுக்காக. அசைத்தார் தொடங்கியது யுத்தம்.

இருதரப்பினரும் கடுமையாக மோதிக் கொண்டனர். சேதங்கள் இழப்புகள், உயிர்ப்பலிகள் இருபக்கமும்தான். ஆனால் இல்லீரியாவுக்கு கொஞ்சம் கூடுதல். அதுதான் மன்னர் பிலிப்பின் ஆளுமை.

ம்... வேகமாக முன்னேறுங்கள். உத்தரவிட வேண்டிய இடத்தில் உத்தரவிடுவார். சபாஷ் அப்படித்தான் வளைத்துப் பிடித்துத் தாக்கு. உற்சாகப்படுத்த வேண்டிய இடத்தில் உற்சாகப் படுத்துவார். அவருடைய வீரர்களுக்கு அவர் உதிர்க்கிற ஒவ்வொரு வார்த்தையும் மந்திரச் சொற்கள்.

(தொடரும்)








விஜய் சேதுபதியின் 800 திரைப்படம் பற்றி தங்களின் கருத்து என்ன வியாசரே?

பிரச்சினைகள் நிறைந்தததுதான் வாழ்க் கையா வியாசரே? பிரச்சினை இல்லா மல் இருக்கவே முடியாதா?

பிக்போஸ் பார்ப்பீர்களோ? அதைப் பற்றி எதுவும் பேசுகிறீர்கள் இல்லையே ஏன்?

**கணபதிதாசன் — கட்டைக்காடு**

**ஒன்றுபடும் தமிழ் கூட்டமைப்புக்குள் மீண்டும் எட்டப்பர்கள் புகுந்தால்?**

காலில் ஒரு சிறு நெரிஞ்சி முள் குத்தினால் உடனடியாக ஊசி எடுத்து அதை குத்தி அகற்றி விட வேண்டும்.

அப்படிச் செய்யாமல் விடுமாக இருந்தால் அது உள்ளிருந்து சீழ்கட்டி கால் முழு வதையும் பாதிக்கச் செய்துவிடும்

எதையும் ஆரம்பத்தில் செய்து முடிப்பது தான் நல்லது. பொறுத்திருந்து பார்ப்போம் என்றால் அதன் விளைவும் வீரியமும் மிக மோசமானதாக அமையும் என்பது மட்டும் உண்மை.

இப்போது சொல்லுங்கள் முள்ளை உடன் எடுப்பதா? இல்லை சீழ்கட்ட விடுவதா?

**சுதன் — குப்பிழான்**

**இங்கிலாந்து நீதிமன்றத் தீர்ப்பை அந்நாட்டு அரச பீடம் ஏற்குமா?**

ஏற்கிறதோ இல்லையோ நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதே. உண்மை யில் இது புலம்பெயர் தமிழரின் முயற் சிக்குக் கிடைத்த வெற்றியே.

புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி அவர்கள் செய்த போராட்டங்களுக்கும் பட்ட பாட்டிற்கும் ஒரு தீர்வு கிடைத்திருக்கிறது.

பொறுத்திருந்து பார்ப்போமே இனி என் னென்ன நடக்கப் போகின்றன என்பதை.

**இந்து — வவுனியா**

**பிரச்சினைகள் நிறைந்ததுதான் வாழ்க் கையா வியாசரே? பிரச்சினை இல்லா மல் இருக்கவே முடியாதா?**

சன நெரிசல் மிக்க சந்தி ஒன்றில் எந்தவித சமிக்ஞையும் இல்லாமல் நான்கு திசையி லும் இருந்து வரும் வாகனங்கள் தன்பாட்டில் மிகவும் இலகுவாக விலகிச் செல்வதை நீங் கள் அவதானித்திருக்கிறீர்களா?

இதுதான் வாழ்க்கை. வரும் வாகனங்க ளு க்கு வழி விடுவதனூடே விபத்துக்கள் தவிர்க் கப்படுகின்றன. இல்லை நீ எப்படி என்னை முந்துவாய் என்று மல்லுக்கட்டினால் விபத் துத்தான் வரும்.

வரும் பிரச்சினைகளை விலக்கி விடுவதே வாழ்க்கை என்பதை மனதில் கொண்டால் போதும். வாழ்வு சுலபமாகி விடும்.

**ஜானுஜன் — குப்பிழான்**

**விஜய் சேதுபதியின் 800 திரைப்படம் பற்றி தங்களின் கருத்து என்ன வியா சரே?**

அதுதான் நன்றி வணக்கம் என அனைத் திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டாரே விஜய் சேதுபதி.

800 திரைப்படத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பி னூடே முரளிதரன் ஒரு தெளிவான மன நிலைக்கு வந்திருப்பார் என்பது உண்மை.

முரளிதரன் போன்ற பிரபலங்கள் வார்த் தையினை விடும் போது மிகவும் அவ தானமாகவும் நடுநிலையாகவும் இருக்க வேண்டும்.

அது எந்த தனிமனிதரையும் திருப்திப் படுத்தும் வகையிலும் அமைந்துவிடக் கூடாது.

ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு வன் எப்படி சாதனையாளன் ஆனான் என்பதே 800 திரைக்கதை.

அருமையான கதைக் களத்தைக் கொண்ட திரைப்படம் முரளிதரனின் அந்த ஒற்றை வார்த்தையினால் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதே.

**வியாசர் பதில்கள்**

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**ஆகாஸ் — எழுதுமட்டுவாழ்**

**பிக்போஸ் பார்ப்பீர்களோ? அதைப் பற்றி எதுவும் பேசுகிறீர்கள் இல் லையே ஏன்?**

ஓவியாவின் இழப்பிற்குப் பிறகு பிக்போஸ் பார்ப்பதில்லை.

இப்போது கொஞ்சம் பிக்போஸ் பக்கம் கவ னம் இருக்கிறது.அட நம்ம கனவுக்கன்னி ஷிவானி இருக்கிறாரே அதுதான்.

**கஜா — யாழ்ப்பாணம்**

**மனித வாழ்வைத் தீர்மானிப்பது விதியா?, சதியா?**

விதி கடவுளினால் தீர்மானிக்கப்படுகிறது. சதி எம்முடன் கூட இருப்பவரினால் தீட்டப் படுகிறது.

விதியை பரிகாரங்களால் வென்று விட லாம்.

சதியை எவராலும் வென்றுவிட முடியாது. ஏனென்றால் சதி நம்பிக்கையுடன் இருக் கும் ஒருவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து வீழ்த்தப்படுவது.

சதி செய்வார் நரகம் செல்வார் என்பது மட்டும் உண்மையானது.

**தாரா — யாழ்ப்பாணம்**

**எங்கு பார்த்தாலும் போலி முகங்கள் தான் தெரிகின்றன. எப்படி இந்த சமூ கத்தில் வாழ்வது என்றே தெரியவி ல்லை வியாசரே?**

இந்த உலகில் வாழும் மனிதர்கள் ஒவ்வொரு வரும் முகமூடியுடன்தான் அலைகிறார்கள்.

அந்த முகமூடி எப்போது கிழிக்கப்படும் எனத் தெரியாது.

அந்த முகமூடி கிழிந்த பின்பு அட இவரா இப்படி? என்று ஆச்சரியப்படுவீர்கள்.

இப்போது கூட முகக்கவசம் (முகமூடி) அணி ந்து உலவும் மனிதர் தமக்குள் இன்னொரு முகமூடியை மறைத்து வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இதைப் புரிந்து கொண்டால் வாழ்வு பெரிய கஷ்டமாக இருக்காது.

**ரங்கன் — கிளிநொச்சி**

**வியாசரே உங்களுக்கு எதிரியாக நீங் கள் யாரைப் பார்க்கிறீர்கள்?**

எதிரி என்பவன் நெஞ்சில் குத்தக் கூடியவன். அவன் எப்போதும் நமக்கு முன்தான் நிற் பான். அதனால் அவனை எதிர்கொள்வது மிகவும் சுலபமானது.

துரோகிகள் எப்போதும் நம் முதுகுக்குப் பின்னே நிற்பார். அத்துடன் துரோகி எப்போ தும் நம்முடனேயே இருப்பார்.

ஆதலால் எதிரிகளை விரும்புகிறேன், துரோ கிகளை வெறுக்கிறேன்.

நீங்கள் நினைக்கும் அளவிற்கு எதிரி எனக்கு இன்னமும் உருவாகவில்லை என்பதே உண் மையானது.

## எழுந்து வா தமிழா

தமிழகத் தாய்மடியில்
தான்தோன்றித்தனம் உயர்த்த
தன்னுயிரை தலைநிமிர்ந்து
தியாகிக்கத் துணிந்த தமிழனே
வேற்றின வேங்கையர்
வெள்ளையர் நட்புணர்ந்து
வீரம்மிக்க வினையர்களை
வீழ வைத்தது ஏனோ?
தன் இனத் தாயகத்தை
தம் வசப்படுத்த தன்னுயிரை
இழந்த தமிழர்களை இனவாதிகள்
எனக்கூறியது ஏனோ?
உலகம் போற்றும்
வயதில் உயிரை
நீக்கி உயர்வு
பெற வைத்தது ஏனோ?
ஆண்டுகள் பல
அலைந்தோடினாலும் ஆருயிர்
உறவுகளின் துயரங்கள்
ஆறாதது ஏனோ?
மாற்றமொன்றே மாறாதது என
பலர் சொல்லி இளைத்திலும்
என்னினத் துயரமொன்றே
அதற்கெதிராய் இன்னும் ஒலிக்கின்றது
மாற்றம் வேண்டிய வீரத்தமிழா
நீ ஒலிக்கும் குரல் ஒன்றே
உன்னினத்தின் தலைவிதியை
மாற்றும் குரலாகும்
எழுந்துவா தமிழா எழுந்து வா

கு.விதுஷன்
யா/ கீரிமலை
மெ.மி.த.க.பாடசாலை

## இன்பத் தமிழ்




எங்கள் தமிழ் இன்பத் தமிழ்- இதற்கு
ஈடான மொழியுண்டோ பாரினில்
திங்கள் அழகும் தேன்தன் சுவையும்
திரண்டதனாலே அது தீந்தமிழாகும்

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தான்
வங்கக் கடலில் ஆட்சியமைத்தான்
பொங்கி எழுந்து புலிக்கொடி ஏற்றினான்
தன்மானம் உள்ள தமிழனாய் திகழ்ந்தான்

கனிவுடனே காதல் கருணையும்
துணிவுடன் பெருகும் வீரமும்
புறமுதுகு காட்டாத புறத்திறனையும்
அன்பு பெருக்கெடுக்கும் அகத்திணையும்

மூவேந்தன் தாலாட்டி முப்பாட்டன் பாலூட்டி
முத்தமிழாய் முது அழகாய் வளர்த்த பிள்ளை
உலகம் பூராய் இன்று முளைத்த பிள்ளை
மூன்று எழுத்து மொழிக்கு அவனியிலே அழிவுமில்லை

வள்ளுவனார் கம்பருடன் பாரதியும்
தெள்ளு தமிழ் தெளிந்த பாவலரும்
கள்ளுண்ட சொல்லுண்டு தமிழுக்கென்று
கண்டறிந்து கொள்வாரே உலகுக்கன்று

உலகம் பூராய் உயர்ந்த தமிழ்
இலங்கையிலே தாழ்ந்திடுமோ
உயிரைக்கொடுத்து தமிழ் வளர்த்தான்
உன்னினத்தைக் காத்த மா தலைவன்

அராலியூர் ப.தர்மகுமாரன்

## மானிடனே நலம் பெற்றிடு

உடற்காப்பும் உளக் காப்பும்
இரு கண்கள் உனக்கு...
மனம் விட்டுப் பேசு மனிதனாய் வாழ்...
கொதித்தெழுந்து வாழ்ந்திடாதே
அது உனக்குக் கொள்ளியே...

ஆத்திசூடி கொன்றைவேந்தன்
ஆணித்தரமான விழுமியங்கள்
நல்வழி திரிகடுகம்
நலமான வழிகாட்டிகள்...
இவற்றை நீ வீணடித்தாய்
உன் வாழ்வை விழுங்கிவிட்டாய்

சொந்த பந்தம் சேர்ந்து
சோதியாய் வாழ்ந்தால் சுகமே...
சிரித்துப் பேசி வாழ்ந்தால்
உன் வாழ்வும் சீர் பெறுமே!

இயற்கை உணவுகளை உண்டு
ஆயுள் பெருக வாழ்ந்திடு...
செயற்கை உண்கின்றாய்
உன் இதயம் வெடிக்கின்றது
பாதியில் வீழ்கின்றாய்...

இயற்கையோடு இணைந்துவாழ்
அதில் இறைவனைக் கண்டுவாழ்...
செயற்கையோடு சேர்கின்றாய்
கொடிய நோய்கள் உனக்கு
தனி வழியில் இடிந்து போகின்றாய்...

முதுமொழியை முதுசமாய்க் கொள்
நீ முன்னேற்றமாய் வாழ்வாய்...
இயந்திரமாய்ச் சுழலாதே-மானிடா
வெடித்துச் சிதறிவிடுவாய்...

த.ஐங்கரதீபன்
பூநகரி

## இலட்சியப் பாதை

துரோகங்களுக்குப் பதில்
துரோகங்களை வழங்கும்
துவேசத்தைத் தூக்கி வீசு

அன்பு ஒன்றே
இந்த உலகின் ஆதாரம்
இதை ஆயுள்வரை கடைப்பிடி

பூக்கள், பிடுங்கப்படுவதனாலேயே
கடவுளின் பாதங்களைச்
சேருகின்றன.
இல்லையேல்
உதிர்ந்து உருமாறி
மீண்டும் மண்ணுடன் சேரும்

வாழ்க்கை என்பது
வாழப் பழகுவதே- தவிர
வாழ்ந்து முடிப்பதல்ல

உன் வாழ்க்கை
உன் பழக்கம்
இந்த உலகிற்குப்
பாடமாக இருக்கவேண்டும்
இதை இதயத்தில் வைத்துக்
குத்திக் கொள் இலட்சியமாய்...!

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 500



## கலங்காதே தம்பி

கண்கள் கலக்கமுற
கையில் எதனை வைத்து
கனிவோடு
பார்க்கும் உன்
கவலை என்ன
சொல்லப்பா
கலங்காதே தம்பி
காலம் இருக்கு
கற்றறிந்த
நான்கு பேர்
கை கொடுப்பார்
கவலையை விடு
எதிர்காலம்
உனது பக்கம்

கணபதிதாசன்
கட்டைக்காடு

## வாலிபப் பருவம் உனை வாழ வைக்கும்

தம்பி! விழிகளில்
நீர்மல்க கிடைத்த உணவு
உன் பசி தீர்க்க உதவியது
பெற்றோரை இழந்தாயா? இல்லை
காணாமல் ஆக்கப்பட்டனரா?
காலன் எடுத்தானா?
கயவர் மறைத்தனரா?
நீயோ ஏதிலி ஆனாயா?
எதுவாகிலும்
விழிநீரை போக்கிவிடு
விழித்து எழு
உன் வாலிபப் பருவம்
உனை வாழவைக்கும்
எதிர்காலம் உனக்காக
உழைத்து உயர
உலகம் போற்ற வேண்டும்

அபிகுலமாலிகா
சித்தங்கேணி

## போதும் இறைவா

உண்ண அன்னம் இருந்தும்
உலகறிய உடலுமிருந்தும்
உயிரொன்றை இழந்து
அநாதரவாகி
இமைகளின் ஓரம்
விழிநீர் சிந்தும்
இப்பச்சிளத்தின் ஏக்கத்தை
எவரறிவாரோ?
பொல்லாத எமதர்மன்
அறிவான் போலும்
போதும் இந்த
அவஸ்தை போதும்
என்மீது கொண்ட
கோபங்கள் போதும்
உம் கடிதங்கள் போதும்
இறைவா பொறுமைக்கும்
எல்லையுண்டல்லவோ?

வி.டிலக்ஷன்
யா/ தும்பளை
சிவப்பிரகாச ம.வி.

## போற்றும் நெஞ்சம்

பசியால் துடித்த இந்த
ஏழைச்சிறுவனுக்கு
உணவளித்த புண்ணியவானே!
நாம் நன்றி பாராட்டி
உன்னைப் போற்ற
நம் தமிழில் வார்த்தைகள்
போதவில்லையடா

சு. ஜெயரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல் –501



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வீண்பழி சுமந்த மண்

பாண் துண்டு கையில்
புசித்திட முன்பே
பாயும் கண்ணீரால்
நனையுதாமோ
வீண்பழி சுமந்த மண்
வேதனையில் தாய் தந்தை
பிரிந்த தளரா நிலையோ
சாதனை விளைக்கும்
சகோதரரை
சதி செய்து
வீழ்த்தினரோ

த.சிவகாமி
நல்லூர்

## உணவும் உணர்வும்

பசியோடிருந்த பொழுதுகள்
நினைவில் வலம் வருகையில்
உணவு கிடைத்தாலும்
உண்ண முடியவில்லை
நீரையே உணவென்று
நினைத்த நாளுமுண்டு
கொடுமையிலும் கொடுமை
இளமையில் வறுமையென்னும்
ஔவைப் பாட்டியின்
பொருள் பொதிந்த வாசகத்தை
எண்ணினுமருவியாய்
கண்ணீர் சொரியும்

க.நாகராசா
நுணாவில்

# கொரோனா வைரஸ் தாண்டவத்திற்கிடையில் நிறைவேறிய 20 ஆவது திருத்தச் சட்டம்

> "கொரோனாவின் கொடுக்குப்பிடிக்குள் சிக்குண்டிருக்கும் இவ்வேளையில் அவசர அவசரமாக 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னணி என்ன என்ற குழப்பம் மக்களிடம் இருக்கவே செய்கிறது

கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையில் தாண்டவம் ஆட ஆரம்பித்துவிட்டது என்று கூறுமளவில் வந்துவிட்டது.

இவ்வளவு காலமும் இரண்டு, மூன்று என்ற எண்ணிக்கையில் இருந்த கொரோனா வைரஸின் தாக்கம் பிராண்டெக்ஸ் ஆடைத் தொழிலகத்தின் தொற்றுடன் அதிகரிக்கத் தொடங்கி இப்போது நாளொன்றுக்கு 866 என்ற நிலைக்கே சென்று கொண்டிருக்கிறது. அதன்விளைவு இன்று 7 ஆயிரத்து 153 எனும் கொரோனா தொற்றாளர்களை இலங்கை பதிவு செய்துள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய நாடுகள் பட்டியலில் மிகச் சிறந்த இடத்தில் இருந்த இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டுத் தெரிவித்திருந்தது.

மிகவும் சிறிய நாடு, அபிவிருத்தி அடைந்து வரும் நாடு. ஆனாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் அல்லாட, மிகவும் திறம்பட இலங்கை கொரோனா வைரஸை கட்டுப்படுத்தியிருந்தது.

உலக சுகாதார நிறுவனத்தின் பாராட்டுக்கு இது ஒரு காரணமாக அமைந்திருந்தது.


ஆனாலும் யாரும் எதிர்பார்க்காத வகையில் பிராண்டெஸ் ஆடைத் தொழிற்சாலை தொற்றுடன் சடுதியாக சமூகத் தொற்றாக உருமாறியது கொரோனா வைரஸ்.

தற்போது இலங்கையின் 13 மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

உலகின் வல்லரசு நாடுகளே கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில் மிகவும் சிறந்த நிலையில் இருந்த இலங்கையில் கொரோனா ஆழ ஊடுருவ தொடங்கிவிட்ட நிலை என்பது அபாய நிலை என்றே கூற வேண்டும்.

இது இவ்வாறு இருக்க, கடந்த 22 ஆம் திகதி 20 ஆவது திருத்தச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் அளவில் அதிகாரங்கள் இருக்கும் நிலையில் இந்த அதிகாரங்களைக் குறைக்கிறேன் எனக் கூறி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.



18 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து ஜனாதிபதியின் பல அதிகாரங்களைக் குறைத்து 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றவும் செய்தனர்.

தனிமனிதருக்கு அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளது எனக்கூறி அந்த அதிகாரங்களைக் குறைந்தமை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சுயநலம் எனவும் இவை அனைத்தையும் மாற்றி 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவோம் எனக்கூறிய கோட்டாபய மக்களின் ஆணையுடன் ஜனாதிபதி ஆனார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கும் சில விடயங்கள் நாட்டின் இறையாண்மைக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் விடயம். குறிப்பாக வெளிநாட்டு குடியுரிமையுடைய ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகும் வகையில் 20 ஆவது திருத்தச் சட்டம் வரையப்பட்டமை நாட்டின் பல்வேறு தரப்பினரிடையேயும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தமையினை அவதானிக்க முடிந்தது.

அந்தவகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவரும் இனவாதம் பேசுவதில் பட்டம் பெற்றவருமான விமல் வீரவன்ச இவ்விடயத்தை கடுமையாக எதிர்த்தமையினை பார்க்க முடிந்தது.

அண்மைய அவரின் அறிக்கைகள், பேச்சுக்கள் என்பன மிகவும் கடுமையாக இருந்தமை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடுப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மை.

குறிப்பாக 20 இல் வெளிநாட்டு குடியுரிமை கொண்ட ஒருவர் பாராளுமன்றம் வரமுடியும் எனும் விடயம், ராஜபக்ஷக்களில் ஒருவரும் பொதுஜன பெரமுனவின் மூளையுமான பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றம் கொண்டுவரும் செயற்பாடு எனவும் அதற்கு கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டு வந்தார்.

அதைவிட 20 தொடர்பில் நாட்டில் மகிந்த, கோட்டாவை ஆதரிக்கும் பலர் எதிர்ப்பைத் தெரிவித்தமையும் அதில் ஏதோ தவறு இருக்கின்றது என்பதை சுட்டி நிற்கிறது. 20 ஆவது திருத்தச் சட்டம் நாட்டிற்கு உகந்ததல்ல. அதனை நிறைவேற்ற வேண்டாம். எம்மை மீறி நிறைவேற்றினால் பாரிய விளைவைச் சந்திக்க வேண்டி வரும் என பௌத்த மகா சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்திருந்தும் 20 நிறைவேற்றப்பட்டிருக்கின்றது எனின் அது சர்வசாதாரணமான விடயமன்று.

20 குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து ஜனாதிபதியின் பல அதிகாரங்களைக் குறைத்தவர் என்ற அடிப்படையில் 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க எனது மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

நல்லாட்சியில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பேன் என்று கூறி சொன்னதை செய்து காட்டிய மைத்திரிபால சிறிசேன நல்லாட்சியின் முறிவின் பின்னர் மீண்டும் மகிந்தவுடன் இணைந்து கொண்டு தனது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார்.

அதன்விளைவு நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். ஆனாலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படாமை கவனிக்கத்தக்க விடயமாகும்.

ஆக, நாட்டின் பலரும் 20 குறித்து எதிர்க்க அதையும் மீறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேறியது 20.

நாடு கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு பெரிதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் அதனைக் கட்டுப்படுத்துவதைவிடுத்து 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுமளவில் அவசரம் ஏன்? என்ற கேள்வி பலதரப்பினரிடம் இருக்கவே செய்கிறது.

எதுஎவ்வாறாயினும் 20 மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நாட்டில் பல்வேறுபட்டவர்களின் அதுவும் பௌத்த மஹா சபையினரின் எதிர்ப்பையே மீறி நிறைவேற்றப்பட்டிருக்கிறது எனின் அரசாங்கத்திற்கு அது மிகவும் முக்கியமான ஒரு விடயமானதாக இருக்கிறது.

20 ஆவது திருத்தச்சட்டம் மக்களின் ஆணை என அரசதரப்பு காரணம் கூறி வந்தாலும் உலகையே திக்குமுக்காட வைக்கும் கொரோனாவின் கோரப்பிடி இலங்கையில் வேரூன்ற ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் அவசர அவசரமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20 நிறைவேறியதென்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆக, தேர்தலில் கொடுத்த வாக்குறுதிக்கமைய மக்களின் ஆணையினை நிறைவேற்றி விட்டோம் என அரசு மார்தட்டுமளவில் 20 மக்களுக்கு நன்மை பயக்குமா? என்பது கேள்விக்குறியே.

அபிமன்யு

# கடன் பொறிக்குள் இலங்கை

பீஜிங்கிடமிருந்து புதிய 70 கோடி டொலர்கள் கடனைப் பெறுவதற்கு கொழும்பு முயற்சித்துக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து, ராஜபக்ஷ நிர்வாகம் சீனாவில் தங்கியிருக்கும் போக்கு அதிகரித்து வருவது தொடர்பாக இலங்கையில் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தை விமர்சிப்போரும் கவலை வெளியிடுகின்ற அதேவேளை, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் சீனாவிடம்தான் இப்போது பணம் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.



உலகம் பூராகவும் பரவுகின்ற கொவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்று நோயின் விளைவான பொருளாதாரத் தாக்கம் தொடர்பிலான இலங்கையின் பிரதிபலிப்பு பற்றி குறிப்பிடும் போது "நாம் எல்லோரும் அதைக் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டுமென்று நினைக்கிறேன்" என்று அவர் சொன்னார். மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய பதவிக்காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்தவர் கப்ரால்.

இலங்கையின் நிகர உள்நாட்டு உற்பத்தி அநேகமாக 7 சதவீதம் வரை சுருங்கும் என்று உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் கவலைக்குரிய வகையில் எதிர்வு கூறியிருக்கின்றன. கடனைத் திருப்பிச் செலுத்துவதில் நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் இருக்கின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்கின்ற அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்ட மூடிஸ் **(Moody's)** நிறுவனம் கடனைத் திருப்பிச் செலுத்தும் இலங்கையின் ஆற்றலை இரண்டு படிநிலை குறைப்புச் செய்ததுடன் மிகவும் உயர்ந்த கடன் இடர்பாட்டைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையை உள்ளடக்கியுமிருக்கிறது.

அத்துடன் எதிர்வரும் வருடத்தில் 450 கோடி டொலர்கள் வெளிநாட்டுக் கடன்களை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டியும் இருக்கிறது. வருவாய் வீழ்ச்சி கண்டு வாழ்க்கைச்செலவு வானளாவ உயர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றின் மத்தியிலும் அமைச்சர் கப்ரால் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டு வாய்ப்புகள் குறித்து நம்பிக்கை உணர்வையே வெளிப்படுத்தினார்.

சீனாவிடமிருந்து மேலதிகக் கடன்களைப் பெறுதல், இந்தியாவுடனும் சீனாவுடனும் நாணயப் பரிமாற்று ஏற்பாடுகளை செய்து கொள்வது, சமுராய் மற்றும் பண்டா பிணைமுறிகளைப் பயன்படுத்துவது உட்பட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கை வெவ்வேறு தெரிவுகள் குறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று கப்ரால் கூறினார்.

உயர்மட்ட சீனத் தூதுக்குழுவொன்று பீஜிங்கிலிருந்து கொழும்பு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தி விட்டு திரும்பிச் சென்ற இரு வாரகாலம் கடந்துவிட்ட நிலையில் கப்ரால் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. கொரோனா வைரஸ் பரவலின் தாக்கத்தை இலங்கை சமாளிப்பதற்கு உதவியாகக் கடந்த மார்ச் மாதத்தில் 50 கோடி டொலர்கள் கடனை வழங்கிய சீனா இப்போது மேலதிகமாக 70 கோடி டொலர்கள் கடன்களுக்கு ராஜபக்ஷ அரசாங்கம் விடுத்திருக்கும் வேண்டுகோளையும் சாதகமான முறையில் பரிசீலிக்கும் சாத்தியம் இருக்கிறது. தொற்றுநோயிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கவும் சீனா உறுதி பூண்டிருக்கிறது. மேலும், இலங்கை சீனாவின் மக்கள் வங்கியுடன் (மத்திய வங்கி) சுமார் 150 கோடி டொலர்கள் நாணயப் பரிமாற்று ஏற்பாட்டை செய்து கொள்வது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

### வேறுபட்ட வள மூலங்கள்

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர உட்பட அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்கள் சீனக் கடன்பொறியொன்றில் விழுவதிலும் பார்க்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு ராஜபக்ஷ நிர்வாகத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், பொருளாதார மற்றும் கடன் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெறுவதை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது.

பல்தரப்பு உதவி வழங்குநர்களிடமிருந்து அரசாங்கம் முன்கூட்டியே துரித கடன் உதவியை **(The Rapid Credit Facility)** கேட்டிருந்தது. ஆனால், இன்னமும் அது வந்து சேர்ந்தபாடாக இல்லை. இது குறித்து

> **முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர உட்பட அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்கள் சீனக் கடன்பொறியொன்றில் விழுவதிலும் பார்க்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு ராஜபக்ஷ நிர்வாகத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.**

அதிருப்தி வெளியிட்ட கப்ரால், " துரிதம் என்றால் துரிதம் தான். அது வேறொன்றும் இல்லை. மார்ச்சில் கொவிட்டின் விளைவான பொருளாதார நெருக்கடி இடம்பெற்ற போதிலும், ஒக்டோபர் ஆகியும் துரித உதவி எங்கே?" என்று கேட்டார். அரசாங்கம் இன்னமும் கூட சர்வதேச நாணய நிதியத்துடன் பேசும் என்றும் அவர் சொன்னார்.

சீனக் கடன்பொறி பற்றிய பேச்சுக்களை எல்லாம் தவறானவையென்று நிரூபிப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதி பூண்டிருக்கும் அதேவேளை, வேறு கடன் வழங்கும் வட்டாரங்கள் இலங்கைக்கு கடன் கொடுக்கத் தயாராக இருக்கின்றன போல் தெரிகிறது. இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பை ஊக்குவிப்பதற்கு 40 கோடி டொலர்கள் நாணயப்பரிமாற்ற உடன்படிக்கையொன்றில் கடந்த ஜூலையில் இந்திய றிசேர்வ் வங்கி கைச்சாத்திட்டது. அத்துடன் மேலும் 100 கோடி டொலர்கள் நாணயப் பரிமாற்றத்திற்கு இலங்கை விடுத்த கோரிக்கையையும் இந்தியா பரிசீலித்து வருகிறது.

கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணையை நீடிக்குமாறு பிரதமர் ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கு டில்லி இன்னமும் பதிலளிக்கவில்லை. இலங்கை இந்தியாவிற்கு 96 கோடி டொலர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணையை நீடிப்பதற்கான இருதரப்பு ஏற்பாடுகள் பெருமளவுக்கு உதவ முடியாது என்று கப்ரால் கூறினார்.

" வளர்ந்து வரும் நாடுகள் எல்லாமே வெளிநாட்டுக் கடனுதவி நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றன. இது இலங்கைக்கு மட்டுமான தனியான பிரச்சினையல்ல. அண்மையில் சில சர்வதேச நிறுவனங்கள் சுமார் 70 நாடுகளுக்கு உதவிகளை வழங்கியிருக்கின்றன. அவையெல்லாம் ஒரு இடைக்கால ஏற்பாடாகவே இருந்திருக்கின்றன. இது ஒரு உலகளாவிய பிரச்சினை. இதற்கு உலகளாவிய தீர்வே தேவை" என்று அவர் கூறினார்.

வெளியிலிருந்து பெறுகின்ற உதவிகளைப் பொறுத்தவரை நிலைவரம் கணிசமானளவுக்கு பலவீனமானதாகவே இருக்கின்ற போதிலும், இலங்கை அதிர்ஷ்டவசமானதாகவே இருக்கின்றதென்பது கப்ராலின் பார்வை. நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு பெருமளவுக்கு பாதிக்கப்படவில்லை. ஏற்றுமதிகள் உறுதியான முறையில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. பண அனுப்பீடுகள் திருப்திப்படக் கூடியளவில் உறுதியானவையாக இருக்கின்றன என்று அவர் கூறினார்.

"வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களிடமிருந்து 70 கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியை செப்டெம்பரில் இலங்கை பெற்றது. ஏற்றுமதிகள் ஜூலையில் 100 கோடி டொலர்களையும் தாண்டியது. இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் பலனைத் தந்திருக்கின்றன. எமது வெளிந ட்டு நாணயக் கையிருப்பு சுமார் 580 கோடி டொலர்களாக இருக்கும். இது ஒரு சௌகரியமான மட்டமென்று நான் கூறவில்லை. இரண்டாவது காலாண்டுக்கான நிகர உள்நாட்டு உற்பத்தி விபரங்களை வெளியிடுவதை சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தாமதித்திருப்பதால் இந்த வருட இறுதியளவில் மாத்திரமே தெளிவான நிலைவரம் வெளிவரும்" என்று கப்ரால் கூறினார்.

ஆனால், இலங்கையின் சவால்கள் முடிந்து விடப் போவதில்லை. வெளிநாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களிடமிருந்து பண அனுப்பீடுகள் தொடருமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். மேற்காசிய நாடுகளில் பணிபுரிகின்ற சுமார் 50,000 தொழிலாளர்கள் நாடு திரும்பவிரும்புகிறார்கள். அதேவேளை, ஆயிரக்கணக்கானவர்கள் தங்களது தொழில் வாய்ப்புக்களை இழந்து விட்டார்கள். 67 பேர் தாங்கள் தொழில் பார்த்த நாடுகளில் கொவிட் - 19 இற்கு பலியாகி விட்டார்கள். உள்நாட்டிலும் கூட ஏற்றுமதி மூலமான வருமானத்தைப் பொறுத்தவரை முக்கியமானதாக இருக்கின்ற ஆடைத் தயாரிப்பு தொழிற்றுறையில் கொவிட் - 19 புதிய அலையொன்று விரைவாகப் பரவிவருகிறது.

### வீழ்ச்சியடையும் வருவாய்

அதேவேளை, இலங்கையின் வருவாயும் கடுமையானளவுக்கு வீழ்ச்சி கண்டிருக்கிறது. இந்த வீழ்ச்சி 44000 கோடி இலங்கை ரூபா (சுமார் 230 கோடி டொலர்கள்) என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இறக்குமதியாகின்ற பொருட்கள் மீதான வரிக் குறைப்பை அடுத்து எதிர்வரும் பட்ஜெட்டில் முழுநலம் வாய்ந்த வருவாய் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டுமென்று பொருளாதார நிபுணர்கள் வலியுறுத்துகிறார்கள்.

அண்மைய உலகப் பொருளாதாரா நிலைவர அறிக்கையில் **(World Economic Outlook)** சர்வதேச நாணய நிதியம் சிபாரிசு செய்த செல்வந்த வரியொன்றை பரிசீலிப்பது உட்பட வருவாயை ஊக்குவிப்பதற்கு வரி அறவீட்டு முறைகளில் புதியதொரு அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்குமா? என்று கப்ராலிடம் கேட்டபோது, "பணக்காரர்களை வறியவர்களாக்குவதன் மூலம் வறியவர்களைப் பணக்காரர்கள் ஆக்கிவிட முடியாது... மாளிகை வரிகளை விதிப்பதற்கு நாம் விரும்பவில்லை. இந்த அற்பத்தனமான வரிகள் வசதி படைத்த மக்களை முடக்கியிருக்கிறது. தொழில் வாய்ப்புகள் மற்றும் ஆதரவை வழங்கும் அவர்களின் ஆற்றலைக் குறைத்து விடுகிறது. அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கும் பட்ஜெட் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் துறைகளுக்கு ஆதரவளிக்கக் கூடிய முறையில் ஒரு சமநிலையான கூட்டுப்பங்காண்மையைப் பிரதிபலிக்கும். அவ்வாறு செய்வது அந்தத் தொழிற்றுறைகள் வறியவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு ஊக்குவிக்க முடியும்.

# கடல் புறா

## நீதி மண்டபம்




அதனால் சிறிது சலனப்பட்ட கருணாகர பல்லவனது கண்களை, நீதி ஸ்தானத்தில் அமர்ந்திருந்தவனின் இரு கண்கள் கூர்ந்து கவனிக்கவும் செய்தன. பிரதேசத்தின் கண்களைப்போல் பயங்கரமாயிருந்த அந்தக் கண்களுக்குச் சமமாக வெளுத்துக் கிடந்த மெல்லிய உதடுகளில் ஒரு கோரப் புன்னகை விரிந்தது. அந்தப் புன்னகையே தன் மரண தண்டனை என்பதைப் புரிந்து கொண்டான் கருணாகர பல்லவன்.

### அநபாய குலோத்துங்கன்

பிரேதத்தின் கண்களைப்போல் ஒளியிழந்து கிடந்தாலும், ஒளியிழந்த காரணத்தினாலேயே பயங்கரமாகத் தெரிந்த நீதிபதியின் கண்கள் தன்னை ஊடுவிருவிப் பார்ப்பதையும், அந்தப் பார்வையைத் தொடர்ந்து நீதிபதியுடைய வெளுத்த இதழிலே ஒரு புன்னகை விரிந்ததையும் கண்ட கருணாகர பல்லவனுக்குப் பல விடயங்கள் குழப்பத்தையளித்தாலும் தீர்ப்பு என்னவாயிருக்கும் என்பதில் மட்டும் எத்தகைய குழப்பமும் ஏற்படவில்லை.

வட கலிங்கத்து மன்னனும் தனது ஜென்ம விரோதியான அனந்தவர்மன், தென்கலிங்கத்துக்கு எப்பொழுது வந்தான், என்ன காரணத்தை முன்னிட்டு வந்தான், பீமனோ அல்லது அவனது நீதிபதிகளோ அமர வேண்டிய இடத்தில் அவன் எதற்காக அமர்ந்திருக்கிறான் என்ற விபரங்கள் புரியவில்லையே தவிர, விசாரணை ஒரு கேலிக்கூத்தாகவே இருக்குமென்பதிலோ தன் தலையைச் சீவும்படி தீர்ப்புக் கூறப்படும் என்பதிலோ லவலேசமும் சந்தேகமில்லாதிருந்தது இளையபல்லவனுக்கு.

அப்படி மரணத்தை எதிர்நோக்கி நிற்கும் தறுவாயில் அச்சம் காட்டுவதோ, எதிரிக்குத் தான் தாழ்ந்தவனென்று பொருள்பட இடங்கொடுப்பதோ தகுதியற்றது என்ற காரணத்தால், அனந்தவர்மனின் புன்முறுவலைப் புரிந்து கொண்டதற்கு அத்தாட்சியாகத் தானும் ஒரு பதில் புன்முறுவலைக் கோட்டினான் கருணாகரபல்லவன்.

சோழ நாட்டின் மீதுள்ள பகை பெரும் பகையாக அனந்தவர்மனின் உள்ளத்தைச் சூழ்ந்து கொண்டிருந்ததால், தெளிவில்லாத உள்ளத்துடனும், துவேஷ புத்தியுடனுமே அன்று அவர் விசாரணையை நடத்தினான். ஆனால் அவனைப் பாராட்டி ஒன்று மட்டும் கூறலாம். துவேஷத்தில் துளிகூட வெளிக்குக் காட்டாமல் நீதியை மட்டுமே கவனிப்பவன் போல் விசாரணையை நடத்தினான் அவன்.

சிறைப்பட்டிருந்தவர்களிடம் உண்மையாக அனுதாபம் கொண்டவன் போல் நடித்தான். மேலுக்கு எத்தனை கண்ணியமாக விசாரணை நடத்த முடியுமோ? அத்தனை கண்ணிமாக நடத்தினான். நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பான அன்று விதித்த தண்டனைகள் அனைத்தையும் நீதியின் பெயராலும் நேர்மையின் பெயராலும் விதித்தான். அவன் நடத்திய விசாரணைகளையும், விதித்த தண்டனைகளையும் கவனித்த கருணாகரப்பல்லவன் அந்த நீதி மண்டபத்தின் உயர்ந்த தூண்களையும் பார்த்து நீதிபதியையும் நோக்கி "இங்கு தூண்கள் தான் உயர்ந்திருக்கின்றனவேயொழிய நீதி தாழ்ந்துதான் கிடக்கிறது என்று தனக்குள் பல முறை சொல்லிக் கொண்டான்.

அன்று நீதி மண்டபத்தில் ஏராளமான தமிழர் சிறைப்பட்டு நின்றிருந்ததால் கருணாகரபல்லவன் கடைசியிலேயே விசாரிக்கப்பட்டான். நடுப்பகல் வந்தபின்னே அவன் வழக்கு விசாரணைக்கு வந்தது.

இத்தனை நேரம் கழித்து விசாரிக்க எதற்காக ஊருக்கு முன்பு தன்னை அழைத்து வந்தார்களென்று எண்ணிப் பார்த்த கருணாகர பல்லவன், கலிங்க விரோதிகள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதைத் தனக்கு உணர்த்தவே அனந்தவர்மன் தன் விசாரணையைத் தாமதித்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் உயிரிழக்கப் போகிறவனையும் கடைசி வரையில் துன்புறுத்தவே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதென்பதை அறிந்த இளையபல்லவன், அனந்தவர்மனுடைய குரூரத்தின் எல்லையைப் புரிந்து கொண்டான்.

இத்தகைய பல படிப்பினைகள் இளையபல்லவுக்கு ஏற்படுவதற்கு முன்பாக அவனுக்குக் கொடுக்க வேண்டிய மட்டுமரியாதைகள் எதையும் குறைக்கவில்லை வடகலிங்கத்து மன்னன். தன்னெதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட இளையபல்லவனை நோக்கி இளநகை புரிந்த அனந்தவர்மன் அவனுக்குப் பின்னாலிருந்த கூலவாணிகனைச் சில விநாடிகளே நோக்கிவிட்டு மீண்டும் இளையபல்லவன் மீது கண்களை நிலைக்கவிட்டான்.

அந்தப் பிரேதக் கண்களின் பார்வை அளித்த சங்கடத்திலிருந்து விடுவித்துக் கொள்ள அப்புறமும் இப்புறமும் பார்த்த இளையபல்லவன் மீது மீண்டுமொரு புன்முறுவலை வீசிய அனந்தவர்மன், எதிரேயிருந்த காவலரைப் பார்த்து "இளையபல்லவருக்கு ஓர் ஆசனம் எடுத்துப் போடுங்கள். வெளிநாட்டுத் தூதர்கள் மரியாதைக்கு உரியவர்கள்" என்று கூறினான்.

அப்படிக் கூறிய அனந்தவர்மனின் குரலில் மிகுந்த நிதானமிருந்ததையும் குரலும் பலவீனமாகவே வெளிவந்ததையும் அப்படி பலவீனமாக வந்த குரலிலும் ஒரு கடூரமும் கம்பீரமும் விரவி இருந்ததையும் கருணாகரபல்லவன் கவனித்தான்.

தனக்குச் செய்யப்படும் அத்தனை மரியாதையும் காவுக்கு அனுப்பப்படும் ஆட்டுக்குப் பூசாரி செய்யும் மரியாதைப் போன்றது என்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்ட கருணாகர பல்லவன் அடுத்து நடப்பவை என்னவென்பதைக் கவனிக்கலானான். அனந்தவர்மனின் உத்தரவுப்படி பெரிய ஆசனமொன்று கருணாகர பல்லவனுக்கு அளிக்கப்பட்டதும் விசாரணைகளைத் தொடங்கிய அனந்தவர்மன், முதன் முதலாக வேவு பார்க்கும் குற்றங்கள் சாட்டப்பட்ட பல தமிழ் வணிகர்களையும் இதர பிரமுகர்களையும் தன் முன்பு கொண்டுவர உத்தரவிட்டான்.

சோழ நாட்டுத் திருமந்திர ஓலைக்காரன் போல் கலிங்கத்திலிருந்து நீதி நிர்வாக ஸ்தானிகன் குற்றச்சாட்டுகளைப் படிக்க அனந்தவர்மன் கேள்விகளைக் கேட்டுத் தண்டனைகளை விதித்துக்கொண்டே போனான். குற்றச்சாட்டுகளெல்லாம் கிட்டத்தட்ட வேவு பார்ப்பது சம்பந்தமாக ஒரேமாதிரியாக இருந்தனையும் முக்கியமானவர்க்கெல்லாம் மரண தண்டனையும் மற்றவர்களுக்கெல்லாம் நீண்ட கால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டதையும் கண்ட கருணாகர பல்லவனுக்கு, அனந்தவர்மன் தமிழர்களிடம் விரோதத்தை வேண்டுமென்றே சம்பாதிக்க முயலுவதாகத் தோன்றியது.

பலமான சோழப் பேரரசைத் தேக்கி நிறுத்தும் வழி இதுவல்லவென்பது இளையபல்லவனுக்குத் தெரிந்திருந்தால், மன்னன் சாட்டும் வஞ்சத்தால் கலிங்கத்து மக்கள் எத்தனை பேர் அழிவார்கள் என்று எண்ணி அவர்கள் நிலை குறித்து ஏங்கினான். ஆனால் அப்படி எந்த ஏக்கத்துக்கும் இலக்காகாத அனந்தவர்மன், இஷ்டப்படி தண்டனை விதித்துக் கொண்டே போனான்.

மற்றவர்களை விடுவிடு என்று விசாரித்துக் கொண்டு போன அனந்தவர்மன் கூலவாணிகளை விசாரிக்கும் சமயம் வந்ததும் சிறிது நிதானித்து, ஒருமுறை இளையபல்லவனை நோக்கிவிட்டுக் கூலவாணிகனையும் நோக்கினான்.

அதைத் தொடர்ந்து அந்தப் பிரேதக் கண்களில் சில விநாடிகளில் சிந்தனை படர்ந்தது. கடைசியாக ஏதோ முடிவுக்கு வந்ததற்கு அறிகுறியாகத் தன் தலையை ஒரு முறை அசைத்துவிட்டு, இளையபல்லவனை எழுந்து நிற்க ஆக்ஞாபித்தான்.

விசாரணையின் விளைவைப் பற்றி முன்னமே அறிந்துகொண்டிருந்த இளையபல்லவன், மிகக் கம்பீரமாக எழுந்து, பாலூர்ப் பெருந்துறையின் அந்தப் பிரமாண்டமான மண்டபத்தில் நின்று, ஆடுகளை நோக்கும் பெரும் புலி போல் தன் கண்களை ஒருமுறை நாற்புறமும் துழாவவிட்டான். பிறகு நீதி ஸ்தானத்திலிருந்த பகைவன் மீது ஈட்டிகளைப் போலப் பளிச்சிட்ட தன் கண்களை நாட்டினான்.

(தொடரும்...)

# நாங்கள் அனைவருமே தலைவர்கள் தான்!



தாய்லாந்தில் நடைபெறும் முடியாட்சியில், அரசுத் தலைவராகப் பிரதமரும், நாட்டின் தலைவராக மன்னரும் செயற்பட்டு வருகின்றனர். தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படும் பிரதமர், அரசு தொடர்பான பெரும்பாலான முடிவுகளை எடுப்பார். ஆனாலும், பிரதமரின் முடிவுகளை எப்படி வேண்டுமானாலும் மாற்றும் சர்வ வல்லமை கொண்டவர் மன்னர்.

கடந்த 2016ஆம் ஆண்டு, தன் தந்தையின் மறைவுக்குப் பிறகு, தாய்லாந்தின் மன்னராக முடிசூட்டிக் கொண்டார் மகா வஜிரலோங்கார்ன். கடந்த ஆண்டு நடைபெற்ற பிரதமர் தேர்தலில், சர்ச்சைக்குரிய முறையில் வெற்றிபெற்று தாய்லாந்தின் பிரதமரானார் பிரயுத் சான்-ஓ-சா. இவர் தாய்லாந்தின் முன்னாள் இராணுவத் தளபதி. கடந்த 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் கலகம் செய்தே பிரயுத் சான்-ஓ-சா பிரதமரானார் என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அப்போதிலிருந்தே மக்கள் இவர்மீது அதிருப்தியிலிருந்தனர்.

## ஏன் போராட்டம்?

முடியாட்சிக்கு எதிராகப் பேசுவதும், மன்னரை விமர்சித்துப் பேசுவதும் தாய்லாந்தில் பெருங்குற்றம். அப்படிப் பேசுபவர்களுக்கு நீண்டகால சிறைத் தண்டனை வழங்கப்படும். இருந்தும், கடந்த சில ஆண்டுகளாக, வான்சலம் சட்சக்ஸிட் என்ற சமூகச் செயற்பாட்டாளர் அரசுக்கு எதிரான ஜனநாயக இயக்கத்தை தாய்லாந்தில் முன்னெடுத்து வந்தார். இவர் கடந்த ஜூன் மாதம் கம்போடியாவில் காணாமல்போனார். அவரை, தாய்லாந்து பொலிஸார் கடத்தியிருக்கலாம் என்று அவரின் ஆதரவாளர்கள் குற்றம்சாட்ட, தாய்லாந்து அரசு இதை மறுத்தது. இதையடுத்து, கடந்த ஜூலை மாதம் முதலே அவரைக் கண்டுபிடிக்கக் கோரி மாணவர்கள் ஆங்காங்கே வீதியில் இறங்கிப் போராடினர்.

இந்தநிலையில்தான், கடந்த ஒகஸ்ட் மாதம் அனோன் நம்பா என்பவரும் முடியாட்சிக்கு எதிரான விமர்சனங்களை வெளிப்படையாகப் பேசியிருந்தார். பூனைக்கு மணிகட்டியதுபோல இவரது பேச்சு, அதுவரை முடியாட்சிக்கு எதிராகப் பேசுவதற்கு நிலவிவந்த இறுக்கத்தைப் போக்கியது.

அனோன் வலி யுறுத்திப் பேசிய முடியாட்சி சீர்திருத்தம் தொடர்பான 10 அம்ச செயற்றிட்டத்தை வகுத்துக்கொடுத்தவர், பனுசாயா என்ற பெண் செயற்பாட்டாளர். இதையடுத்து தாய்லாந்து முழுவதும் மக்கள் பலரும் முடியாட்சிக்கு எதிராகப் பேசத் தொடங்கினர்.

முடியாட்சிக்கு எதிராக முணுமுணுப்பாகத் தொடங்கிய எதிர்ப்பலை கடந்த வாரத்தில், மிகப்பெரிய மக்கள் போராட்டமாக உருவெடுத்தது. 'முடியாட்சி முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும், பிரதமர் பதவி விலக வேண்டும்' என்று ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர்.

போராட்டம் வலுக்கவே, அரசுக்கு எதிரான ஜனநாயக இயக்கத்தை முன்னெடுத்த அனோன் நம்பா, பனு சாயா உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட தலைவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதுக்குப் பிறகு போராட்டம் மேலும் தீவிரமடையத் தொடங்கியது. கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் அரசுக்கு எதிரான அடையாளக் குறியாக, மூன்று விரல்களை உயர்த்திக் காண்பிக்கிறார்கள்.

இது 'ஹங்கர் கேம்ஸ்' நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படத்தில் இடம்பெறும் போராட்ட முறை. அதாவது சுதந்திரம், சுயம், சகோதரத்துவம் ஆகிய வற்றைக் கேட்டு, வலிமையானவர்களுக்கு எதிராகப் போராடுவது என்பதே மூன்று விரல் குறியீட்டின் பொருள்.

'தாய்லாந்தில், சிறிய அளவிலான மக்கள் மட்டுமே பெரும் சக்தி கொண்டவர்களாக இருக்கிறார்கள். பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே பெரிய இடைவெளி இருக்கிறது. இதற்கெல்லாம் முடியாட்சிதான் காரணம்' என்ற கருத்து மக்கள் மனதில் நீண்ட காலமாகவே இருக்கிறது.

'தற்போதிருக்கும் தாய்லாந்து மன்னர், அரசுப் பணத்தில் பெரும்பாலான நாட்களை ஜேர்மனியிலேயே உல்லாசமாகக் கழிக்கிறார். அங்கிருந்தே தாய்லாந்து அரசையும் கட்டுப்படுத்துகிறார் என்பது போன்ற காரணங்களால்தான் இந்தப் போராட்டம் வெடித்திருக்கிறது' என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

மார்ச் மாதம் ஜேர்மனி சென்ற மன்னர் வஜிரலோங்கார்ன், தன் தந்தையின் நினைவு நாளையொட்டி கடந்த வாரம் தாய்லாந்து திரும்பினார். மன்னர் பவனி வந்தபோது காரை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த மக்கள் முயன்றனர்.

இதையடுத்து போராட்டம் நடைபெற்ற தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் அவசரநிலை பிரகடனம் அமுலுக்கு வந்தது. இதன்படி நான்கு பேருக்கு மேல் பொது இடங்களில் கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும், மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். தண்ணீரைப் பாய்ச்சி கூட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் முயன்றனர். மக்களுக்கும் பொலிஸாருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தற்போது அரசுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் செய்திகளை வெளியிட ஊடகங்களுக்குத் தடை விதித்திருக்கிறது தாய்லாந்து அரசு. அதையும் மீறிப் போராட்டம் குறித்து செய்திகள் வெளியிட்ட நான்கு ஊடகங்களை விசாரணை வளையத்துக்குள் கொண்டுவர உத்தரவிட்டிருக்கிறது அரசு.

'தலைவர்களைக் கைதுசெய்துவிட்டால் போராட்டம் நின்றுவிடும் என்று நினைக்கிறார்கள். இன்று நாங்கள் அனைவருமே தலைவர்கள்தான்' என்று போராட்டக்களத்தில் கைகோர்த்து நின்றபடி குரல் கொடுக்கிறார்கள் தாய்லாந்து மக்கள்!.

## ஜோக்ஸ்...



நாட்டில் பணத்தட்டுப்பாடு ஏற்படும் போதெல்லாம் நோட்டு அச்சடிப்பதை விட்டுட்டு ஒவ்வொரு முறையும் எங்க தலைவர் வீட்டில ரெய்டு நடத்தி பணத்தை அள்ளிச் செல்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம்




எதிரிக்கு கால் இந்தளவு வீங்கியிருக்கிறதே... அப்படி என்ன விழுந்தது மன்னா...?
நான் தான் விழுந்தேன்...



லொக் டவுன் முடிஞ்சிடுச்சே ஒபிஸுக்குப் போகல? மனேஜர்கிட்ட ஒபிஸ் லொகேஷன் ஷேர் பண்ணச் சொல்லியிருக்கேன்.

# 'கடவுள் துகள்கள்' என்றால் என்ன?


பிரிட்டனில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த காலகட்டத்தில், உலகப் புகழ்பெற்ற இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ், "நிறையின் தோற்றம்" என்று தமிழில் பொருள்படும் "த ஆரிஜின் ஒஃப் மாஸ்" என்று ஓர் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார்.



சுமார் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப் பேரண்டம் உருவாகக் காரணம் என்று பெரும்பான்மையான அறிவியலாளர்களால் நம்பப்படும் "பெரு வெடிப்பு" (Big Bang) நிகழ்ந்தது.

அந்த வெடிப்பில் இருந்து சிதறிய கூறுகள், வெவ்வேறு திசைகளில் ஒளியின் வேகத்தைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் சிதறின. அவ்வாறு சிதறிய கூறுகளுக்கு நிறை கிடையாது.

நிறை இல்லாத அந்தக் கூறுகள் ஓர் ஆற்றல் புலத்தில் இணையும்



போது அவை நிறை பெறுகின்றன என பீட்டர் ஹிக்ஸ் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

(ஒரு பண்டத்தில் எந்த அளவுக்கு பொருள் திணிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் நிறையானது "பொருண்மை" அல்லது "திணிவு" என்றும் வழங்கப்படுகிறது. அப்பண்டத்தின் நிறையுடன், அது இருக்கும் இடத்தில் உள்ள ஈர்ப்பு விசையைப் பெருக்கினால், அதன் எடை கிடைக்கும். எடுத்துக்காட்டாக புவியிலும், நிலவிலும் ஒரே பொருள் அல்லது நபரின் எடை வேறுபடக் காரணம், இரண்டின் ஈர்ப்பு விசையும் வெவ்வேறாக இருப்பதே. )

அந்த ஆற்றல் புலம் அறிவியலாளர்களால் "ஹிக்ஸ் புலம்" (Higgs Field) என்றும், அந்த ஆற்றல் புலத்தில் இருந்து கொண்டு, பிர பஞ்சத்தில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையை வழங்கும் துகள்கள் "ஹிக்ஸ் போசான்கள்" (Higgs Bosons) என்றும் அழைக்கப்படுகின்றன.

நான் சொன்னதை யாருமே தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை. என்னுடன் யாரும் பணியாற்ற விரும்பவில்லை என்று தனது ஆய்வுக்கட்டுரை குறித்து நிகழ்ச்சி ஒன்றில் கூறினார் பீட்டர் ஹிக்ஸ்.

1960களில் பீட்டர் ஹிக்ஸ் அனுமானமாக முன்வைத்த இந்தத் துகள்களின் இருப்பு, 2012இல் பிரான்ஸ் - சுவிட்சர்லாந்து எல்லையில் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையம், பூமிக்கு அடியில் அமைத்துள்ள "லார்ஜ் ஹேட்ரான் கொலைடர்" (Large Hadron Collider) எனும் உலகின் மிகப்பெரிய மற்றும் உலகிலேயே மிகவும் அதிக திறன் மிக்க துகள் முடுக்கி (Particle Accelerator) மூலம் செய்யப்பட்ட சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதுவரை கண்டுபிடிக்க முடியாத மற்றும் இயலாத ஒன்றாகவே இது கருதப்பட்டு வந்தது. இதுவே கடவுளுடன் இந்தத் துகள்கள் அடையாளப்படுத்தப்படக் காரணமானது என்பதைப் பற்றிப் பார்க்கும் முன், "ஹிக்ஸ் போசான்" எனும் பெயருக்கு உள்ள இந்தியத் தொடர்பு குறித்துக் காண்போம்.

### போசான் - இந்திய விஞ்ஞானியின் பெயர்

இந்தப் பேரண்டத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. அந்த அணுக்கள் புரோட்டோன், எலக்ட்ரோன், நியூட்ரோன் ஆகியவற்றால் ஆனவை.


புரோட்டோன், நியூட்ரோன் போன்றவற்றையும் அணுவடித் துகள்களாகப் பிரிக்க இயலும். இந்த அணுவடித் துகள்கள் அடிப்படைத் துகள்கள், கூட்டுத் துகள்கள் என இரு வகைப்படும்.

குவாண்டம் புள்ளியியலின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான போஸ் - ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டை மேம்படுத்த இந்திய விஞ்ஞானி சத்யேந்திரநாத் போஸ் ஆற்றிய பங்களிப்பை போற்றும் வகையில் பால் அட்ரியன் டிராக் எனும் அறிவியலாளரால், இந்தக் கோட்பாட்டின்படி அமைந்துள்ள அடிப்படைத் துகள்களுக்கு "போசான்கள்" என்று பெயரிட்டார்.

ஹிக்ஸ் அனுமானித்த இந்த துகள்களும், ஒரே குவாண்டம் நிலையில் இயங்கும் பல துகள்கள் இருக்கும்படியான போஸ்-ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டின்படி அமைந்துள்ளது என்பதால் இதற்கு "ஹிக்ஸ் போசான்" என்று பெயர் வந்தது.

### "கடவுள் துகள்கள்" என்று பெயர் வந்தது எப்படி?

1982 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற லியோன் மேக்ஸ் லேடர்மேன், எழுத்தாளர் டிக் தெரேசி உடன் இணைந்து எழுதிய நூல் "The God



Particle: If the Universe Is the Answer, What Is the Question?" என்பது.

1993இல் வெளியான இந்த நூலின் தலைப்பில் The Goddamn Particle என்று எழுதியிருந்தனர்.

"goddamn" எனும் ஆங்கில வார்த்தை சலிப்பு அல்லது வெறுப்பால் உண்டாகும் கோபத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுவது.

ஆய்வாளர்கள் கண்ணில் சிக்காமல் நழுவிக்கொண்டே போகும் அந்த "போசான்" துகள்களை விளக்கும் வகையிலான அந்தத் தலைப்பை நூலின் பதிப்பாளர் விரும்பவில்லை.

இதன்காரணமாக இதன் பெயரை "The God Particle" என்று மாற்றியதாக லியோன் மேக்ஸ்லேடர்மேன் மற்றும் டிக் தெரேசி அப்புத்தகத்திலேயே குறிப்பிட்டுள்ளனர்.

"ஹிக்ஸ் போசான்" துகள் இருப்பதாக ஓர் அனுமானம் முன் வைக்கப்பட்டு, பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட, பல்வேறு ஆய்வுகளிலும் இதன் இருப்பு உறுதி செய்யப்படாமல் இருந்தது. அதனால் உண்டான சலிப்பையே அவர்கள் "god damn" என்று எழுதியுள்ள னர்.

அதுவே "கடவுள் துகள்கள்" என்று தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடவுள்தான் இந்த உலகைப் படைத்தார் என்று மதங்கள் நம்புவதால், உலகில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையைக் கொடுக்கும் இந்த துகளுக்கு "கடவுள் துகள்" என்று ஒரு சாராரால் அழைப்புப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அப்போது அறியப்படாத அந்தத் துகள்களை கடவுளாக சித்திரிப்பதையோ, குறிப்பதையோ பல மதகுருக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இது அலுவல்பூர்வமான பெயர் அல்ல என்பதால் அறிவியல் ஆய்வாளர்கள் அவ்வாறு அதை அழைப்பதில்லை என்று பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு ஆய்வாளர்களும் தங்கள் பேட்டி களிலும் உரைகளிலும், "ஹிக்ஸ் போசான்" துகள்களை "கடவுள் துகள்கள்" என்று அழைப்பது சரியானதல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளனர்.

பி.பி.சி

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரிக்ஷாக்காரன்
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



ஆணிப் பொன் தேர் கொண்டு
மாணிக்கச் சிலையென்று
வந்தாய் நின்றாய் இங்கே
காணிக்கைப் பொருளாகும்
காதல் என் உயிராகும்
நெஞ்சை தந்தேன் அங்கே

அழகிய தமிழ் மகள் இவள்
இரு விழிகளில் எழுதிய மடல்
மெல்ல மொழிவது உறவெனும் குரல்
படித்தால் ரசிக்கும் கனிபோல இனிக்கும்
அழகிய தமிழ்

வானுலகம் என்னும் மாளிகையில் மின்னும்
பூமகளின் கன்னம் தேனிலவின் வண்ணம்
வானுலகம் என்னும் மாளிகையில் மின்னும்
பூமகளின் கன்னம் தேனிலவின் வண்ணம்

நீலவிழிப் பந்தல் நீயிருக்கும் மேடை
கோலமிடும் ஆசை தூதுவிடும் ஜாடை
நீலவிழிப் பந்தல் நீயிருக்கும் மேடை
கோலமிடும் ஆசை தூதுவிடும் ஜாடை

இளமையில் இனியது சுகம்
இதைப் பெறுவதில் பலவித ரகம்
இந்த அனுபவம் தனி ஒரு விதம்
மலரும் வளரும் பல நாள் தொடரும்
அழகிய த்மிழ் (2)

பாலில் விழும் பழம் எனும்
போதை பெறும் இளம் மனம் (2)
அள்ளத்தான் அள்ளிக் கொள்ளத்தான்

காதல் நிலா முகம் முகம்
கண்ணில் உலா வரும் வரும் (2)
மெல்லத்தான் நெஞ்சைக் கிள்ளத்தான்


கொடியிடை விளைவது கனி - அந்த
கனியிடை விளைவது சுவை
அந்த சுவை பெற நமக்கென்ன குறை
நெருக்கம் கொடுக்கும் நிலைதான் மயக்கம்
அழகிய தமிழ்

பாவை உனை நினைக்கையில்
பாடல் பெறும் கவிக்குயில்
பக்கம் வா இன்னும் பக்கம் வா
கோவை இதழ் இதோ இதோ
கொஞ்சும் கிளி அதோ அதோ
இன்னும் நான் சொல்ல...
இன்னும் நான் சொல்ல வெட்கம்தான்

மழை தரும் முகிலென குழல்
நல்ல இசை தரும் குழலென குரல்
உயிர் சிலையென உலவிடும் உடல்
நினைத்தேன் அணைத்தேன்
மலர் போல் பறித்தேன்

அழகிய தமிழ் மகள் இவள்
இரு விழிகளில் எழுதிய மடல்
மெல்ல மொழிவது உறவெனும் குரல்
படித்தால் ரசிக்கும் கனிபோல் இனிக்கும்

# டொனால்ட் ட்ரம்பால் நிச்சயமாக ஜனாதிபதியாக முடியாது



2011 ஆம் ஆண்டு நடைபெற்ற "பழைமைவாத செயற்பாட்டு மாநாட்டில்" தனது பேச்சின் மூலம் முக்கிய கவனம் பெற்றார் ட்ரம்ப். டீபார்ட்டி இயக்கம் உட்படப் பல இயக்கங்களில் தனது பொலிசியை முன்வைத்தார்.

'USA Today' பத்திரிகை மற்றும் 'Gallup' என்ற அரசியல் அனாலிடிக்கள் நிறுவனம் இணைந்து வெளியிட்ட "2011 ஆம் ஆண்டின் பாராட்டத்தக்க 10 ஆண்கள் மற்றும் பெண்கள்" பட்டியலில் ட்ரம்ப்பும் குறிப்பிடப்பட்டார்.

இருந்தும் 2012 இற்கான ஜனாதிபதித் தேர்வில் ட்ரம்ப்பால் இடம்பெற முடியவில்லை. ஆனால், 2016 இல் 16 போட்டியாளர்கள் வரை குடியரசுக் கட்சியில் கடும் போட்டியிலிருந்த போது, அதுவரை எந்தப் பதவியிலும் இருந்திராத ட்ரம்ப்பின் தேர்வு என்பது பெரிய புதிராகவும் மர்மமாகவும் இருந்தது.

ட்ரம்ப் தனது பொலிசியின் சாரமாகத் தேசியத்தையே வைத்திருந்தார். ஒபாமா அரசிற்கு எதிரான உத்தியாகவும் அதேநேரத்தில் பாப்புலிச எதிர்ப்பு பிரசாரத்திற்கான அறுவடையாகத் தேசியம் சிறந்த கருவியாக அமைந்தது.

எனவே, பிரசாரம் முழுக்க அதனைச் சுற்றியே பயணித்தது. இராணுவத்தைப் பெருக்குவது, வர்த்தகத்தில் பன்னாட்டு இறக்குமதிகளைக் குறைப்பது, இஸ்லாமியர்கள் எதிர்ப்பு, அமெரிக்கர்களை மையப்படுத்திய வேலை வாய்ப்பு, குறிப்பாக இடம்பெயர்தலைக் காட்டமாக எதிர்ப்பது போன்ற கொள்கைகளைத்தான் ஒரு சிறந்த தேசியவாதி என்ற அடையாளத்தின் கீழ் வழங்கினார்.

மறுபுறம் ஹிலாரியின் பிரசாரம் எதிர் விகிதத்தில் இருந்தது. வலதுசாரி அலையின் காரணமாக குடியரசுக் கட்சி சார்பாக பெரும் பணக்காரர் ட்ரம்ப் போட்டியிட முடிந்தது. ஆதலால், ஹிலாரியின் பிரசாரம் மத்தியதர மக்களைக் குறிவைத்து அமைந்தது.

"நம் நிலையை உணராத பில்லியனருக்கா உங்கள் வாக்கு?" என வினவினார் ஹிலாரி. ஆபிரிக்க-அமெரிக்கர்கள், இலத்தீன் அமெரிக்கர்கள் உரிமை சார்ந்து கரிசனம் காட்டினர். அமெரிக்க வரலாற்றிலேயே ஜனாதிபதியாகப் போட்டியிடும் முதல் பெண் வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன். ஆதலால், அவர் பிரசாரம் பெண் வாக்காளர்களின் மீது அதிகம் கவனம் செலுத்தியது. "இந்தக் காலத்திலும் சுயவிருப்பத்தோடு வாழும் பெண்களிடத்தில், கருக்கலைப்பு, விருப்பப்பாலுறவு போன்றவை கூடாது எனக் கட்டுப்பாடுகளை விதிக்கும் பழைமைவாதியையா தேர்ந்தெடுப்பீர்கள்?" என நடுநிலை வாக்காளர்களைக் கவர்ந்தார் ஹிலாரி.

ஹிலாரியைவிட ட்ரம்ப் பிரசாரத்திற்கு அதிகப் பின்னடைவாக அமைந்தது அவரது வாய்தான். கட்டுப்பாடில்லாத பேச்சு, எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடிய மனநிலை போன்றவை ட்ரம்ப்பின் குறைகள். இதனால், பத்திரிகையாளர்களைக்கூட எளிதில் தாக்கி விடுவதால் இன்று வரை ட்ரம்ப்புக்கும் மீடியாவுக்கும் ஜென்ம பகை உள்ளது. தனது பிரசாரத்தின் முதல் நாளிலேயே மெக்சிகர்கள் அனைவரும் "ரேப்பிஸ்ட்" என்றார்.

தொடர்ந்து, திருடர்கள், போதை வியாபாரிகள், குற்றம் புரிவதற்காகவே உள்ளவர்கள் என்று குறிப்பிட்ட மக்கள் மீது வன்மத்தைப் பொழிந்தார்.

இதனைக் குடியரசுக் கட்சியே சமாளிக்க முடியாமல் திணறியது. அப்படிப்பட்ட வாய்முகூர்த்தம் மொத்த பிரசாரத்திற்கு எதிராகவும் திரும்பியது.

இதற்கு ட்ரம்ப் பதிலளிக்கையில்,

"அது ஓர் அறையில் நடந்த தனிப்பட்ட உரையாடல். அதுவும் பல வருடங்களுக்கு முன்பு பேசியது. பில்கிளிண்டனெல்லாம் இதைவிட மோசமாகப் பொது வெளியில் பேசியுள்ளார். நான் பேசியது யார் மனதையும் புண்படுத்தியிருந்தால் மன்னித்து விடுங்கள்" என்று சரணடைந்தார்.

பிறகு, "நான் என்றும் என்னை ஓர் முழுமையான நல்லவன் என்று சொன்னதில்லை. நான் தவறு செய்திருக்கிறேன், அதற்கு மன்னிப்புக் கேட்கிறேன். நாளை நான் ஒரு சிறந்த ஜனாதிபதியாக இருந்து யாரையும் கைவிட மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன்" என்று வீடியோ வெளியிட்டார். பதிலுக்கு, பில் மற்றும் ஹிலாரி கிளிண்டன் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டினார்.

தான் ஓடியோவில் பேசிய பெண்ணை பத்திரிக்கையாளர்கள் முன் வரவைத்து சம்பவத்தை விளக்கினார். அதே நேரத்தில் ஹிலாரி பிரசாரத்தின் தலைவர் ஜான்போடெஸ்டாவின் (John Podesta) பிரசாரம் தொடர்பான தனிப்பட்ட ஈமெயில்களை வெளியிட்டது விக்கிலீக்ஸ். இந்த நிகழ்விற்குப் பிறகு ட்ரம்ப் பிரசாரத்திற்கான ஸ்பொன்சர்கள் வெகுவாகக் குறைந்தனர்.

காங்கிரஸ் உறுப்பினர்கள், செனட்டர்கள் முதல் குடியரசுக் கட்சி தேசிய கமிட்டி வரை ட்ரம்ப்பின் தேர்வை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தனர். தற்போது அவருக்கு இரண்டு வாய்ப்பு தான் இருந்தது. ஒன்று தேர்தலிலிருந்து விலகுவது அல்லது அமெரிக்க வரலாற்றிலேயே மோசமாகத் தோற்ற ஜனாதிபதி வேட்பாளர் என்ற பெயரை வாங்குவது என்று சொந்தக் கட்சியே அவநம்பிக்கையானது.

மொத்தத்தில் ட்ரம்ப்பால் நிச்சயம் ஜனாதிபதியாக முடியாது என நினைத்தார்கள். கட்சியினரின் பார்வையே இவ்வாறு இருக்கும் போது அமெரிக்க மக்களும் ஊடகங்களும் என்ன நினைத்தார்கள் எனத் தனியாக குறிப்பிட வேண்டியதில்லை.



# விஜய் ரசிகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் கல்லூரி பேராசிரியராக நடித்துள்ள மாஸ்டர் 2021 இல் பொங்கல் பண்டிகளை ஸ்பெஷலாக வெளியாகவுள்ளது.அனிருத் இசையில் பாடல்கள் வெளியாகி கொண்டாட வைத்தன. குட்டி ஸ்டோரி, வாத்தி கம்மிங் பாடலை தொடர்ந்து அண்மையில் குயிட் பண்ணுடா பாடல் அனிருத் பிறந்த நாள் ஸ்பெஷலாக வெளியானது.ஶ்ரீநாத், ஶ்ரீமன்,சாந்தனுகௌரி கிஷன், தீனா. மாளவிகா மோகனன் என பலர் இப்படத்தில் நடித்துள்ளனர். மாஸ்டர் படம் தீபாவளிக்கு வெளியாக வேண்டியது.ஆனால் கொரோனாவால் படம் தள்ளிப்போனது ரசிகர்களுக்கு வருத்தமே. 5 மாதகாலத்திற்கு பிறகு தியேட்டர்கள் திறக்கப்படும் நிலையில் பாண்டிச்சேரியில் உள்ள ஷண்முகா சினிமாஸ்கடந்த வருடம் வந்த பிகில் படத்தை மீண்டும் ரீ-ரிலீஸ் செய்கிறார்களாம்.



# காதல் திருமணம் தான் ராஷிகண்ணா

தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் நடித்து பிரபலமான ராஷி கண்ணா, காதல் திருமணம் தான் செய்வேன் எனத் தெரிவித்துள்ளார்.தமிழ் சினிமா ரசிகர்கள் மட்டுமல்லாமல் இந்திய சினிமாவின் ரசிகர்கள் அனைவரையும் கவரும் தன்மையுள்ள நடிகையாக வலம் வருகிறார் நடிகை ராஷி கண்ணா. தமிழில் இமைக்கா நொடிகள், அடங்கமறு, அயோக்யா, சங்கத்தமிழன் ஆகிய வெற்றிப் படங்களைத் தொடர்ந்து, அடுத்ததாக அரண்மனை 3, மேதாவி, சைத்தான் கா பட்சா போன்ற படங்களில் நடிக்க உள்ளார். இதேபோல் தெலுங்கிலும் முன்னணி நடிகர்களுடன் நடித்து வருகிறார். நேரம் வரும்போது மனதுக்கு பிடித்தவரை சந்தித்தால் வீட்டில் சொல்லி குடும்பத்தினர் ஒப்புதலோடு காதல் திருமணம் செய்து கொள்வேன். அதாவது காதலித்து பெற்றோர் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்வேன்.” இவ்வாறு ராஷி கண்ணா கூறினார்.

# தீபாவளிக்கு வருகிறாள் மூக்குத்தி அம்மன்

நயன்தாரா நடிப்பில் உருவாகி இருக்கும் ‘மூக்குத்தி அம்மன்’ படத்தின் ரிலீஸ் குறித்து அதிகாரபூர்வ தகவலை அப்படத்தின் ஆர்.ஜே.பாலாஜி தெரிவித்துள்ளார்.இந்நிலையில், இப்படம் வருகிற தீபாவளி பண்டிகையன்று ஓ.டி.டி.தளத்தில் வெளியாக உள்ளதை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் இப்படத்தின் டிரெய்லர் வருகிற ஒக்டோபர் 25 ஆம் திகதி வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமண பந்தத்தில் இணைந்தார் சைத்ரா



பிரபல ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சீரியலில் மிகவும் பிரபலமான ஒன்று யாரடி நீ மோஹினி.இதில் மிகவும் சவாலான வில்லி கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை சைத்ரா ரெட்டி. இந்நிலையில் நடிகை சைதரா ரெட்டிக்கு திருமணம் முடிவாகி தற்போது நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளது.நடிகை சைத்ரா ரெட்டியின் வருங்கால கணவர், பிரபல திரையுலக ஒளிப்பதிவாளர் என்று தெரியவந்துள்ளது.மேலும் இவர்களின் அழகிய நிச்சயதார்த்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளது.





# எளிதில் வென்றவரில்லை இவர்!

டென்னிஸ் பற்றி ஒன்றுமே தெரியாத போது, ஆண்ட்ரே அகாஸியை அதிகம் பிடித்தது. அதற்குப் பிறகு பிடித்த வீரர் என்றால் நடால் மட்டும்தான்.

பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸின் இறுதி ஆட்டம் என்றால், நடாலுக்கு எதிராக விளையாடுபவர் யார் எனப் பார்க்கத் தேவையில்லை. காரணம், அது நடாலின் மண். கடந்த வாரம் நடால் உள்ளே நுழையும்போதே, **'His Court'** என்றார் வர்ணனையாளர். ஆனால், நடால் என்றுமே எளிதாக ஒரு போட்டியில் வென்றதில்லை. அத்தனை குட்டிக் கரணங்கள் அடிக்க வேண்டியதிருக்கும். வியர்வையில் குளித்து முடித்த பின்னர் தான் நடால் ஒரு போட்டியில் வெல்வார்.

கிரிக்கெட்டைத் தவிர பிற போட்டிகளில் நமக்கு எப்போதுமே வெற்றியாளர்களின் பெயர்கள்தான் நினைவுக்கு வரும். பிடித்த வீரர் என்றால்கூட பலர் உச்சரிக்கும் பெயர் டென்னிஸில் ரோஜர் பெடரர்தான். டென்னிஸ் பற்றி ஒன்றுமே தெரியாத போது, ஆண்ட்ரே அகாஸியை அதிகம் பிடித்தது. அதற்குப் பிறகு பிடித்த வீரர் என்றால் நடால் மட்டும்தான். நடால் எந்தவொரு போட்டியையும் எளிதாக வென்றதில்லை. அவரைப்பிடிக்க அதுகூட ஒரு காரணம். 2003 இல் ஆரம்பித்த பெடரரின் கிராண்ட்ஸ்லாம் கனவுகள் இன்றுவரையில் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இந்த நூற்றாண்டில் பெடரரைத் தாண்டிய வீரர் ஒருவர் உருவாக வாய்ப்பில்லை என்பதுதான் எல்லோரும் கணித்தது. கிட்டத்தட்ட சச்சினைப்போல. அவுஸ்திரேலிய ஓப்பன், விம்பிள்டன், **US** ஓப்பன் என எல்லாவற்றிலும் வெற்றிக்கொடி நாட்டி வந்த பெடரர். முதல் முறையாக 2006 இல் களிமண் கோர்ட்டில் வெற்றி வாகைசூட நடாலை மிஞ்ச வேண்டும்.

நடால் அப்போது ஒருமுறை மட்டும் பிரெஞ்சு ஓப்பன் வென்றிருக்கும் 20 வயதுச் சிறுவன். அதிலும் முதல் செட்டில் 1-6 எனத் தோற்றார் நடால். ஆனால், அதன்பின் நடால் ஆடியது அசுர ஆட்டம். 6-1, 6-4, 7-6(4) என அடுத்தடுத்த செட்களில் நவீன டென்னிஸின் கடவுள் பெடரரையே நிலைகுலையச் செய்தார்.


தன் ஆரம்பக் காலத்தில் விளையாடிய இறுதிப்போட்டிகளில் எல்லாம் தொடர்ச்சியாக ஏழு முறை பட்டம் வென்ற பெடரரை, டென்னிஸின் அத்துணை நுணுக்கங்கள் தெரிந்த பெடரரை மூன்று செட்கள் தொடர்ச்சியாக காலி செய்தார் நடால்.

அதே ஆண்டு விம்பிள்டனில் நடாலை வெல்வார் பெடரர். 2007 ஆம் ஆண்டு சொல்லிவைத்ததுபோல், பிரெஞ்சு ஓப்பன் நடால் வசம். விம்பிள்டன் பெடரர் வசம். 'களிமண் தரையில மட்டும் ஜெய்ச்சுடறானப்பா' என்றார்கள் விமர்சகர்கள். 2008 ஆம் ஆண்டு அதற்கும் முற்றுப்புள்ளி வைத்தார் நடால். 2008 இல் விம்பிள்டன், 2009 இல் அவுஸ்திரேலியன் ஓப்பன், 2010 இல் அமெரிக்க ஓப்பன் (ஜோக்கோவிச்சை எதிர்த்து) என அடுத்தடுத்து எல்லா கோர்ட்களிலும் நடால் பெயர்தான்.

அதிலும் கடந்த இருபதாண்டுகளின் ஆகச்சிறந்த பைனல் எனில், அது 2008 விம்பிள்டன்தான். முதலிரண்டு செட்களை பெடரருக்கு எதிராக வென்றுவிட்டு (6-4, 6-4,) அடுத்த இரண்டையும் தோற்று (6-7(5), 6-7(8) ), பைனல் செட்டில் 9-7 என்கிற கணக்கில் வெல்வார் நடால். 4 மணி நேரம் 48 நிமிடங்கள் நடந்த அந்த பைனல்.

2005 இல் ஆரம்பித்த நடாலின் பிரெஞ்சுப் புரட்சியில் தோல்விகள் மிகவும் குறைவு. 2009 இல் சோடர்லிங்கிடம் நான்காவது சுற்றில் தோற்றது. 2015 இல் காலிறுதியில் ஜோக்கோவிச்சிடம் தோற்றது, 2016 இல் காயம் காரணமாகப் பாதியில் வெளியேறியது போன்ற சறுக்கல்களைத் தவிர, 12 முறை கோப்பையை வென்றிருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எப்படியும் நடால் தான் வெல்வார் என்றாலும் யாரும் இப்படியானதொரு ஆட்டத்தை நடாலிடம் எதிர்பார்க்கவில்லை. பிரான்ஸின் ரோலாண்டு கேரோஸில் நடாலை வென்ற இரு வீரர்களில் ஜோக்கோவிச்சும் ஒருவர். கிராண்ட்ஸ்லாம்களில் நடாலுடன் விளையாடிய கடைசி மூன்று போட்டிகளிலும் ஜோக்கோவிச்தான் வின்னர். அதிலும், 2019 அவுஸ்திரேலிய ஓப்பனில் 6-3, 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் நடாலை மிகவும் எளிதாக வென்றார் ஜோக்கோவிச்.



2020 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓப்பனில் முழு ஈடுபாட்டுடன் விளையாடுவதற்காக **US** ஓப்பனிலிருந்து விலகி இருந்தார் நடால். ஜோக்கோவிச்சோ அமெரிக்க ஓப்பனில் லைன் அம்பயரைப் பந்தால் தாக்கிப் பாதியில் வெளியேற்றப்பட்டதைத் தவிர, எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்றிருந்தார். அதிலும் தன் கரியரிலேயே, கிராண்ட்ஸ்லாம் இறுதி ஆட்டத்தில், ஒருமுறைகூட முழு செட்டையும் தோற்றதில்லை ஜோக்கோவிச். ஆனால், நடால் அதை மாற்றினார்.

இது கிட்டத்தட்ட அவுஸ்திரேலிய ஓப்பனில் நடால் தோற்றதற்கான 'ஸ்வீட் ரிவெஞ்ச்' என்கிறார்கள் விமர்சகர்கள். நடால் வழக்கம் போல மறுக்கிறார்.

"ஐந்தாவது செட் வரை சென்று வெல்வதில் இருக்கும் மகிழ்ச்சி, நேர் செட்களில் வெல்வதில் இருப்பதில்லை" என்றார் நடால் நக்கலாக. காரணம், நடால் இந்தப் போட்டியில் ஜோக்கோவிச்சை நேர் செட்களில் (6-0,6-2,7-5) எளிதாக வென்றார். 'நடாலின் ஆட்ட நுணுக்கங்களை நன்கு கணித்திருந்தேன். எப்படியும் தவறு செய்ய வைக்க முடியும் என நினைத்தேன்.

ஆனால், நடால் எல்லாவற்றுக்கும் தயாராக இருந்தார். ஒரு தவறான ஷொட்டைக்கூட என்னால் நடாலின் ஆட்டத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை" என போட்டி முடிந்தபின் புகழாரம் சூட்டினார் ஜோக்கோவிச்.

39 வயதான பெடரர் 20-11 (20 வின்னர், 11 ரன்னர்) என கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிகளில் முன்னிலையில் இருக்கிறார். பெடரர் அவ்வளவு சீக்கிரம் தனக்கான மகுடத்தை விட்டுவிட மாட்டார் என்பதற்கு 2019 விம்பிள்டன் பைனலே சாட்சி (7-6(5), 1-6, 7-6(4), 4-6, 13-12 ). எப்படியும் அடுத்த ஆண்டு பிரெஞ்சு ஓப்பனில், 35 வயதான நடால் மீண்டுமொருமுறை தன் மண்ணில் வென்று 20-8 என்கிற தன் கணக்கை 21 ஆக மாற்றிவிடுவார்.

ஆனால், இருவருக்குப் பின்னால், இந்த ரேஸில் உலகின் நம்பர் வன் வீரரான ஜோக்கோவிச் 17-10 என்கிற கணக்கில் பதக்கங்களைக் குவித்து வருகிறார். ஜோக்கோவிச் இருவரின் சாதனையையும் மீறிவிடுவார் என்பது தான் யதார்த்தம் என்றாலும், பெடரரும் நடாலும் டென்னிஸ் அரங்கை இருபதாண்டுகள் கட்டிப் போட்டதைப் போன்று இனி யாரும் செய்யவியலாது.

இனியும் ஒரு வீரர் இந்தக் களிமண் தரையில் 13 கோப்பைகளை வெல்லவியலாது. ஏனெனில், எந்த கோர்ட்டிலும் எந்தவொரு வீரரும் பத்து முறைகூட வென்றதில்லை. அப்படியே அவர்கள் இனி, பிரெஞ்சு மண்ணில் அதை நிகழ்த்த வேண்டும் என்றால் நடாலைத் தாண்டித்தான் அதைச் செய்ய முடியும்.

# தமிழ் வர்ணனை; சிக்கலில் பாலாஜி



ஐ.பி.எல்.என்றாலே எண்டர்டெயின்மெண்ட், கிளாமர், கான்ட்ரவர்ஸியின் கலவைதான். இந்த வருடம் கொரோனா வைரஸின் காரணமாக ஐக்கிய அரபு அமீரக மைதானங்களில் ரசிகர்களே இல்லாமல் ஐ.பி.எல்.நடத்தப்பட்டு வருகிறது. கை குலுக்குவது, பந்தில் உமிழ் நீரைத் துடைப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும், தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பல்வேறு கட்டுப்பாடுகளுடன் போட்டிகள் நடந்து வருகின்றன.

தொலைக்காட்சிவாயிலாகவும், ஹொட்ஸ்டார் போன்ற செயலிகளின் மூலமும் ரசிகர்கள் ஐ.பி.எல்.ஆட்டங்களைப் பார்க்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரசிகர்களை மைதானத்தில் இருக்கும் டிஜிட்டல் போர்டில் சிறப்பாகக் காட்டவும் போட்டி முழுவதும் ரசிகர்களின் சத்தம் கேட்கவும் பல்வேறு விதமான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஐ.பி.எல்.போட்டிகள் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் தமிழில் தமிழ் வர்ணனையுடன் ஒளிபரப்பப்படுகின்றன. கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகவே கிரிக்கெட் போட்டிகளுக்கு தமிழ் வர்ணனையை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் வழங்கி வருகிறது. ஆங்கில வர்ணனையில் இருப்பது போன்ற தரம், தமிழ் வர்ணனையில் இருப்பதில்லை என்பது ஆரம்பம் முதலே கிரிக்கெட் ரசிகர்களிடமிருந்து வரும் விமர்சனம். இதைப் பற்றி நிறைய மீம்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. இவற்றைத் தாண்டி, தமிழ் வர்ணனைக்கு எதிரான புதியதொரு குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அது, நிறவெறி.

கடந்த 4 ஆம் திகதி நடந்த, மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கும் இடையிலான போட்டியில், வர்ணனையில் இருந்த ஆர்.ஜே.பாலாஜி, பொல்லார்டை பற்றிப் பேசும்போது, "எந்தக் கடையில அரிசி வாங்குறாருனு தெரியலியே", "பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுத்தா மூக்கு மட்டும்தான் தெரியும்", "எங்க வீட்டுக்கெல்லாம் அவரை சாப்பிடக் கூப்பிட மாட்டேன்", "மலை மாதிரி இருக்காரு" என்றெல்லாம் பேசியது பெரும் எதிர்ப்புகளை சமூக வலைத்தளங்களில் பெற்று வருகிறது.


இதை மேலோட்டமாகக் கேட்டுவிட்டு, "எண்டர்டெயின்மெண்ட்தானே..." என்று சிலர் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இவை நிச்சயமாக உருவ கேலி மற்றும் பொல்லார்ட் சார்ந்து இருக்கும் நிறம் மீதான கேலிதான். கறுப்பின கிரிக்கெட் வீரர்கள் மீது மட்டும் குறிப்பாகச் செய்யப்படும் தனித்த உடல் சார்ந்த கேலிகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

பொல்லார்ட் மட்டுமல்லாமல், கொல்கத்தா அணியின் ரஸ்ஸல், டெல்லி அணியின் ககிசோ ரபர்டா, ஷிம்ரான் ஹெட்மையர் போன்ற வீரர்கள் மீதும் தொடர்ந்து இதுபோன்ற உருவக்கேலிகளை இந்த ஐ.பி.எல்லில் பல்வேறு போட்டிகளில் தொடர்ந்திருக்கிறார்.

மேலும், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கை அணியைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரரான அர்னால்டு ரஸ்ஸல், ஐ.பி.எல்.தமிழ் வர்ணனையில் இணைகிறார். அவரிடம் அவர் பேசும் ஈழத்தமிழைப் பேசுவதுபோல் கேலி செய்வதையும் ஆர்.ஜே.பாலாஜி பலமுறை செய்திருக்கிறார். அர்னால்டு ரஸ்ஸல் இதை எப்படி எடுத்துக்கொண்டாலும் ஒன்றிரண்டு முறைக்கு மேல் அந்தக் கேலி ரசிகர்களுக்குக் கேட்பதற்கு மிக சங்கடமாகவே இருக்கிறது.

தற்போது எழுந்திருக்கும் சர்ச்சையைப்போல, யாரேனும் சில முற்போக்காளர்கள் இதற்கு எதிராகப் பேசினால் தான் உண்டு என்கிற நிலையில்தான் கிரிக்கெட் இருக்கிறது. இந்திய ஆண்கள் கிரிக்கெட், உயர்சாதி ஜென்டில்மென்களின் கேம். கிரிக்கெட்டும் சரி, கிரிக்கெட் வர்ணனையும் சரி, அவை ஜனநாயகப்படுத்தப்படாதவரை இந்த மாதிரியான "டோன் டெஃப்" நிறவெறி, சாதிய, உடல் சார்ந்த, செக்ஸிஸ்ட் கேலி கமெண்டுகளால்தான் நிரப்பப்படும்.

# கிஸா பிரமிடுகள் (பண்டைய அதிசயங்கள்)



"புதிய உலக அதிசயங்கள்" என்ற அமைப்பு ஒரு பொது வாக்கெடுப்பிற்காக உலகின் பல்வேறு இடங்களை பட்டியலிட்டு அறிவித்த போது அதில் "கிஸா பிரமிடுகள்" இருந்ததை அறிந்து எகிப்தியர்கள் கொந்தளித்தனர். வாக்கெடுப்புக்கெல்லாம் அப்பாற்பட்வை "பிரமிடுகள்" என்பது அவர்களது கருத்து. எகிப்தியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பட்டியலில் இருந்து "கிஸா பிரமிடுகளை" எடுத்துவிட்டு உலகின் மதிப்புமிக்க புராதன சின்னமாக அறிவித்தனர்.

எவற்றோடும் ஒப்பிட முடியாத உயர்ந்த இடத்தில் "கிஸா பிரமிடுகள்" இருக்க வேண்டும் என்று எகிப்தியர்கள் கருதியதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

பிரமிடுகள் எகிப்திய கட்டடக் கலையின் அற்புதமான வெளிப்பாடு மட்டுமல்ல. இன்னமும் அறியப்படாத, ஆராயப்படாத அதிசயங்கள் நிறைந்த புதிர்ப் பொக்கிஷங்கள் அவை.

பிரமிடுகளை அன்றைய எகிப்திய அரசர்களின் கல்லறைகள் என்று எளிதில் சொல்லிவிட்டு நகர்ந்துவிட முடியாது. எகிப்தியர்கள் பிரமிடுகளை ஏன் கட்டினார்கள், எப்படிக் கட்டினார்கள் என்பது பற்றி ஆராயப் புகுந்த ஆராய்ச்சியாளர்கள் பிரமிக்கும் அளவு இயற்பியல், கணிதவியல், வானவியல், கட்டடவியல், ஆன்மீகத்துறை நுட்பங்கள் ஆகியன அவற்றுள் நிரம்பிக் கிடக்கின்றன.

பண்டைய அதிசயங்கள் (Ancient Wonders) என்று பட்டியலிடப் பட்ட ஏழு அதிசயங்களில் எஞ்சியிருக்கும் ஒரே அதிசயம் "கிஸா பிரமிடுகள்" மட்டுமே. மீதி ஆறு அதிசயங்களும் அழிந்து விட்டன.

(தொடரும்)

## பிரமிப்பூட்டும் செய்திகள்

பிதாகரஸ் முதல் ஐசக் நியூட்டன் வரை பல்துறை நிபுணர்கள் பிரமிடுகள் குறித்தும் அதன் கட்டமைப்புக் குறித்தும் கூறியவை அத்தனையும் பிரமிப்பூட்டும் செய்திகளே.

பிரமிடுகளின் உயரம் 5812.98 அங்குலம். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் உச்சியைத் தொடும் அளவு 9131 அங்குலம். மிகத் துல்லியமாக அளந்து கட்டப்பட்டிருக்கிறது. ஒரு நீள்வட்ட வடிவத்தின் பரப்பானது அதன் ஆரங்களின் இருமடங்காக இருக்கும் என்ற சூத்திரத்தை அறிந்தவர்கள் போல் அவர்கள் கட்டியிருக்கிறார்கள் என்று ஒரு ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இன்னொரு கணிதவியல் நிபுணர் "பை" அதாவது 22/7 என்கிற சமன்பாடு கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அந்த சமன்பாட்டிற்கு ஏற்ப இருப்பதாக வியந்துள்ளார்.

புவியியல் வல்லுநர் ஒருவர் பூமியின் மிகத் தாழ்வான கடல் பிரதேசமான மியாமி கடலுக்கும் உயரமான மலையான இமய மலைக்கும் இடையேயான கடல் மட்ட விகிதாசார அளவு 5449 அங்குலங்கள் கிட்டத்தட்ட அந்த அளவில் கிஸா பிரமிடுகள் உள்ளதாகக் கூறியுள்ளார்.


கிஸா பிரமிடுகளின் உள்ளே எண்ணற்ற அறைகள் சிக்கலான வடிவமைப்பில் குழப்பமான வாயில் அமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். பாரோ வம்சத்தில் பின் வந்த மன்னன் ஒருவன் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுவை உள்ளே அனுப்பி அங்குள்ள அறைகளை எண்ணும் படி பணித்ததாகவும் அவர்கள் நான்கு மாத காலமாகச் சுற்றி அலைந்தும் எண்ண முடியாமல் வெளியேறியதாகவும் சிலர் பைத்தியமாகவும் திரிந்ததாகவும் கூறுகிறார்கள். ஆன்மீகவாதிகள் பிரமிடுகளின் அபூர்வ சக்திகள் குறித்து அள்ள அள்ளக் குறையாத செய்திகளை வெளியிட்டபடியே இருக்கிறார்கள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2153

### செழியன்




### தீபன்



"இவன் தானே" என்று யாரையும் அலட்சியம் செய்யாதீர்கள். ஒருநாள் "இவரா" என்று மிரள வைக்கும் வாழ்க்கையை அவர் வாழலாம்...!

### கஸ்தூரி

பேசாதவர்கள் பற்றி நினைப்பதை விட்டுவிட்டு பேசுபவர்களிடம் சந்தோஷமாக பேசிப் பழகுங்கள்.



### மஞ்சுளா

ஒருவரிடம் நம்முடைய அன்பு அதிகமாய் இருப்பதைவிட அதிக புரிதல் இருப்பதே சிறந்தது.



### சரண்

பணம் இருப்பவனை தூங்க விடாது.



இல்லாதவனை வாழவிடாது.

### புவனா

பாதையில் கவனம் தேவை பெரிய




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 227

# மதமும் மருத்துவமும் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்கள்

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மீக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதார விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மத நம்பிக்கை மனிதனை பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் மதமும் மருத்துவமும் மனிதனின் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்களாகவும் இருக்கின்றன.

இந்து சமயத்தின் அடிப்படைத்தத்துவங்கள் கி.மு.3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். அக்காலப்பகுதியில் மருத்துவப் பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த் தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் பல கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்து மதக் கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அது இந்து மதமாகத் தோற்றம் பெற்றது கி.மு.1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேதகாலம் என்று சொல்லுவார்கள். இந்த வேதகாலத்திலே மதப்பெரியவர்கள் மருத்துவத் தொண்டையும் ஆன்மீகத்தொண்டையும் ஒருங்கே ஆற்றிவந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன.


பல கிறிஸ்தவமத நிறுவனங்களும் இந்து மத நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும்பங்காற்றி வருகின்றன. உளவளத்துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. பல மதம் சார்ந்த அமைப்புகள் வைத்தியசாலைகளையே வழிநடத்தி வருகின்றன.

திராவிடர்களின் மருத்துவ முறையாக வளர்ச்சி பெற்ற சித்தமருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. இந்த சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். இந்த 'அகத்தியரின் தலைமையிலேயே சித்தமருத்துவத்துறை முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்துக்களை நம்புகிறோமா? என்பது முக்கியமல்ல. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த அண்டசராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது energy என்று சொல்லப்படுகின்ற சக்தி என்பது உலகறிந்த உண்மை. சக்தி இன்றி எதுவும் இயங்கமுடியாது. அந்தசக்திதான் சிவனின் சரிபாதி என்றும் அவள்தான் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் இந்துமதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடைதரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனாங்கள், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறை வணக்கம் செய்ய வேண்டும். என்று இந்து மதம் சொல்லுகிறது. இங்கே உடைச் சுத்தம், உடல்சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன. பஞ்சமாபாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றன். இந்த பஞ்சமாபாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பலகொடிய தொற்றுநோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும். விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விற்றமின்களும், கனியுப்புக்களும், நார்ப்பொருட்களும் இருப்பதுடன் இது உடல்



நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்ககூடிய ஒருநிறை உணவாகவும் விளங்குகிறது. சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒருமுறை யாகும். இதனையே மேலைத்தேய நாடுகளிலே மருத்து வத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வரு கின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு பல் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும்.

வேதகாலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உப வேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திரசிகிச்சைகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்பு கத்திகளை பயன்படுத்தி இருக்கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்பு வலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக பாதுகாப்பான செப்புக் கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

கடுமையாக நோய் வாய்ப்பட்டு ஒருவர் படுக்கையில் இருக்கும் பொழுது பண்ணிசை பாடும் அல்லது திருமுறை ஓதும் மரபு அன்று தொட்டு இருந்து வருகிறது. கிறிஸ்தவ மதத்திலும் ஏனைய மதங்களிலும் கூட இந்தமரபு இருந்து வருகின்றது. அமைதியான இசையானது உடல் வலியையும், மனவலியையும் குறைத்து ஒருவர் குணப்படும் வீதத்தையும் அதிகரிக்கும் என்று நவீன ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சி முறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவசித்தர்களே. இன்றும் இந்த யோகாசனப்பயிற்சி முறை பல தொற்று நோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும்பங்காற்றி வருகிறது.

மதநூல்களில் பொதிந்திருக்கும் அரிய மருத்துவக் கருத்துக்கள் அதிலே கலந்து போயிருக்கும் ஒரு சில தவறான கருத்துக்களினால் அடிபட்டுப் போகாமல் பாதுகாக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது.

மனிதனை இறைவன் பகுத்தறிவுடன் படைத்திருக்கிறான். எனவே மதக்கருத்துகளும் மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தால் மட்டுமே அவை மனிதனை வழிநடத்தும். எனவே மதக்கருத்துக்களும் விஞ்ஞானமயப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு தேவை எழுந்திருக்கின்றது.

சிந்துவெளியிலே இருந்த வழிபாட்டு முறைகளுக்கும் வேதகாலத்து வழிபாட்டு முறைகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உபநிடத காலத்திலே சமயக் கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. சங்ககாலத்திலே மதக் கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பல விடயங்கள் புதிதாக சேர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே காலத்திற்கு காலம் காலத்திற்கு ஏற்றாற்போல மீளாய்வு செய்யப்பட்டு வரும் சமயக்கருத்துக்கள் தற்போதைய காலத்திற்கு ஏற்றவகையிலும் மீளாய்வு செய்யப்பட்டு விஞ்ஞான மயப்படுத்தப்படுவது தவறான செயலாகாது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்